www.tamilarangam.net

සරිනිහර්
'SARINIHAR

# சரிநிகர்

சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

இதழ் 147 மே 28 - ஜூன் 10, 1998 விலை ரூபா 10.00

## சரோஜினி : இன்னொரு அரசியல் படுகொலை !

## அக்கரைப்பற்று : துப்பாக்கிகளால் எழுதப்படும் வரலாறு !

## மாகாண சபைத் தேர்தல் : கொழும்புத் தமிழர்களின் கோரிக்கை !

## மலையகம் : காட்டிக் கொடுக்கும் தொழிற் சங்கங்கள் !

## தமிழ் மக்களின் மீட்பர் யார் ?

-காமினி வியங்கொட

## போர்க்களத்தில் பெண்கள் !

-அஜித்தா கதிர்காமர்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ජාතීන් අතර යුක්තිය හා සමානත්වය සඳහා ව්‍යාපාරය
இனங்களுக்கிடையில் நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கம்
Movement for Inter Racial Justice and Equality

## சரோஜினி : இன்னொரு பலிக்கடா

17.05.1998 அன்று இனந்தெரியாத துப்பாக்கி நபர் ஒருவரால் யாழ்ப்பாண மேயர் திருமதி. சரோஜினி யோகேஸ்வரன், அவரது இல்லத்தில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டதை மேர்ஜ் அமைப்பு நேரடியாகக் கண்டிக்கின்றது.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான இவரது கணவரும் இதே விதமாகக் கொலையுண்ட போதிலும் பல்வேறு அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் கடந்த ஜனவரி மாதம் 29 ஆம் திகதி நடைபெற்ற யாழ். மாகாண சபைத் தேர்தலில் தோற்றிய இவர், தனது தேர்தல் பிரச்சாரங்களின் போது "யுத்தத்திற்குப் பதிலாக பேச்சுவார்த்தை மூலமான தீர்வையே பெரிதும் வலியுறுத்தினார். பேச்சுவார்த்தை மூலம் சமாதான நடவடிக்கைகளை மேற்கொண்டு வடக்கில் சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்துவதனூடாக, அம் மக்களின் அன்றாட வாழ்வை முடிந்த வரையில் வழமை நிலைக்குத் திருப்புவதே இவரது கனவாக இருந்தது.

ஆயுத அரசியலுக்குப் பதிலாக ஜனநாயக அரசியலை உறுதிப்படுத்துவதில் இவர் காட்டிய அக்கறையையும் துணிவையும் நாம் பெரிதும் போற்றுகின்றோம். அதேவேளை எண்ணங்களைப் நிறைவேற்றுவதற்காக தனிநபர் கொலைகளை நிறுத்திக் கொள்ளுமாறு இவரைப் படுகொலை செய்த வன்முறையாளர்களை நாம் கேட்டுக் கொள்கின்றோம்.

இந்நாட்டின் இனப்பிரச்சினைக்கு நியாயமான அரசியல்த் தீர்வொன்றைக் காண முடியாமையின் விளைவாக ஏற்பட்டுள்ள உயிரிழப்புக்களின் தொகை எண்ணற்றது. போருக்கு பதிலாக சமாதானத்தை வேண்டி நிற்போர் கூட தொடர்ச்சியாக போருக்கு இரையாகிக் கொண்டுள்ளமை இவ் வினப் பிரச்சினையானது எந்தளவிற்கு உக்கிரமடைந்துள்ளதென்பதை புலப்படுத்துவதாயுள்ளது.

நாளுக்கு நாள் கொடூரமடைந்து வரும் யுத்தத்திற்கு சமாதானமான அரசியல்த் தீர்வொன்றைத் தேடும் முயற்சியைத் துரிதப்படுத்த வேண்டுமென்பதையே சரோஜினி யோகேஸ்வரனின் இழப்பானது சுட்டி நிற்கின்றது. எனவே சமாதானத் தீர்விற்கான நடவடிக்கைகளை முடிந்த வரையில் துரிதப்படுத்துவதே இவருக்கு நாம் வழங்கும் கௌரவமாகுமென மேர்ஜ் அமைப்பு நம்புகின்றது.

## புத்தளம்: சண்டியன் நகரபிதா!

கடந்த 21ம் திகதி புத்தளம் நகர மண்டபத்தில் இடம்பெற்ற வடக்கிலிருந்து புலம்பெயர்ந்தவர்களின் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலின் போது அப்துல் கஹ்கார் என்ற நபர் நகரசபைத் தலைவரின் தாக்குதலுக்கிலக்காகியுள்ளார். இச்சம்பவம் பற்றி மேலும்தெரியவருவதாவது...

''இவ்வருடம்புனர்வாழ்வு அமைச்சினால் தளவசதிகள் வழங்குவது சம்பந்தமான கலந்துரையாடல்" எனும் தலைப்பில் புத்தளம் குடியேற்றக் கிராமங்களின் தலைவர்களுக்கு துறைமுக அபிவிருத்தி புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சின் பணிப்பாளர் எம்.எச். முயினுதீனால்சுற்று நிருபம் ஒன்று அனுப்பப்பட்டிருந்தது. அரசியல் பிரமுகர்கள், அமைச்சு அதிகாரிகள் பங்குகொள்ளும் இக்கலந்துரையாடலில் குடியேற்றக்கிராம தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோர்களைக் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டிருந்தது.

இதன்படி குறித்த தினத்தன்று இடம்பெற்ற நிகழ்வில் பலர் கலந்து கொண்டுள்ளனர். எனினும், அழைக்கப்பட்ட விடயத்தை விடுத்து கலந்துரையாடலை வேறுதிசைக்கு நகர்த்தியுள்ளனர் ஏற்பாட்டாளர்கள். 23ம் திகதி கொழும்பில் நடைபெறவிருக்கும் முஸ்லிம் காங்கிரஸ் மாநாட்டுக்கு உங்கள் கிராமங்களில் இருந்து எத்தனை பேர் வரப்போகிறீர்கள் என்ற கேள்வியுடன் கலந்துரையாடல் திசைதிருப்பப்பட்டிருச்கிறது. இதற்காகத்தான் எம்மை அழைத்துள்ளார்கள் என்பதை உடனே புரிந்துகொண்ட சிலர் சுற்று நிருபத்தில் போடப்பட்டுள்ள தலைப்பைப் பேசுவோம் என்று கோரியுள்ளனர். இதை மறுதலித்த நகரசபைத் தலைவர் பாயிஸ் (முஸ்லிம் காங்கிரஸ்) 'இதைத் தான் பேசுவோம், விருப்பமில்லாதவர்கள் வெளியே போகலாம்' என்று காரமாகத் தெரிவித்துள்ளார். இதன் போது சிலர் வெளியேறியுள்ளனர். அத்துடன் புனர்வாழ்வு தொடர்பாகவும் அத்தியாவசிய சேவைகள் திணைக்களத்தின் சுற்று நிருபம் தொடர்பாகவும், கேள்வியும் எழுப்பியுள்ளனர். இதனால் அங்கு சலசலப்பும், வாய்த்தர்க்கமும் ஏற்பட கோபமுற்ற நகர'பிதா' பாயிஸ் அப்துல் கஹ்கார் என்பவரைத் தாக்கி வாயில் காயமேற்படுத்தி தன் அதிகாரச் சண்டித்தனத்தைக் காட்டியுள்ளார். தாக்குதலுக்கிலக்காகிய நபர் கற்பிட்டி வைத்தியசாலையில் மருத்துவ பரிசோதனைக்குட்படுத்தப்பட்டதோடு, இது தொடர்பான முறைப்பாட்டைபுத்தளம் பொலிசிலும், (இல. 317) கற்பிட்டிப் பொலிசிலும்செய்துள்ளார்.

எனினும், இதற்குரிய நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்பட்டதாக இச்செய்தி எழுதும் வரை தெரியவில்லை. தன் அரசியல் செல்வாக்கினாலும், அதிகாரத்தாலும் இதனை மூடிமறைத்துவிடக் கூடியவர் அவர் என மக்கள்பிரதிநிதியைப் பற்றி பலர் கதைத்துக் கொள்கிறார்கள். அத்துடன்கட்சி மாநாட்டுக்கு இப்படித்தான் ஆட்களை ஏமாற்றிக்கூட்டிச்செல்கிறார்கள் என்ற அபிப்பிராயமும் மேலெழும்பத் தொடங்கியுள்ளது. இச்சம்பவத்தின் விளைவாகவோ என்னவோ முகாம்களுக்கு ஆட்கள் ஏற்றிவர அனுப்பப்பட்ட பஸ்கள்வெறுமையாக வந்துள்ளன.

மக்களுடன்அதுவும்புலம்பெயர்ந்து வந்து தஞ்சம் புகுந்திருக்கும் மக்களுடன் இவ்வாறு சண்டித்தனமாக நடந்து கொள்வது ஒரு நகரபிதாவுக்கு உரித்தான செயலல்ல. இது பற்றி உரிய நடவடிக்கைகள் முஸ்லிம் காங்கிரஸ் தலைமைப் பீடத்தால் எடுக்கப்பட வேண்டும். ஏனெனில், இது கட்சிக்கும் இழுக்கான ஒரு செயலாகும். அத்துடன், மக்கள் நல்லபிப்பிராயம் வைத்திருக்கும் பணிப்பாளர் முயினுதீனும் கட்சிக் கூத்துக்குப் பலியாகியிருப்பது விசனத்துக்குரியது எனவும் பலர் அபிப்பிராயப்பட்டுகின்றனர்.

இது தொடர்பில் சம்பந்தப்பட்டவர்கள் என்ன சொல்லப் போகிறார்கள்?

சு

## திருமலை: கப்பல் எங்கே?

திருகோணமலை உப்புவெளி கண்ணாடித் தொழிற்சாலை அகதிமுகாமில் தங்கியிருந்த மக்கள் தங்களைச் சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கக் கோரி 22.05.98ல் திடுதிப்பென்று உண்ணாவிரதத்தை மேற்கொண்டனர்.

160 பேரைக் கொண்ட முகாம் பிரதான வாயில், உண்ணாவிரதிகளால் இருந்து மூடப்பட்டு பூட்டுப்போடப் பட்டது. முகாமுக்குப் பொறுப்பான அதிகாரிகூட உள்ளே செல்ல அனுமதிக்கப்படவில்லை. முகாமுள் நிறுத்தப்பட்டிருந்த தண்ணீர் பவுசரும் வெளியே கொண்டு வர அனுமதி மறுக்கப்பட்டது.

இந்த மக்கள் குடாநாட்டைச் சேர்ந்தவர்கள். பல அல்லல்களின் பின் பேசாலை அகதிமுகாமுக்கு வந்து சேர்ந்தனர். அங்கே நான்கு மாதங்களைக் கழித்த நிலையில் கடந்த மாதம் கப்பலில் யாழ்ப்பாணம் அனுப்பிவைக்கப் படுவார்கள் என்ற உறுதிமொழியின் பேரில் திருகோணமலைக்குக் கொண்டு வரப்பட்டிருந்தனர். தடுப்பு முகாம்களிலிருந்து விடுதலையாகி வந்த சில இளைஞர்களும் இவர்களில் அடங்குவர்.

எங்களுக்குச் சம்பிரதாயபூர்வமாக மூன்று வேளைக்கு உணவு தரப்படுகிறது. இது அடிப்படை வாழ்க்கைக்குப் போதுமானதா? நோயாளிகளைப் பராமரிக்கவோ, மருந்துச் செலவுக்கோ எங்களிடம் பணம் இல்லை. தேநீர் அருந்துவதற்குக் கூடப் பணமில்லை. குழந்தைகள் விரும்பிக்கேட்டும் விலைகுறைந்த உணவைக் கூட வாங்கிக் கொடுக்க வகையின்றித் தவிக்கிறோம். இது நரக வேதனை இல்லையா...'' என்று அவர்கள் குமுறுகிறார்கள். ''எங்களை எங்கள் சொந்த இடத்தில் கொண்டுபோய் விடுங்கள். நாங்கள் பிழைத்துக்கொள்வோம் அடிமைகள் போல வாழ முடியாது'' என்பதே இவர்களது கோரிக்கையாக இருக்கிறது.

முகாம் பொறுப்பாளர் மயில்வாகனம் அவர்கள் இதுபற்றிக் கூறுகையில், ''நாங்கள் அவர்கள் துன்பத்தை உணராதவர்கள் அல்லர். அவர்கள் விரைவில் சொந்த இடம் திரும்ப வேண்டும் என நானும் கூடப் பிரார்த்திக்கிறேன்'' என்றார் கவலை தோய்ந்த முகத்துடன்.

போக்குவரத்துக்குக் கப்பல் வசதி இல்லாததால் தான் இந்தச் சிக்கல். மே 30, ஜூன் 2 ஆகிய திகதிகளில் கப்பல் புறப்பட உள்ளதாக முகாமின் விளம்பரப் பலகையில் குறிப்பிடப் பட்டுள்ளது. ஆனால் மக்களோ இது நம்பிக்கையற்றது என்கிறார்கள்.

எனினும் கொழும்பு சென்றிருந்த திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேசச்சபைச் செயலர் வி. வேலும் மயிலும் விடயத்தை அறிந்ததும் கட்டாயம் கப்பல், குறிப்பிட்ட திகதிகளில் உங்களை ஏற்றிச் செல்லும் என்று கொழும்பிலிருந்து உறுதி மொழிவழங்கியதற்கிணங்க மத்தியானத்துடன் உண்ணாநோன்பு கைவிடப் பட்டது.

**விவேகி**

## சபாஷ் தலுவத்தை!

சொன்னாலும் சொன்னார் தலுவத்தை. எவ்வளவு சரியாக இவ் அரசின் உண்மையான திட்டத்தைச் சொன்னார். அரசின் தீர்வுப்பொதி புலிகளைத் தோற்கடித்த பின் தேவையற்றதாகி விடும் என்றார். சிங்களப் பத்திரிகை ஒன்றின் பேட்டியின் போது கூறிய அவரின் பதிலிற்கு இன்று வரை அரசு உத்தியோகபூர்வமாக மறுப்புத் தெரிவிக்கவில்லை என்பது கவனிக்க வேண்டிய விடயம். சமாதானத்திற்கான போரில் புலிகள் தோற்கடிக்கப்பட்ட பின் அரசியல் தீர்வு தேவையற்றதெனில், இவ் அரசு தீர்வு பற்றி இன்று வரை பேசிவருவது புலிகளின் சக்தியைப் பார்த்தும், அவர்களின் தமிழ் மக்களின் உரிமைகள் பற்றிய விடயத்தில் உள்ள மறுக்க முடியாத உறுதியைப் பார்த்தும் தான். அது இல்லாதொழிக்கப்படின் இதே அரசியலமைப்பினூடாக அடக்கு முறைகளும், பாரபட்சங்களும் மேலும் மேலும் தொடரும் என்பது தானே உண்மை. ஆக இவ் அரசு இவ் யுத்தத்தை நடாத்துவதன் பிரதான நோக்கம் புலிகளை அழிப்பது அல்ல, அதனூடாக தமிழ் மக்கள் மீது அடக்கு முறைகளை ஏவிவிடவே என்பது புலனாகிறது. இது ஏற்கெனவே தெரிந்த விடயம்தான். ஆயினும் இதை இவ்வளவு வெளிப்படையாக அரசின் இராணுவத் தளபதி கூறியிருப்பது தான் முக்கிய விடயம். இவ்வளவு காலம் அரசின் கட்டுப்பாட்டில் உள்ள தமிழ்ப் பகுதிகளில் சிவில் நிர்வாகம், மற்றும் சகல விடயங்களையும் இராணுவம் தான் தீர்மானிக்கிறது. இதன் வளர்ச்சிப் போக்காக இப்போது முழு நாட்டின் அரசியல் தீர்மானங்களைக் கூட இராணுவமே எடுக்க முனைவதன் அடையாளமே இது. இராணுவத்தின் நோக்கமும் அரசின் நோக்கமும் தமிழ் மக்களை அடக்கி ஒடுக்கி விடுவது எனும் விடயத்தில் ஒத்துப்போவதால் தான் இது சாத்தியமாகிறது. ஏனெனில், இங்கு என்ன பிரச்சினை என்றாலும் யுத்தத்தைத் தான் அரசு ஏதோ ஒரு வழியில் காரணம் காட்டுகிறது. அதுவே, யுத்தத்தை சரியாக (?) நடாத்துவது இதன் தலையாய கடமை என நினைக்கிறது. யார் கண்டது... இது முடிவில் முழு நாட்டையுமே இராணுவ ''ஜனநாயக'' ஆட்சிக்குள் வைத்திருக்க முயன்றாலும் ஆச்சரியமில்லை. தலுவத்தையின் பேட்டியும் இதைத்தான் வெளிப்படுத்துகிறது.

## அக்கரைப்பற்று: புலிகள் அதே புலிகள்!

எப்போது எல்லாம் புலிகள் வடக்கில் இருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களின் விடயம் பற்றி சாதகமாக கதைக்கிறார்களோ அப்போதெல்லாம் முஸ்லிம்கள் மீது தமது மேலாதிக்க போக்கையும், அச்சுறுத்தலையும் காட்டி வந்திருக்கிறார்கள். இதன் வரிசையில்தான் அண்மையில் நடந்த அக்கரைப்பற்று விவகாரமும் இடம்பெறுகிறது. உண்மையில் பள்ளிவாசலிற்குள் வைத்து ஒரு முஸ்லிம் பொலிஸ்காரரை கொல்ல வேண்டிய அவசியம் ஏன் வந்தது? அவர் அரச படையில் அங்கம் வகித்தாலும் கூட அவர் மீதான தாக்குதலிற்கு பள்ளிவாசலை தேர்ந்தெடுப்பதில் இருந்து எப்பவுமே முஸ்லிம் மக்கள் மீது தம் ஆதிக்கத்தை வைத்திருக்கும் முயற்சியாகவே இது இனங் காணப்படுகின்றது. அன்று அவரைக் கொல்லாமல் விட்டிருந்தால் கூட இராணுவ, அரசியல் ரீதியில் புலிகளிற்கு எவ்வித பாதிப்பும் வந்திருக்கப் போவதில்லை. புலிகள் அவரைத் துரத்தி வந்ததாகவும், அவர் பள்ளிவாசலிற்குள் ஒளிய ஓடியமையால் தான் அதனுள் வைத்து சுட வேண்டி வந்ததாகவும், அவர் தொழுகையில் ஈடுபடவில்லையென்றும் தினமுரசு (இதழ் 258) தகவல் சொல்கிறது. உண்மை அப்படி இருந்தால் கூட புலிகள் தமது உறுப்பினர்களுக்கு இத்தகைய சந்தர்ப்பங்களில் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என கட்டாயம் அறிவூட்டியிருக்க வேண்டும். அதுவும் தமிழ் - முஸ்லிம்கள் இன்னும் ஒருவர் மீது ஒருவர் அவநம்பிக்கை வைத்திருக்கும் வேளையில் இத்தகைய அறிவூட்டல்கள் கண்டிப்பாகத் தேவை. புலிகள் இதில் காட்டும் அலட்சியம் முஸ்லிம் மக்கள் மீதான தமது முன்னைய கொடூர அடக்குமுறை குணம் மாறவில்லை என்பதையே காட்டுகிறது. ஒரு பேரினவாத அரசின் கடும் அடக்கு முறைகளிற்கு முகம்கொடுக்கும் ஒரு தேசிய இனம் இன்னொரு தேசிய இனத்தின் மீது விடுதலையின் பேரால் அடக்குமுறைகளை பிரயோகிப்பது எப்படி ஏற்றுக்கொள்வது? இவ்வாறு செய்வதால் ஒரு போதுமே அவ் இனம் விடுதலை அடையப்போவதில்லை. இன்னொரு விடயமும் முக்கியமானது. அரசுடன் சோரம் போவதையே தன் வழக்காகிவிட்ட முஸ்லிம் தலைமையும் இம்மக்களின் அரசியல் உரிமைக்காக என்ன செய்யப்போகின்றது என்பதும், ஏனெனில் சிங்கள அரசுகளின் முஸ்லிம் மக்கள் மீதான அரசியல் ரீதியான பாரபட்சங்களை, அடக்கு முறைகளைக் கண்டும் காணாது இருக்கும் இத் தலைமைகள் நாளை புலிகளுடனும் கூட்டுச் சேர்ந்து இதேபோக்கை கையாளமாட்டாது என்பதற்கு என்ன உத்தரவாதம்? முஸ்லிம் மக்கள் இன்னும் கூட அரசியல் அநாதைகளாகவே உள்ளனர் என்பதுதான் உண்மையான நிலைமை...!

• கா.சூ.ந்ரசி

## யாழ்.செய்திகள்

அண்மையில் வடமராட்சிக் கிழக்குப் பகுதியிலிருந்து நெல் ஏற்றிவந்த வண்டில்காரர் ஒருவரை வல்லிபுரக்கோவில் சோதனைச் சாவடியில் மறித்த இராணுவத்தினர், நெல்லை நிலத்தில் கொட்டச் சொல்லிச் சொல்ல, மாட்டு வண்டி உரிமையாளர் சாப்பாட்டுப் பொருளை நிலத்தில் கொட்டுவதா என்று கேட்டாராம். உடனே சோதனைச் சாவடியில் இருந்த சிப்பாய் மாட்டுவண்டிக்காரரை தலைகீழாக நிற்குமாறு உத்தரவிட்டார். மாட்டு வண்டிக்காரர் தலைகீழாக நிற்க அவ்வழியால் வந்த இராணுவ அதிகாரி ஏன் தலைகீழாக நிற்கிறாய் என்று கேட்டதற்கு சேர்தான் நிற்கச்சொன்னார் என வண்டிக்காரர் பதிலளித்தார். உடனே இராணுவ அதிகாரி மாட்டுவண்டிக்காரரை போகச்சொல்லிவிட்டார். அப்போது சிப்பாய் மாட்டுவண்டிக்காரரின் அருகில் வந்து, இப்போது போ திரும்பி வரும்போது கவனித்துக் கொள்கிறேன் என்றாராம்.

---

அண்மையில் யாழ் அரசாங்க அதிபர், திட்டமிடல் செயலக திறப்பு விழாவில் உரையாற்றுகையில் பின்வருமாறு சொன்னார். வழமையாக அரச அதிகாரிகள் அரசாங்கத்தின் உத்தரவுகளைத்தான் தமது அதிகாரிகளுக்கு அனுப்புவது வழக்கம். நான் இப்போது இராணுவத்தினரின் உத்தரவை உங்களுக்குச் சொல்லப்போகிறேன். நீங்கள் யாராவது புங்குடுதீவுக்குச்சென்று புலிகளைச் சந்தித்தால் அல்லது புலிகளுக்கு உதவி செய்தால் உங்களுக்கு 17 வருடம் சிறைத்தண்டனை வழங்கப்படும் என இராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர் என்றாராம்.

www.tamilarangam.net



## எழுப்பப்படாத கேள்விகளும் அளிக்கப்படாத பதில்களும்

# அக்கரைப்பற்று பள்ளிவாசல் கொலை:

# துப்பாக்கிகள் எழுதும் வரலாறு!

துப்பாக்கிகள் வரலாற்றை எழுதும் ஒரு கால கட்டத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். போர்க் கலாசாரம் அனைத்து வகையான அதிர்ச்சியூட்டும் பரிசோதனை முயற்சிகளையும் இங்கு மேற்கொண்டு விட்டது. கசப்பான வரலாற்று நிகழ்வுகள் மீளவும் உயிர்பெறக்கூடாது என மனிதத்தின் மீது மதிப்புணர்வு கொண்ட ஒவ்வொரு ஆத்மாவும், ஆழ்ந்து விரும்புகிறது. எனினும், இங்கு உள்ளத்தைக் காயப்படுத்தும் வரலாறுகளே மீளவும் எழுதப்படுகிறது. ஆங்கிலத்தில் இதனை History Repeats என்பார்கள்.

கடந்த 14.05.98 அன்று அக்கரைப்பற்று பிரதான வீதியில் அமைந்துள்ள மஸ்ஜிதுல் ஹுதா (மார்க்கஸ்) பள்ளிவாசல்களில் நிகழ்ந்த படுகொலையானது முஸ்லிம்கள் மத்தியில் பரவலாக அதிர்ச்சியையே ஏற்படுத்தியுள்ளது. பள்ளிவாசலில் தொழுது கொண்டிருக்கையில் ஒரு முஸ்லிம் பொலிஸ் உத்தியோகத்தர் சுட்டுக் கொல்லப்பட்டதும், மூவர் காயத்திற்குள்ளானதும், வெறுமனே ஒரு 'சம்பவம்' அல்ல. இது முஸ்லிம்களது மத தனித்துவத்தையும், அடிப்படை உணர்வுகளையும் கொச்சைப்படுத்தும் வரலாற்றுத் துரோகமாகும். ஒரு வணக்கஸ்தலத்தில் வழிபாட்டில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் எவர் மீதும் தாக்குதல் தொடுப்பது மிகப் பாரதூரமான குற்றமாகும்.

இலங்கை முஸ்லிம்களது சமீபகால வரலாற்றில் தொடர்ச்சியாக நிகழ்ந்து வரும் பள்ளிவாசல் படுகொலைகள் தற்செயல் நிகழ்வுகள் அல்ல. இதன் பின்னணியில் நன்கு திட்டமிட்டு செயற்படும் மறை கரங்கள் இயங்குவது தெளிவாகத் தெரிகிறது. இதுவரை நான்கு பள்ளிவாசல் படுகொலைகள் நிகழ்ந்துள்ளன. இதில் மூன்று தமிழீழ விடுதலைப் புலிகளாலும் ஒன்று அரச படைகளினாலும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. முஸ்லிம்களது பாதுகாப்பிற்கான உத்தரவாதத்தை அரச படைகளோ அல்லது புலிகளோ தரப்போவதில்லை என்பதையே இது உணர்த்துகிறது. இவ்வாறான ஒரு முடிவு மிக அவசரப்பட்டு எடுக்கப்பட்டது அல்ல. கடந்த காலத்தின் கசப்பான அனுபவங்கள் இவ்வாறான ஒரு முடிவுக்கு வருவதற்கு எங்களை நிர்ப்பந்தித்துள்ளன என்பதே அடிப்படை உண்மையாகும்.

1976ல் புத்தளம் பள்ளிவாசலில் இடம்பெற்ற முதலாவது பள்ளிவாசல் படுகொலையை அரச படையினரே தொடக்கி வைத்தனர். இதன் பின்னர் 1990 ஒகஸ்ட் 03ம் திகதி காத்தான்குடி மீரா ஜும்மா பள்ளிவாசலிலும், ஹுசைனியா தக்கியாவிலும், இஷா தொழுகையை நிறைவேற்றிக் கொண்டிருந்த 125 முஸ்லிம்கள் புலிகளால் படுகொலை செய்யப்பட்டனர். மிகக் கோரமானதும், மனிதாபிமானமற்றதுமான இச்சம்பவமே இதுவரை மேற்கொள்ளப்பட்ட பள்ளிவாசல் படுகொலைகளிலேயே மிகப் பாரதூரமானது. இன்று வரை இந்தக் கசப்பான அனுபவம் முஸ்லிம்களது ஆன்மாவை மிகக்கடுமையாக பாதித்திருக்கிறது.

காத்தான்குடி பள்ளிவாசல் படுகொலை நிகழ்ந்து சரியாக பத்து நாட்களின் பின் 13.03.90 அன்று அக்கரைப்பற்று ஜும்மா பெரிய பள்ளிவாசலில் நிகழ்ந்த சம்பவத்தில் ஒருவர் கொல்லப்பட்டதோடு பலர் காயத்துக்குள்ளாயினர். பாங்கு சொல்லி சிறிது நேரத்தின் பின்னர் தன்னியக்கத் துப்பாக்கிகளாலும், கிரனைட்களாலும் தாக்குதல் நடாத்தப்பட்டது. காத்தான்குடி பள்ளிவாசல் சம்பவத்தால் அச்சமுற்ற பள்ளிவாசல் நிர்வாகத்தினர் தொழுகையை மேல் மாடியில் நடாத்த ஏற்பாடு செய்திருந்தனர். இதனால் பாரியதொரு படுகொலை அன்று தவிர்க்கப்பட்டது.

இச்சம்பவம் நிகழ்ந்து ஏறத்தாழ எட்டு வருடங்களின் பின் அக்கரைப்பற்றில் இரண்டாவது தடவையாகவும் புலிகள் பள்ளிவாசலில் தொழுது கொண்டிருந்த ஒருவரை சுட்டுக்கொன்றுள்ளனர். கொல்லப்பட்டவர் ஒரு பொலிஸ் உத்தியோகத்தர் என்பதும், பொலிசாரை புலிகள் எதிரிகளாகக் கருதுகிறார்கள் என்பதும் நன்கு தெரிந்த விடயம்தான். எனினும், ஒரு வணக்கஸ்தலத்தில் நுழைந்து தொழுகையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் ஒருவரைக் கொல்வதற்கு - அவர் பொலிஸ் உத்தியோகஸ்தராக இருந்தாலும் கூட - இந்த நியாயங்கள் எந்த அடிப்படையில் ஏற்புடையது? இது யுத்த தர்மத்தை மீறும் ஒரு செயல் என்பதை விடவும், மக்களது அடிப்படை உரிமையான வழிபடும் சுதந்திரத்தை மதிக்காத செயல் என்பதே ஒவ்வொரு முஸ்லிமினதும் மனதை ஆழமாகப் பாதிக்கிறது. இதனால் தான், இந்தச் சம்பவத்தைக் கண்டித்து அம்பாறை மாவட்டத்தில் எல்லா முஸ்லிம் ஊர்களிலும் மட்டக்களப்பு மாவட்டத்தில் சில இடங்களிலும் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மறுநாள் வெளியான பத்திரிகைகள் முக்கியத்துவம் கொடுத்து செய்திகள் வெளியிட்டிருந்தன. எனினும், 24.-30 - மே 1998 ஆந் திகதிய தினமுரசு இச்சம்பவம் தொடர்பாக மிகத்தவறான செய்திகளை வெளியிட்டுள்ளது. மேற்படி சம்பவம் தொடர்பாக திரிபான செய்திகளே வெளியாகியிருந்ததாகவும், புலிகள் அரச படைகளில் பணியாற்றுவோருக்கு தண்டனை வழங்கப்படும் என இச்சம்பவத்திற்கு சில நாட்களுக்கு முன் அறிவித்திருந்ததாகவும், அதன் பின்னரே அக்கரைப்பற்றில் குறிப்பிட்ட பொலிஸ் உத்தியோகத்தர் மீது குறிவைத்ததாகவும் அது குறிப்பிட்டிருந்தது. தன்னைச் சுடவருகிறவர்கள் புலிகள் என்பது தெரிந்ததும் பள்ளிவாசலை நோக்கி அவர் ஓடியதாகவும், அவரைத் துரத்திச்சென்றே புலிகள் சுட்டதாகவும் அது மேலும் குறிப்பிட்டுள்ளது.

அக்கரைப்பற்று சம்பவம் நிகழ்ந்த அதே தினம் கல்முனைக்குடி பள்ளிவாசலில் அமைந் திருந்த மின்மாற்றி தகர்க்கப்பட்ட சம்பவத்தில் பள்ளிக்கு வந்திருந்த சிலர் காயத்திற்குள்ளாகினர். இது அக்கரைப்பற்று சம்பவத்தைக் கேள்வியுற்ற சிலர் இனக்கலவரத்தைத் தூண்ட மேற்கொண்ட ஒரு நடவடிக்கையே அன்றி புலிகள் செய்தது அல்ல என்றும் தினமுரசு உண்மையை திரித்து வெளியிட்டுள்ளது. இதன் பின்னணியில் அரசியல் சக்திகள் இருந்ததாகவும், அது மேலும் தெரிவித்துள்ளது.

இவை அப்பட்டமான பொய்களே ஆகும். ஏனெனில், கொல்லப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர் தொழுது கொண்டிருந்த போதுதான் சுடப்பட்டார் என்பதற்கு மிக உறுதியான ஆதாரங்கள் உள்ளன. குறித்த பள்ளிவாசலுக்கு அருகிலுள்ள தொலை தொடர்பு பரிவர்த்தனை நிலையத்தைத் தாக்குவதற்கே புலிகள் வந்ததாகவும் தற்செயலாகவே தொழுது கொண்டிருந்த பொலிசாரைக் கண்டதும், அவரைச் சுட்டுக் கொன்றதாகவும் கூட சில தவறான செய்திகள் அடிபடுகின்றன. ஆனால், உண்மை அதற்கு நேர்மாறானது.

→4

## தினமுரசின் செய்தித் திரிப்பு!


குண்டு எறிந்தது யார்?
மக்கள் மத்தியில் கேள்விக்குறி
இறுதி அஞ்சலியில் சலசலப்பு - நிருபரை மாட்டிவிட்டனர்

## தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு முஸ்லிம் மக்களின் பகிரங்க வேண்டுகோள்!

தமிழ் மக்களின் தேசிய உரிமைப் போராட்டத்தை தலைமையேற்று வழி நடாத்தி வரும் தமிழீழ விடுதலைப் புலிகள் - வடக்கு கிழக்கில் வாழும் மற்றொரு இனமான முஸ்லிம்களின் அடிப்படை மத, இன தனித்துவ உரிமைகளை மதிக்காது, அவ்வடிப்படைகளை உதாசீனம் செய்து, முஸ்லிம்கள் தொடர்பான விடயத்தில் வரலாற்றில் ஏலவே பல துயரமான கண்டிக்கத்தக்க தவறுகளை இழைத்து, முஸ்லிம்களின் இருப்பின் மீதும் முஸ்லிம்களின் மதத் தனித்துவத்தின் மீதும் என்றும் மாறாத வடுக்களை பதித்து விட்டிருக்கிறீர்கள்.

1990ஆம் ஆண்டு வடக்கு கிழக்கு வாழ் முஸ்லிம்களின் வாழ்வின் மீதும் அம்மக்களின் அடிப்படைச் சுதந்திரத்தின் மீதும் உங்கள் விடுதலைத் துப்பாக்கிகள் திருப்பப்பட்டு யாழ்ப்பாணம் தொடக்கம் பொத்துவில் வரை ''முஸ்லிம்'' என்ற மத அடையாளத்திற்காகப் படுகொலை செய்யப்பட்டும், தாங்கள் பாரம்பரியமாக வாழ்ந்து வந்த மண்ணிலிருந்து துரத்தியும் அடித்தீர்கள்.

காத்தான்குடியில் மஸ்ஜிதுல் மீரானியா, மஸ்ஜிதுல் ஹுசைனியா பள்ளிவாசல்களில் இறைவனைத் தொழுது கொண்டிருந்த 125 முஸ்லிம்களைப் படுகொலை செய்தீர்கள். மக்காவிலிருந்து புனித ஹஜ் யாத்திரையை முடித்துக் கொண்டு நாடு திரும்பிய 65 முஸ்லிம்களைச் செட்டிப்பாளையத்தில் வைத்துப் படுகொலை செய்தீர்கள். ஏறாவூரில் நள்ளிரவில் உறங்கிக் கொண்டிருந்த முஸ்லிம்கள் 200 பேரைப் படுகொலை செய்தீர்கள். கிண்ணியா, மூதூர், ஓட்டமாவடி, கல்முனை, சம்மாந்துறை, ஒலுவில், அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று, பொத்துவில் கிராமங்களைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான முஸ்லிம்களைக் கொன்றொழித்தீர்கள். வடக்கில் வாழ்ந்து கொண்டிருந்த 60 ஆயிரம் பேரை ஒரே இரவில் உடுத்த உடையுடன் துரத்தியடித்தீர்கள். அந்த இருண்ட 90ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளின் முஸ்லிம்களுக்கெதிரான இராணுவ, அரசியல் கொள்கைகள், முஸ்லிம்களை வேரோடு வடக்கு கிழக்கில் அழிப்பதையே சித்தாந்தமாக்கிவிட்டிருந்தது, அந்த 90களின் இரத்தமும், கண்ணீரும் ஆதிக்கம் செலுத்திய கொடூரமிக்க பொழுதுகளை எந்த முஸ்லிமும் இன்னும் மறந்து விடவில்லை

இருந்தும் காலமாற்றத்தின் ஊடே உங்கள் இராணுவத் தலைமை முஸ்லிம்கள் தொடர்பாகத் தங்களுடைய நிலைப்பாடு தவறானது என்பதைச் சர்வதேச சமூகத்தின் முன் ஏற்றுக்கொண்டதுடன் அவ்வாறான தவறுகள் இனிமேலும் நடைபெறாது என வாக்குறுதியளித்திருந்தீர்கள். விடுதலைப் புலிகளின் இரண்டாவது தலைமையில் இருந்த இன விரோதம் கொண்ட கரிகாலன், கருணா போன்றவர்களின் தவறான, எதேச்சாதிகாரமான முடிவுகளினால்தான் முஸ்லிம்களின் இரத்தம் சிந்தப்பட்டது என்பதை நீங்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறீர்கள்.

தவறு, திருத்துகிறோம் என நீங்கள் அளித்த அவ்வாக்குறுதி இன்று மீறப்பட்டு வருவதை உங்களுக்குச் சுட்டிக்காட்டுவது அவசியமாகப்படுகிறது. 90களின் கொடுமை மிக்க பொழுதுகள் மீண்டும் வந்து விடுமா என ஒவ்வொரு முஸ்லிமின் மனதும் கேள்வி எழுப்பிக் கொண்டிக்கிறது. விடுதலைப் புலிகளின் உரிமைப் போராட்டத்திற்கு எதிராக இல்லாத நாம் - விடுதலைப் புலிகளின் முஸ்லிம்கள் தொடர்பான அடிப்படை மீறல்களை வெளிப்படுத்துவதற்கான தார்மீக உரிமையைக் கொண்டிருக்கிறோம்.

அரச படைகளில் பங்காற்றும் முஸ்லிம்கள் தொடர்பாய் உங்கள் நிலைப்பாடு 90களில், கல்முனை, சம்மாந்துறை, அக்கரைப்பற்று பொலிஸ் நிலையங்களில் கடமையாற்றிய 250க்கும் மேற்பட்ட முஸ்லிம், தமிழ் பொலிஸ்காரர்களைச் சிறைப்பிடித்த நீங்கள் - பொலிசில் பங்காற்றிய 50க்கும் மேற்பட்ட தமிழர்களை விடுதலை செய்து விட்டு, 200 முஸ்லிம் பொலிஸ்காரர்களைச் சுட்டுக் கொன்றதில் இருந்து கேள்விக்குட்படுத்தப்பட்ட ஒன்றாகிறது.

14.05.1998 ஆம் திகதி வெள்ளி இரவு அக்கரைப்பற்று, கல்முனை பிரதான வீதியில் அமைந்துள்ள ''மார்க்கஸ்'' பள்ளிவாசலினுள் புகுந்து இறைவனைத் தொழுது கொண்டிருந்த ஒரு முஸ்லிம் பொலிஸ்காரரை சுட்டுக் கொன்றதும் தொழுது கொண்டிருந்த 3 முஸ்லிம் பொது மக்களைச் சுட்டுக் காயப்படுத்தியதுமான செயற்பாடானது அடிப்படையில் முஸ்லிம்களின் மதத் தனித்துவத்தை மதிக்காத ஒரு இராணுவச் செயற்பாடாகும்.

பொலிஸ்காரர் என்பது உங்கள் இலக்காக இருக்கலாம், எங்கள் அடிப்படைப் பிரச்சினை, அது இறை இல்லம் என்பதே ஆகும். இந்த அத்துமீறல் ஒவ்வொரு முஸ்லிமின் ஆத்மாவையும் காயப்படுத்திவிட்டிருக்கிறது. பள்ளிவாசல்களுக்குள் அமைந்துள்ள மின்மாற்றிகளை நீங்கள் தொடர்ந்தும் தகர்த்து வருகிறீர்கள். (கல்முனைக்குடிப் பள்ளிவாசலுக்குள் இருந்த மின்மாற்றி, அக்கரைப்பற்று மாவடிச்சந்திப் பள்ளியில் இருந்த மின்மாற்றி - ஏறாவூர், காத்தான்குடிப் பள்ளிவளவுகளுக்குள் இருந்த மின்மாற்றி) இச்செயற்பாடுகள் முஸ்லிம்களின் அடிப்படை மத்தியஸ்தலாமக விளங்கும் பள்ளிவாசல்களைத் தகர்ப்பதற்குச் சமனானதே! நவாலி தேவாலயத்தில் குண்டு போடப்பட்டது உங்களை எவ்வளவு காயப்படுத்தியதோ - அதற்குச் சமமானதே உங்களின் இந்த நடவடிக்கைகளும்.

கடந்த வாரம் விடுதலைப் புலிகளின் தலைமையைச் சந்திப்பதற்கு உங்கள் தலைமையகத்திற்கு வந்திருந்த UNO வின் விசேட பிரதிநிதி ஒலாரா ஒட்டுண்ணுவிடம் முஸ்லிம்களின் இருப்பும், பாதுகாப்பும் தொடர்பான உத்தரவாதத்தை அளித்திருந்தீர்கள். அவ் உத்தரவாதம் மீறப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதே முக்கியமானது.

உங்கள் இராணுவ நடமாட்டத்தையும், செயற்பாட்டையும் முஸ்லிம் கிராமங்களில் நீங்கள் மீண்டும் ஆரம்பித்திருப்பதானது முஸ்லிம் கிராமங்களை மிகவும் ஆபத்தான நிலைமைக்குத் தள்ளியுள்ளது. எப்போது, எங்கே எது நடக்குமென்ற அச்சமும், பீதியும், கலவரமும் அனைத்து முஸ்லிம் கிராமங்களிலும் இன்று ஏற்பட்டுள்ளது. இந்நிலைமையானது தமிழ், முஸ்லிம் மக்களிடையே இன்று வளர்ந்து வரும் இன உறவை, தவறான சக்திகள் அரசியல் இலாபத்திற்காகப் பயன்படுத்தக் கூடிய சந்தர்ப்பத்தை ஏற்படுத்த விடுதலைப் புலிகளாகிய நீங்கள் வழிவகுத்து விடாதீர்கள்!

கடந்த கால வரலாறுகளில் இருந்து பாடம் கற்ற இரு இனங்களாகிய தமிழர்களும், முஸ்லிம்களும் அக் கறை படிந்த வரலாற்றை மீள உயிர்ப்பிக்க எடுக்கப்படும் ஆரம்பச் சூழ்நிலைகளை - சரியான புரிதல்களோடு இனம் கண்டு - அச்சூழலுக்கு எதிராகச் செயற்படுவது இன்றைய உடனடித் தேவையாகும்.

விடுதலைப் புலிகளாகிய நீங்கள் வடக்கு கிழக்கில் வாழும் தமிழ் மக்களுக்கு என்னென்ன அடிப்படை உரிமைகள், சுதந்திரத்தை வேண்டிப் போராடுகிறீர்களோ - அவ்வுரிமைகள் வடக்கு கிழக்கில் வாழும் முஸ்லிம்களுக்கும் உரியது என்பதை உணர்தலே வடக்கு, கிழக்கில் வாழும் தமிழ் முஸ்லிம் மக்களின் எதிர்காலம் சுபீட்சமிக்கதாக அமைவதற்கு அடிப்படையாகும் என்பதை ஏற்றுக்கொள்வதே உடனடியாகச் செய்யப்பட வேண்டியதாகும்.


(துண்டுப் பிரசுரம்)

*முஸ்லிம் மக்கள் முன்னணி 16.5.98*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





## "அந்த நம்பிக்கை தான் நம்மையெல்லாம்...!"

இந்திய அணுக்குண்டுப் பரிசோதனை முழு உலகத்தையும் ஒரு கலக்குக் கலக்கி விட்டது. அணு குண்டுப் பரிசோதனையில் இந்தியா ஈடுபட்டதை முதன்முதலாக கண்டித்த நாடு அமெரிக்கா.

இந்தியா மீது பொருளாதாரத் தடையை விதிக்கப் போவதாகவும் அது அறிவித்தது. அது மட்டுமல்லாமல் பாகிஸ்தானும் போட்டிக்கு அணு குண்டுப் பிரிசோதனையில் ஈடுபடக்கூடாது, அப்படி ஈடுபடாவிட்டால் அதற்கு தனக்கு வழங்கவுள்ள கடன்களிலிருந்து விலக்களிக்க முடியும் என்று அறிவித்தது.

ஆனால் என்ன காரணமோ, பல நாடுகள் இந்தியாவின் இந்தச் செயலை கண்டித்த போதும், அமெரிக்கா எதிர்பார்த்தது போல இந்தியாவுக்கு எதிராகக் கிளம்பி எழுந்துவிடவில்லை.

இந்தியா தன்னுடைய தொழில் நுட்ப வளர்ச்சியை, தனது விஞ்ஞான ஆற்றலை பரிசோதித்துக் கொள்வதில் என்ன தவறு இருக்கிறது என்பதே பொதுவான அபிப்பிராயமாக, குறிப்பாக மக்கள் மத்தியிலான அபிப்பிராயமாக வெளிவந்தது.

இலங்கை, இந்தியாவின் சோதனைகளுக்கு தான் எதிர்ப்பில்லை என்று அறிவித்தது.

கதிர்காமர் பதவிக்கு வந்தபின் சொன்ன ஒன்றிரண்டு சாணக்கியமான அபிப்பிராயங்களில் இதுவும் ஒன்று என்று குறிப்பிடலாம்.

ஆனால் இந்த அபிப்பிராயம் அமெரிக்காவுக்கு சுட்டுவிட்டது. சீனாவுக்கும் தான்.

சீனாவும் பாகிஸ்தானும் தான் தனது பரிசோதனைக்கு காரணம் என்று பெயர் குறிப்பிடாமல் தெரிவித்தது இந்தியா.

அபிப்பிராயம் சொன்ன குற்றித்திற்காக அவசர அவசரமாக அமெரிக்க சீன அரசாங்கங்களை தாஜா பண்ணும் வேலையில் இப்போது இறங்கியுள்ளார் அமைச்சர் கதிர்காமர்.

இந்திய அரசாங்கத்தின் அணு குண்டுப் பரிசோதனை, அழிவு ஆயுதங்களை தயாரிக்கும் நோக்குடன் வளருமானால் அது மனித குலத்துக்கே அச்சுறுத்தலான ஒரு விடயம்தான்.

ஆனால், ஏற்கெனவே தாம் அணு குண்டுகளை தயாரித்து வைத்துக் கொண்டு, இந்தியா அதில் ஈடுபடக் கூடாது என்று இன்று சட்டம் பேசுகின்றன. அமெரிக்காவும் அதன் சக வல்லரசுகளும்.

முழு உலகத்தையும் தாமே மிரட்டி அரசியல் பொருளாதார ரீதியில் தமது எடுபிடியாக்கும் முயற்சியில் தீவிரமாக இயங்கிக் கொண்டிருக்கும் அமெரிக்காவுக்கு இந்தியாவின் இம் முயற்சி ஆத்திரமூட்டியதில் வியப்பில்லை.

அதுவும் அமெரிக்கா ஏவிவைத்திருந்த எல்லா உளவறியும் செய்மதிகளுக்கும் ஏய்ப்புக் காட்டிவிட்டு இந்தியா இவ்வாறு செய்தது அதற்கு பெரும் எரிச்சலை ஏற்படுத்தியுள்ளது.

தாம் வைத்திருக்கும் ஆயுதங்களை வைத்திருக்கவும், தமது சர்வதேச மேலாதிககத்தைப் பேண அதைக் காரணமாக கொண்டிருக்கவும் விரும்பும் வல்லரசுகள், இந்தியாவை எதிர்க்கின்றதை விட அயோக்கியத்தனம் வேறு இருக்க முடியாது.

ஆனால் அதே வேளை இந்தியா, ஏற்கெனவே தென்னாசிய பிராந்தியப் பொலிஸ்காரனாக இயங்க விரும்பும் ஒரு நாடு என்பதும் மறக்கக் கூடியதல்ல. ஏற்கெனவே அண்டை நாடுகளை மிரட்டிய அதன் வரலாறு பிரசித்தமானது.

இப்போது அணு ஆயுத பலமும் சேர்ந்துவிட்டால் அது எப்படிச் செயற்படுமோ என்ற அச்சத்திற்கு, தெற்காசிய நாடுகள் உள்ளாவதை தவிர்க்க முடியாது. இப்போதே பாகிஸ்தானுடன் சண்டித்தனம் காட்டும் போக்கு இந்திய அமைச்சர்களின் குரலில் தொனிக்கத் தொடங்கிவிட்டது.

பாகிஸ்தானை அச்சுறுத்தவும், பிற தெற்காசிய நாடுகள் மீது தனது மேலாதிக்கத்தைப் பேணவும் இந்த தொழில் நுட்ப வெற்றியை அது பயன்படுத்தாது என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை. (பாகிஸ்தானும் கூட பதிலுக்கு சண்டித்தனம் காட்டவே செய்கிறது என்பதும் மறக்கக் கூடியதல்ல.) இந்தியாவின் இன்றைய மயிரிழை அரசாங்கம் தாக்குப் பிடிக்க இவையெல்லாம் தேவைப்படும் என்பதையும் நினைத்துப் பார்க்காமல் இருக்க முடியவில்லை.

இந்துத்துவம் சமன் இந்தியா என்று கோஷமிடும் போக்குள்ளவர்களை தலைவர்களாகக் கொண்ட புதிய இந்திய அரசாங்கத்தை நிதானமாக நடக்க வைக்க வேண்டிய பொறுப்பு இந்திய மக்கள் கைகளில் விழுந்துள்ளது.

அவர்கள் இதைச் செய்வார்கள் என்று எதிர்பார்க்கலாம். அந்த "நம்பிக்கைதான் நம்மையெல்லாம் காக்கோணும்"

○

## இரு நபர்களதும் வரலாறு!

சர்வதேச அரங்கில் பரபரப்பாகப் பேசப்பட்ட இரு நபர்களின் முடிவுபற்றிய செய்திகள் கடந்த ஒரு சில வாரமாக செய்தித் தாள்களில் முக்கியத்துவம் பெற்றிருந்தன.

ஒருவர் கம்போடிய கெமரூச் இயக்கத் தலைவர் பொல்பொட். மற்றையவர் இந்தோனேசிய ஜனாதிபதி சுகார்ட்டோ.

முன்னவர் கடந்த ஒரு தசாப்தத்தக்கு மேலாக தலைமறைவாக இருந்து அண்மையில் காலமானவர்.

சர்வதேசத்தின் கொலைகாரன் என்ற அவப்பெயருக்கு பாத்திரவாளியாக்கப்பட்ட அவரால் கொல்லப்பட்ட மக்களின் எண்ணிக்கை 2 மில்லியன்களுக்கு மேல் என்று கூறப்படுகின்றது.

கம்பூச்சிய விடுதலை இயக்கமான கமரூச்சின் தலைவரான இவரால் கொல்லப்பட்டவர்கள் பற்றிய அமெரிக்கா மற்றும் முன்னாள் சோவியத் சார்பு தகவல்களின் கணக்குப்படியே மேற்படி தொகை கூறப்படுகின்றது.

கம்பூச்சியாவில், சாட்சிக்கு இப்போது மனித எலும்புக் கூடுகளையும் மண்டை ஓடுகளையும் குவித்து வைத்திருக்கின்றார்கள்.

பொல்பொட்டின் கொடுங்கோலாட்சிக்கு சான்று கூறுவது போல.

இரண்டாமவர் கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேலாக இந்தோனேசியாவின் சர்வாதிகார ஜனாதிபதியாக இருந்து வந்தவர். ஐந்து லட்சத்துக்கும் மேற்பட்ட கம்யூனிஸ்டுக்களை திட்டமிட்டு அழிக்கும் நடவடிக்கையில் தனது இராணுவத்தை தீவிரமாகப் பயன்படுத்தியவர். நாட்டின் பொருளாதாரத்தை முற்றாக சீரழிவுக்கு கொண்டு சென்ற அவரது ஊழல். அதிகார துஷ்பிரயோகம் போன்றவற்றை எதிர்த்துக் கிளம்பிய இந்தோனேசிய மாணவர்களது போராட்டத்திற்கு முகம் கொடுக்க முடியாமல் பதவியை துறக்க வேண்டிய நிலை அவருக்கு ஏற்பட்டது.

சுகார்ட்டோவுக்கு பொல்பொட்டை போலல்லாது அமெரிக்காவினதும் உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் தீவிர ஆதரவு இருந்தது. தானே கட்டிவளர்த்த அவருக்கு விசுவாசமான ஒரு பெரிய இராணுவம் இருந்தது. அண்டை நாடுகள் எவையும் அவருக்கு எதிராக அங்குள்ள மக்களைத் தூண்டிவிடவோ அவர்களுக்கு ஆதரவாக குரல் எழுப்பி ஆதரவு தரவோ முன்நிற்கவில்லை.

மாறாக அவர் கௌரவத்திற்குரிய ஒரு தலைவராகவே உலக நாடுகளால் மதிக்கப்பட்டுவந்தார்.

ஆயினும் அவரது சொந்த மக்கள் அவருக்கு எதிராக தீவிரமாக குரல் எழுப்பினர். மாணவர்கள் கொதித்தெழுந்து அவரை பதிவிவிலகுமாறு கோரினர். முதலில் திமிராக மறுத்த போதும் பிறகு அவரால் அப்போராட்டத்திற்குத் தாக்குபிடிக்க முடியவில்லை. அவர் பதவி துறந்தார்.

ஆனால் பொல்பொட்டுக்கு எதிரிகள் பலர். வியட்நாமின் ஆக்கிரமிப்புடன் ஆரம்பமான அவரது தலைமறைவு வாழ்க்கை இறுதிவரை நீடித்தது. இந்தோ





சீனப் பிராந்தியத்தில் வியட்நாம் ஒரு பிராந்திய வல்லரசாக வளரத் துடித்துக் கொண்டிருந்த வேளையில், அன்றைய சோவியத் யூனியனின் ஆதரவுடன் இந்த ஆக்கிரமிப்பு நடந்தது. அவர் ஒரு வெறிபிடித்த கொலையாளியாக வர்ணிக்கப்பட்டார். முழு உலகத்தின் முன்னாலும் அவர் ஒரு பயங்கரமான மனிதராகப் பிரச்சாரம் செய்யப்பட்டார்.

இந்தப் பிரச்சாரங்களில் உண்மையும் இருந்தது. ஆனால் அதையும்விட அதிகமாக வல்லரசுகளின் அரசியல் நோக்கங்களும் இருந்தன.

பொல்பொட் இறுதிவரை உலக வல்லரசுகளுக்கு ஒரு சவாலாகவே இருந்தார்.

மேற்கத்தேய வல்லரசுகளும் அவர்களது தொடர்பு சாதனங்களும் இந்த இரு நபர்கள் பற்றிய தகவல்களை எப்படி உலக மக்களுக்கு வழங்கின என்பது ஒருபுறம் எமது அக்கறைக்குரிய ஒன்று. அதேவேளை மக்களது மன உணர்வுகளை மதிக்காத சர்வாதிகார இயல்புள்ளவர்கள் எவ்வாறு தமது முடிவுகளைத் தழுவிக் கொள்ள வேண்டி வரும் என்பதற்கு இது நல்ல உதாரணம் என்பதையும் மறக்கக் கூடாது.

சர்வாதிகாரி சுகார்ட்டோவின் அரசியல் நோக்கங்களை விட, பொல்பொட் கனவு கண்ட அரசியல் நோக்கங்கள் உன்னதமானவை, புரட்சிகரமானவை, நீண்டகால நோக்கில் மக்களது நலன்களை அடிப்படையாகக் கொண்டு உருவானவை.

ஆனால், தமது அரசியலை பொல்பொட் கையாண்ட வழிமுறையும் சுகார்ட்டோ கையாண்ட வழிமுறையும் ஏறக்குறைய ஒன்று தான்.

நோக்கங்கள் முக்கியமானவைதான். ஆனால் அதேயளவு முக்கியமானது வழிமுறையும் என்பதை உணர்த்துகின்றவை இந்த இரு நபர்களதும் வரலாறு

நமது நாட்டுக்கும் இது பொருந்தும்!

○

3 →

## அக்கரைப்பற்று

இத்தாக்குதல் சம்பவத்திற்கு வந்திருந்த 10-15 பேரளவில் வெள்ளை சாரமும், வெள்ளை மேற்சட்டையும் அணிந்தவர்களாக பள்ளிவாசலுக்குள் நுழைந்து தாக்குவதற்கென்றே தயாராக வந்துள்ளனர். ஏற்கெனவே கிடைத்த இரகசியத் தகவல்களின் அடிப்படையிலேயே அவர்கள் இதை மேற்கொண்டுள்ளனர்.

புலிகளுக்கு தாம் எதிரானவர்கள் என்று பிரகடனப்படுத்திக் கொண்டு ஈ.பி.டி.பியினரால் வெளியிடப்படும் தினமுரசு பத்திரிகை உண்மைக்கு மாறான திரிபுபடுத்திய செய்திகளை வெளியிடுவதன் மூலம் புலிகளுக்கு வால் பிடிப்பதன் நோக்கம் என்ன? பத்திரிகை விற்பனை என்ற ஒரே நோக்கத்திற்காக முஸ்லிம் விரோதப் போக்கைக் கடைபிடிக்கும் தினமுரசை முஸ்லிம்கள் பகிஷ்கரிக்கவேண்டும் என்ற வேண்டுகோளுடன் அக்கரைப் பற்றில் குறித்த செய்தி வெளியிடப் பட்டிருந்த தினமுரசு இதழ் எரிக்கப் பட்டுள்ளது அதைக் கண்டித்து அங்கு சுவரொட்டிகளும் ஒட்டப்பட்டிருந்தன.

முஸ்லிம்கள் மத்தியில் பிளவுகளை ஏற்படுத்தும் வகையில், கல்முனைச் சம்பவத்தை புலிகள் செய்யவில்லை, முஸ்லிமகளே இதைத் தூண்டினர் என்று ஒருதலைப் பட்சமாக குற்றம் சுமத்த முனைவது, மூன்றாம்தர மஞ்சள் பத்திரிகையான தினமுரசு போன்ற பத்திரிகைகளின் பிழைப்பு வாதமே அன்றி வேறென்ன...? தினமுரசுக்குள்ளும் தமிழ் இனவாதப் போக்கு ஒளிந்திருப்பதை இந்தச் செய்தித் திரிப்பு அப்பட்டமாக வெளிக்காட்டுகிறது.

அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த ஐக்கிய நாடுகள் சபையின் விசேட பிரதிநிதியான ஒலாரா ஒட்டுண்ணுவிடம் தம்மால் விரட்டப்பட்ட வடக்கு முஸ்லிம்கள் மீண்டும் தமது தாயகத்தில் குடியமர்வதைத் தாம் தடுத்து நிறுத்தப் போவதில்லையென புலிகளது அரசியல் பிரிவுத் தலைவரான தமிழ்ச் செல்வனும், அன்டன் பாலசிங்கமும் உறுதியளித்திருந்தனர். அந்த வாக்குறுதியின் சூடு ஆறிப்போவதற்கு முன்பே இந்தப் பள்ளிவாசல் படுகொலை நிகழ்ந்துள்ளமை புலிகளது தலைமைத்துவம் அளிக்கும் வாக்குறுதிகளை எந்தளவு தூரம் நம்ப முடியும் என்ற சந்தேக உணர்வையே வலுப்படுத்துகிறது. கடந்த காலங்களில் தாம் முஸ்லிம்களை விரட்டியது தவறு என்று புலிகளது தலைமை பலமுறை ஒப்புக்கொண்டே வந்துள்ளது. எனினும், புலிகளது அண்மைக்கால நடவடிக்கைகள் - குறிப்பாக அக்கரைப்பற்று சம்பவம் அவர்களது மனோபாவம் குறித்து மிகக் கடுமையான கேள்விகளை எழுப்பியுள்ளன.

வடக்கு கிழக்கிலிருந்து முஸ்லிம்களை முற்றாக இனச்சுத்திகரிப்புக்கு உட்படுத்த முனையும் புலிகளது போக்கு முற்று முழுதாக இன்னமும் நீங்கிவிடவில்லை என்ற முஸ்லிம்களது நெடுநாளைய சந்தேகம் இவ்வாறான சம்பவங்களினூடாக மேலும் உறுதிப்படவே செய்யும் என்பதை புலிகளது தலைமை புரிந்து கொள்ளவேண்டும். முஸ்லிம் மக்களது விடயம் தொடர்பாக புலிகள் எப்போதும் தமிழ் இனவாதப் படிவுகளினூடாகவே சிந்திக்க முனைகின்றனர். காத்தான்குடி பள்ளிவாசல் படுகொலைகளின் அதிர்ச்சியிலிருந்து முஸ்லிம் சமூகம் இன்னமும் மீளவில்லை. அதன் பிறகு மீண்டும் ஒரு பள்ளிவாசல் படுகொலை நிகழாது என்றே நாம் ஆழமாக

→ 6

www.tamilarangam.net



# “உங்கள் துப்பாக்கிகள் குறி பார்ப்பது எதனை ?”



யாழ் மேயர் திருமதி யோகேஸ்வரன் அவர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம், யாழ்ப்பாணத்தில் சுமுகநிலை தொடருமா என்ற அங்கலாய்ப்புடனான கேள்விக்கு வழங்கப்பட்ட ஒரு பதிலாக நடந்து முடிந்திருக்கிறது.

இராணுவத்தின் பூரண கட்டுப்பாட்டிற்குக் கீழ் கொண்டுவரப்பட்ட யாழ் மாநகர எல்லைக்குள் நடந்துள்ள இந்தப் படுகொலையானது, அங்கு மாநகர சபை சுமுகமாக இயங்கப் போவதில்லை என்பதைத் தெளிவாக வெளிப்படுத்தியிருக்கின்றது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் போட்டியிட்டு மேயரான திருமதி யோகேஸ்வரன் அவர்கள் பதவியேற்று முறைப்படி தனது கடமைகளை ஆற்றத்தொடங்கு முன்பே இந்தப் படுகொலை நடந்து முடிந்து விட்டது. 'சங்கிலியன் படை' என்ற பெயருடன் ஒரு குழு முதலில் ஒரு கடிதமூலம் இச்கொலை செய்திக்கு உரிமை கோரியிருந்த போதும், பிற்பாடு தாம் அல்ல அதைச் செய்தது என்ற மறுப்பும் அவ்வமைப்பின் பெயரால் எழுதப்பட்ட இன்னொரு கடிதத்தின் மூலமாக தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இரண்டாவது கடிதம் வெறுமனே மறுப்பை மட்டும் வெளியிட்டதோடல்லாமல், இக்கொலைக்கு 'பதவி ஆசை கொண்ட ஒரு தமிழ்க் கட்சியே இக்கொலையைப் புரிந்துள்ளது' என்று தமிழ்க் கட்சிகளை நோக்கி ஒரு குற்றச்சாட்டையும் முன்வைத்துள்ளது. எவ்வாறாயினும், திருமதி யோகேஸ்வரன் அவர்கள் தமது கொலைப் பட்டியலில் முதலாவது நபராக இருந்துள்ளார் என்றும் அக்கடிதம் தெரிவித்துள்ளது.

இக்கொலை தொடர்பாக கருத்துத் தெரிவித்த விடுதலைப் புலிகளின் பிராந்திய மட்ட தலைவர் ஒருவர் இவ்வாறான கொலைகள் நடப்பதும், இவ்வாறான கொலைகளை செய்யும் குழுக்கள் 'தமிழ் மக்கள்' மத்தியிலிருந்து எழுவதும் தவிர்க்க முடியாததே என்றும் தெரிவித்துள்ளார்.

புலிகளின் உயர்மட்ட உத்தியோக பூர்வ அறிவிப்பு எதுவும் இதுவரை வெளியிடப்படவில்லை.

இவையெல்லாம் இக்கொலைக்கு புலிகளே காரணமாக இருந்திருக்கிறார்கள் என்ற சந்தேகத்தை உறுதி செய்பவையாகவே இருக்கின்றன.

எவ்வாறாயினும், இக்கொலைக்கும், புலிகளுக்கும் சம்பந்தம் இருக்கிறதோ இல்லையோ, இவை போன்ற கொலைகளுக்கு நிச்சயமாக பொறுப்புச் சொல்ல வேண்டிய கடப்பாடு அவர்களுக்கு இருக்கின்றதென்பதை மறுக்க முடியாது.

ஏனென்றால், அரசியல் முரண்பாடுகளையும், முரண்பட்ட அரசியற் செயற்பாடுகளையும் நனிநபர் பயங்கரவாத வழிமுறைகளின் மூலம் எதிர்கொள்ளும் கோட்பாட்டில் ஊறி நின்று செயற்பட்டு வந்த வரலாறு அவர்களுக்கு இருக்கிறது. இந்த வரலாறு குறித்து அவர்கள் இதுவரை தம்மை மறுபரிசீலனை செய்ததாகத் தெரியவில்லை. புலிகள் மட்டுமல்லாமல் ஏறக்குறைய எல்லா முன்னாள் 'இயக்கங்'களுக்கும் கூட இந்தக் கோட்பாடு தான் வழிகாட்டும் தத்துவமாக இருந்து வந்திருக்கின்றது. ஆனால் அந்த இயக்கங்களில் பல, இன்று தமது அரசியலையே கைவிட்டு விட்ட வெறும் 'அரசியற் வியாபாரிகளாக' மாறி விட்டன. இந்த நிலையில் இத்தகைய அரசியற் படுகொலைகளிற்கான பொறுப்பை அவர்கள் ஏற்றுக் கொள்ளத் தான் வேண்டும்.

உண்மையில் சரோஜினி யோகேஸ்வரன் அவர்கள் தமிழ் அரசியல் வரலாற்றில் ஒரு முக்கியமான புள்ளி அல்ல. யோகேஸ்வரன் அவர்கள் புலிகளால் கொல்லப்பட்ட பின் கடந்த மாகாண சபைத் தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் குமார் பொன்னம்பலம் தலைமையிலான சுயேட்சைக் குழுவில் போட்டியிட்டதன் மூலமே அவரது அரசியல் பிரவேசம் உருவானது. தமிழ் மக்களது அரசியல் போராட்ட வரலாற்றில் அவர் குறிப்பிடத்தக்க ஒரு பாத்திரம் வகித்தவர் என்று சொல்லத்தக்கதாக எந்த வரலாற்றுக் குறிப்புகளும் இல்லையென்றே சொல்ல வேண்டும்.

ஆயினும் அவருக்கு அரசியலில் ஈடுபடும் ஆர்வம் இருந்தது. தீவிரமான அரசியல் கருத்துக்களைக் கொண்டவராக அவர் இந்தப் பத்தியாளர் அறிந்தவரை இருந்தவரல்ல. குறைந்தபட்சம் . த.வி.கூவின் கருத்துக்களை பிரதிபலிக்கும் ஒரு தலைவராகக் கூட அவர் இருந்ததாகக் கூறமுடியாது. அவருக்கு இருந்ததெல்லாம், தமிழ் மக்கள் மத்தியில் அரசியல் அதிகாரமுடைய ஒரு பொறுப்பினைப் பெற்றுக்கொள்வதன் மூலம் ஏதாவது சேவையாற்ற முடியும் என்ற நம்பிக்கை மட்டுமே.

த.வி.கூ யாழ் மாநகர சபைத் தேர்தலில் போட்டியிட்ட போது அந்தப்பதவிக்கு அவரை நியமித்தது. தமது கட்சியின் தலைவர் ஒருவரது துணைவியார் என்பதுவும், அங்கு சென்று கடமையாற்றும் ஆர்வமும் துணிவும் அவருக்கு இருந்தது என்பதுவும் தான் அவரை இத்தேர்தலில் தலைமைவேட்பாளராக நியமிக்க த.வி.கூ. முடிவு செய்ததற்கான காரணமாகும். இவரை விட மூத்த நீண்டகால கட்சி உறுப்பினர்கள் இருந்தும் சரோஜினி அவர்கள் தெரிவு செய்யப்பட்டதற்கான காரணம் இதுவே.

தேர்தலில் வெற்றிபெற்ற சரோஜினி யோகேஸ்வரன் அவர்கள் உண்மையில் அந்தத் தேர்தலில் பங்கு கொண்டார் என்பதைத் தவிர, ஒரு கொலைக்கு பாத்திரவாளியாக இனங்காணப்படுமளவுக்கு வேறெந்தக் குற்றமும் செய்ததாகச் சொல்ல முடியாது.

அவர் அரசாங்கத்தின் எடுபிடியாக தன்னை வெளிக்காட்டிக் கொண்டு செயற்பட்டார்; அல்லது அரசாங்கத்தின் யுத்தத்தை ஆதரித்து, அதுவே சமாதானத்திற்கான பாதை என்று பிரச்சாரம் செய்தார்; அல்லது புலிகளை அழித்தொழிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் இராணுவத்திடம் தனது கட்சி உறுப்பினர்களை சேவகம் செய்ய அனுப்பியிருந்தார் என்றெல்லாம் அவர்மீது குற்றம் சாட்டிவிட முடியாது.

அவர், உண்மையில் இந்த அரசியல் களத்தின் பயங்கரத்தையும் நெளிவு சுழிவையும் தெரிந்து வைத்திருக்காத ஒரு பெண்மணியாக இருந்தார்.

தமிழர் விடுதலைக் கூட்டணி அவருக்கு தலைமைப் பதவி தர மறுத்திருந்தால் அவர் தனியாகக் கூட சென்று தேர்தலில் நிற்க முயன்றிருக்கக் கூடும்.

'சமாதானம் வேண்டும், அமைதி வேண்டும்' என்ற அப்பாவித்தனமான எதிர்ப்பார்ப்புக்களுக்கு மேல் அவருக்கு வேறெந்த அதிகப்படியான அரசியலும் இருக்கவில்லை.

அவர் ஒரு சராசரி யாழ்ப்பாணப் பெண்மணியாக இருந்தார்.

அதுவே அவரது கொலைக்கும் காரணமாகிப் போய் விட்டது.

இன்று, வரலாற்றிலேயே இல்லாத விதத்தில் அரசாங்க உறுப்பினர் அல்லது அரசாங்க கட்சி சாராத ஒருவருடைய ஊர்வலத்துக்கு ஒன்றரை மணி நேரம் நேரடி அஞ்சலை வானொலி மூலமாக வழங்கி அதை தமது அரசியல் பிரசாரத்திற்காக பாவித்த இந்த அரசாங்கம், சமாதானத்தின் ஒளிவிளக்கு அணைந்து விட்டதாக அரற்றுகிறது.

> ஆயுதம் ஏந்திய யுத்தத்தின் போது நடைபெறும் கொலைகளை - அவைகளும் அரசியல் காரணங்களுக்காக நடைபெற்றாலும் கூட, இத்தகைய கொலைகளுடன் ஒப்பிட முடியாது. சரோஜினி யோகேஸ்வரன் யுத்த முனையில் ஆயுதம் தரித்து நின்ற ஒருவர் அல்ல. அவரது கட்சியும் கூட அவ்வாறு நின்ற ஒரு கட்சி அல்ல.
>
> ஆகவே அவரது கொலை - ஒரு அரசியற் படுகொலையாக தனிநபர்பயங்கரவாதக் கொலையாக கண்டிக்கப்பட வேண்டிய ஒரு கொலையாக அமைந்து விடுகிறது.

ஆனால், சமாதானத்தின் பெயரால், போலித் தேர்தலை நடாத்தி தமது ஆட்சியில் ஜனநாயகம் நடப்பதாக மார்தட்ட வசதியாக் சரோஜினி யோகேஸ்வரன் போன்றவர்களை அங்கு அனுப்பி வைக்கும் போது, அங்கு அந்த நிர்வாகம் சுமுகமாக நடக்கும் நிலை இல்லை என்று தமிழ்க்கட்சிகள் கூறியதைப் பற்றிக் கொஞ்சமும் சிந்தித்துப் பார்க்கவில்லை.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஆனந்த சங்கரி அவர்கள், 'அங்கு பாதுகாப்பு இல்லை என்று அப்போதே நாம் அரசாங்கத்திடம் சொன்னோம். அது கேட்கவில்லை' என்று இப்போது அரற்றுகிறார். ஆனால், தமது உறுப்பினர்கள் இந்தத் தேர்தலில் நின்று இறுதிக்கணத்தில் வேட்பு மனுவுடன் ஓடும் போது பாதுகாப்புப் பிரச்சினை அவர்களுக்கு மறந்து போய்விட்டது.

இப்போது அழுது வடிக்கிறார் அவர்!

உண்மையில் இது கண்டிக்கப்பட வேண்டிய ஒரு படுகொலை. அரசியல் ரீதியாக சரோஜினி யோகேஸ்வரன் தேர்தலில் நிற்பதற்கு ஒப்புக் கொண்டதும், அதில் பங்கேற்றதும், யாழ்ப்பாணத்தில் நிலைமை சுமுகம் என்ற பிரச்சாரத்தை மேற்கொள்ளும் அரசாங்கத்தின் திட்டத்திற்கு துணை போவதாக இருக்கலாம். ஆனால் அவர் அரசாங்கத்தின் ஏஜென்டாக அங்கு வந்து குதிக்கவில்லை. அப்படிக் குதித்திருந்தாலும் கூட, அங்கு நடந்த தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் போட்டியிட்டவர். தமிழர் விடுதலைக் கூட்டணியின் அரசியல் கருத்துக்களும், தமிழ் மக்களது விடுதலைக்கான அதன் செயற்பாடுகளும், போராடும் வழிமுறைகளும் ஒருவருக்கு ஏற்க முடியாததர்க இருக்கலாம். ஆனால் அதற்காக த.வி.கூ.வுக்கு அந்த உரிமையை செயற்படும் உரிமையை மறுப்பது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாகும். அவர்களைத் தேவையா இல்லையா என்று தீர்மானிக்கும் மக்களது உரிமையை இன்னொரு அரசியல் இயக்கம் தனது கையில் எடுத்துக் கொள்வது எந்த விதத்திலும் ஏற்புடைய ஒரு விடயம் அல்ல.

த.வி.கூவின் நடவடிக்கைகள் பற்றி இந்தப்பத்தியில் தீவிர கண்டனங்கள் எழுதப் பட்டிருக்கின்றன. அதன் தலைவர்கள் பற்றியும் கூட தீவிரமான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் அவையெல்லாம் எந்தவிதத்திலும் அவர்களுக்கு அவர்கள் விரும்பியபடி செயற்படும் உரிம்மையை மறுப்பதற்காகச் சொல்லப்பட்டவை அல்ல. மாறாக, அவர்களை இடித்துரைக்கவும், மக்கள் அவர்களைப் பற்றி தம்முடைய முடிவுக்கு வருவதற்கு வாய்ப்பாக இன்னொரு பக்கத்தையும் காட்டுவதற்காகவுமே எழுதப்பட்டன.

சரோஜினி யோகேஸ்வரன், த.வி.கூவின் சார்பில் போட்டியிடாமல், தனிநபராக போட்டியிட்டிருப்பினும் கூட, அவரது முடிவை தவறான முடிவாக கருதினாலும் கூட அதை தடை செய்யும் உரிமை யாருக்கும் கிடையாது. அவரை நிராகரிக்கும் பொறுப்பும் அதிகாரமும் மக்களுக்கு மட்டுமே உண்டு.

ஆயுதம் ஏந்திய யுத்தத்தின போது நடைபெறும் கொலைகளை- அவைகளும் அரசியல் காரணங்களுக்காக நடைபெற்றாலும் கூட, இத்தகைய கொலைகளுடன் ஒப்பிட முடியாது. சரோஜினி யோகேஸ்வரன் யுத்த முனையில் ஆயுதம் தரித்து நின்ற ஒருவர் அல்ல. அவரது கட்சியும் கூட அவ்வாறு நின்ற ஒரு கட்சி அல்ல.

ஆகவே அவரது கொலை - ஒரு அரசியற் படுகொலையாக தனிநபர் பயங்கரவாதக் கொலையாக கண்டிக்கப்பட வேண்டிய ஒரு கொலையாக அமைந்துவிடுகிறது.

இதை சமாதானத்திற்கெதிரான கொலையாகவும், இதை செய்யாமல் விட்டிருந்தால் சமாதானம் வந்து விட்டிருக்கும் என்பது போலவும் இன்றைய அரசாங்கம் பிரச்சாரம் செய்வது ஒரு சுத்தமான அபத்தம். அதைவிட வஞ்சகத்தனமான பொய்யுரை வேறு கிடையாது.

ஆனால், இத்தகைய கொலைகள் நாட்டின் அரசியல் விழிப்புணர்வை, தமிழ் மக்களின் அரசியல் உரிமைப் போராட்டத்தின் நியத்தன்மையை, ஏன் மக்களின் உளப்பாங்கை எல்லாம் படுகாயத்துக்குள்ளாக்கும் வரலாற்று அவக்கேட்டை செய்து விடும் என்பதற்காக இக்கொலை கண்டிக்கப்பட வேண்டும்.

'துப்பாக்கி முனையிலிருந்து அதிகாரம் பிறக்கிறது' என்பது உண்மையாக இருக்கலாம். ஆனால், அதிலிருந்து தான் ஜனநாயகத்தின் ஆத்மாவும் நசுக்கப்படுகிறது' என்பதை மறந்து விடக் கூடாது.

அடிப்படை ஜனநாயக உரிமைகளை மதிக்காத ஒரு தேசம் சுதந்திரம் விடுதலை என்பன பற்றி பேசுவதற்கு எந்தத் தார்மீக பலமும் அற்ற ஒரு தேசமாகும்.

சரோஜினி யோகேஸ்வரனது கொலையுடனாவது இத்தகை அரசியல் படுகொலைகள் இல்லாமல் போக வேண்டும்.

சங்கிலியன் படை தனது கொலைப் பட்டியலை வீசிவிட்டு, தமிழ் முஸ்லிம் மக்களின் உரிமைப் போராட்டத்தைப் பற்றி சிந்திப்பது அவசியம்.

'அப்போதுதான் தமது துப்பாக்கிகள் யாரை நோக்கி திருப்பப்பட்டிருக்கின்றன என்பது தெளிவாகும்!'

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மலையகம்: வேவு வேலைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ள தொழிற்சங்கங்கள்!

கடந்த ஏப்ரல் மாதம் கொழும்பு நகரிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் மேற்கொள்ளப்பட்ட பாரிய சுற்றிவளைப்பு கைதுகள் என்பனவற்றில் 6000க்கும் அதிகமான தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர். அரசாங்கத்தின் தமிழர் சுத்திகரிப்பு நடவடிக்கைகள் நாளும், பொழுதும் திட்டமிட்ட வகையில் நடைபெற்று வரும் வேளையில் ஆளும் பொதுசன ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் தமிழ்க் கட்சிகள் காக்கும் மௌனமாக இருந்தாலும் சரி, அல்லது அவர்கள் விடுகிற பத்திரிகை அறிக்கையாயினும் சரி, சற்று மிஞ்சிப் போனால் பாராளுமன்றத்தில் ஆளும், எதிர்க் கட்சி எம்.பிக்கள் எல்லோரும் - சில வேளைகளில் இவர்கள் தரப்பு எம்.பிக்களும் - தூங்கிக் கொண்டிருக்கும் நேரத்தில் இவர்கள் ஆற்றும் வீராவேச உரையாயினும் சரி இவர்களைையும் உசுப்புவதில்லை.மற்றெவரையும் கூட உசுப்புவதில்லை.காற்றை அசுத்தப் படுத்துவதைத் தவிர. வடக்கு - கிழக்கு - தெற்கு-மலையகம் எங்கும் ஒவ்வொரு தமிழரையும் புலியாகவும், புலி ஆதரவாளராகவும் கருதி; பொலிஸ், இராணுவம் - புலனாய்வுப் பிரிவுகள் என்பன அப்பிரதேசங்களை இனவெறிபிடித்தலையும் அதிகாரிகளின் வேட்டைக் காடாகவும் மாற்றியுள்ள நிலையில் ''கைது செய்யப்படும் தமிழரை விடுவிக்கப் பிணை நிற்போம்'' என்று ஆலோசனை கூறும் வங்குரோத்துத் தனத்தில் தமிழ்க் கட்சிகள் மூழ்கிப் போயுள்ளன.

### இ.தொ.கா. உளவு!

தமிழ் இளைஞர் கைது தொடர்பாக அமைக்கப்பட்ட உயர்மட்டக் குழுவில் இ.தொ.கா. பாராளுமன்ற உறுப்பினர்களான ஆறுமுகம் தொண்டமானும், இராமையா யோகராஜனும் இடம்பெற்றுள்ளமையும், அவர்கள் கைது செய்யப்படும் மலையக இளைஞர்கள் பற்றிய பின்னணித் தகவல்களைத் திரட்டி தருவார்கள் எனவும் பத்திரிகைச் செய்திகள் குறிப்பிடுகின்றன. இது இ.தொ.கா. தனது காட்டிக்கொடுப்புத் துரோகத்தனங்களுக்குச் சட்டபூர்வ அங்கீகாரம் பெறும் ஒரு முயற்சியாகும் என்பதில் சந்தேகம் இல்லை. ஏனெனில், மலையகத்தில் ஏற்கெனவே மாற்றுக் கருத்துடையோர், மாற்றுக் கட்சியினர், மாற்றுச் சிந்தனையாளர்களை அரசியல் ரீதியில் பழிவாங்கும் நோக்கில் அடக்கி ஒடுக்க இ.தொ.கா. தோட்டக்கமிட்டியின் முதல் அமைச்சர் தொண்டமான் வரை கையாண்டுவரும் தந்திரோபாயம்; அவர்களைப் பயங்கரவாதிகளாக்கிக் காட்டிக்கொடுப்பது தான். ஏற்கெனவே பல நூற்றுக்கணக்கான மலையக இளைஞர்கள் கைது விடயத்திலும் மலையக மக்கள் முன்னணி மீதான அடக்குமுறையின் போதும் இது அம்பலமாக்கப்பட்டுள்ளது.

இ.தொ.கா. எம்.பி.க்களான சிவலிங்கமும், சென்னனும், இளைஞர் கைது பற்றி பாராளுமன்றத்தில் பேசும் போது கூடத் தலைவர் தொண்டமான் வாய் திறப்பதே இல்லை. அவர்களுக்கெதிரான அல்லது மாற்றான சிந்தனையுடையோர் மீது அவதூறுகளைப் பரப்புவது, மக்களை எதிரிகளாக சித்திரித்துக் காட்டுவது, பின்னர் பயங்கரவாதிப் பட்டம் சூட்டுவதைத் தவிர வேறெந்த மாற்றுவழி குறித்தும் சிந்திப்பதற்கு இ.தொ.காவில் யாருமே இல்லை என்பதோடு அவர்களுக்கு நல்லறிவு புகட்டவும் கூட எந்தச் சக்தியும் முன்வர முடியாதளவுக்கு அரசியல் வங்குரோத்துத் தனமிக்க ஒரு அமைப்பாக அது மாறியிருக்கிறது.

இப்பொழுது மலையகத்தின் சகல பொலிஸ் பிரிவுகளிலும், தோட்டத்தில் வசிக்கும் குடும்பங்கள், வெளியில் வேலை செய்வோர், கல்வி கற்போர் விபரம், அவர்களது தொழில், பின்னணி குறித்தெல்லாம் விபரம் திரட்டப்பட்டு வருகின்றது. இதன் விளைவு என்ன என்பது பற்றிச் சிந்திப்பதற்கு எவருக்கும் அக்கறை இருப்பதாகத் தெரியவில்லை. ஏற்கெனவே தொழிற்சங்கங்களினதும், தோட்டங்களில் வசிக்கின்ற சிங்கள அலுவலர்களதும், தகவலளிப்போர் உதவியுடனும், உளவுத் துறையினர் மலையகத்தில் 1000க்கும் மேற்பட்ட ''புலிகள்'' இருப்பதாக மதிப்பிட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. இப்போது புலிவேட்டைக்குப் புறப்படபோகிறது பொலிஸ், உளவுத்துறைகள். வழமைபோல மாகாணசபைத் தேர்தல் முடிந்த கையோடு மலையகத்தில் பாரிய அளவில் கைதுகள் நடத்தப் படுவதற்கான சாத்தியப்பாடுகள் தென்படுகின்றன.

- அரசியல் ஈடுபாடுள்ள இளைஞர்கள்
- மாற்றுக் கருத்துடையோர்
- வேலை நிறுத்தத்தின் போதும் அதன் பின்னரான போராட்டங்களில் முன்னின்றோர்.
- கற்ற இளைஞர்கள்/ பல்கலைக்கழக மாணவர்கள்
- சந்தேகத்துக்கிடமானோர் என கருதப்படுவோர்.

அடுத்த மலையகப் புலி வேட்டையில் பலிக்கடாக்களாக்கப்படக் கூடிய வாய்ப்புக்கள் அதிகம் இருக்கின்றன. மேலும் தோட்டத்திற்கு வெளியில் வேலை செய்வோர் 'பாஸ்' பெற்றுக் கொள்ளவேண்டிய நிலை ஏற்பட்டால் கூட ஆச்சரியப்படமுடியாது.

நுவரெலியா, கண்டி, அட்டன், பதுளை பிரதேசங்களில் இயங்கும் பல்வேறுபட்ட அரச புலனாய்வுப் பிரிவுகளும் அரசாங்கத்திற்குத் தவறான தகவல்களைக் கொடுப்பதிலும், தவறாக வழிநடத்துவதிலும் பல தடவை வெற்றிகண்டிருக்கின்றன. தனிநாடு கேட்டார்கள் என கைது செய்யப்பட்ட நூற்றுக்கணக்கான இளைஞர்கள், பாரிய பிரச்சார சரக்காக்கப்பட்டனர். பின்னர் எவ்வித குற்றமும் நிரூபிக்கப்படாமல் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இனவெறிபிடித்துத் தமிழ் இளைஞரின், இரத்தம் குடிக்கத் துடிதுடிக்கும் பொலிஸ் - உளவுத் துறையினருக்கு மலையகத் தொழிற்சங்கங்கள் நேரடியாகவும், மறைமுகமாகவும் உதவி வருகின்றன என்பது பகிரங்க இரகசியமாகும்.

போவெல, பொன்சேகா, திசாநாயக்கா, பந்துல போன்ற மலையகப் புலனாய்வுத்துறை அதிகாரிகள் மலையக இளைஞரை வேட்டையாடுவதில் பேர் போனவர்கள். ஆனால் மலையகத்தில் புலனாய்வுப் பிரிவில் உள்ள பலர் லஞ்சம், ஊழல், பாலியல்வல்லுறவு, கொள்ளை குற்றச்சாட்டுக்கு உள்ளானோராவா கள் இவர்களது விடயத்தில் எதனையும் வெளியே கொண்டுவர மலையகத் தொழிற்சங்கங்கள் முன்வருவதில்லை என்பதோடு அவர்களுக்கெதிராக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படுவதுமில்லை. ம.ம.மு. நுவரெலியா அமைப்பாளரும், ஒரு மாந்திரீகர் மகனும் கைது செய்யப்பட்டபோது அவர்கள் புலனாய்வுப் பிரிவு கேட்ட கப்பம் கொடுக்க தவறியதாலேயே கைது செய்யப்பட்டதாகக் கூறப்பட்டது. மலையகத்தின் ஒவ்வொரு பொலிஸ் நிலையத்திலும் லஞ்சம், ஊழல், அரச பயங்கரவாதம், காடைத்தனங்கள் தலைவிரித்தாடுகின்றன.

சிங்கள - ஆங்கிலப் பத்திரிகைகளான லங்காதீப, திவயின, தினமின, திஐலண்ட், டெயிலி நியூஸ் என்பன மலையகத்தில் பயங்கரவாதம் பரவுவதாக அடிக்கடி ஒப்பாரி வைத்துத் தலைப்புச் செய்திகள் வெளியிட்டு வருகின்றன. சிங்களப் பத்திரிகையாளர்கள் - புலனாய்வாளர்கள் - தோட்டத் தொழிற்சங்கங்கள் கொண்டுள்ள நெருக்கமான தொடர்பும் அதன் விளைவும் மிகத்தவறான விம்பத்தை நாட்டு மக்கள் மத்தியில் ஏற்படுத்துகின்றன.

> மலையக அரசியல் தொழிற்சங்க சக்திகளும், அவர்களின் ஏவலாட்களும் பொலிசாருடன் சேர்ந்து அடக்கு முறைக்குத் தூபமிட்டுவருவதும் அரசியல் பழிவாங்கலை நடத்திவருவதும், ஆளும் வர்க்கத்திற்கு நல்ல பிள்ளையாவதற்காக ஒட்டுமொத்த மலையக இளைஞர்களையும் கொஞ்சங் கொஞ்சமாகப் பலிகொடுத்து வருவதும் சகலரும் கவனத்திற்கெடுக்க வேண்டிய விடயமாகும்.

ஆனால் அவர்கள் திட்டமிட்டு ஏற்படுத்தி வரும் ஆக்கிரமிப்பினதும், அச்சுறுத்தலினதும் தர்க்க ரீதியான விளைபயன் ஏதுவாக இருக்கப்போகிறதோ?

வட்டவளை தமிழ்ப் பிரதேசத்தை ஆக்கிரமித்தும், அண்மித்தும் மிக வேகமாகச் சிங்களக் குடியேற்றம் ஏற்படுத்தப்பட்டு வருகின்றது. இங்குள்ள பிக்கு தமிழருக்கு காணி விற்கவோ, வீடுவாடகைக்குக் கொடுக்கவோ கூடாது என வலியுறுத்துவதோடு தமிழ்ப் பாடசாலையையும், மைதானத்தையும் ஏப்பம்விடவும் திட்டமிட்டு செயற்படுவதாகவும் கூறப்படுகின்றது.

அட்டனில் திட்டமிட்ட ஒரு ''கைத்தொழில் குடியேற்றத் திட்டத்தை'' உருவாக்க அட்டனில் உள்ள பிரபல சிங்கள முதலாளிமார் ஆளும் கட்சியுடன் இணைந்து திட்டமிட்டு வருவதாகத் தகவல்கள் வெளிவருகின்றன. அட்டன் நகரில் உள்ள காணிகளில் குடியேற்றவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதோடு அது தொடர்பாக எப்போதும் மோதல் வெடிக்கக்கூடிய சாத்தியமிருக்கிறது.

அட்டனை மையங்கொண்டியங்கும் உளவுப் பிரிவில் பிரியந்த, லால்குமார என்ற பெயருடைய உளவாளிகள் தோட்டங்களில் உள்ள சிங்களத் தோட்ட சேவையாளர்கள், கூட்டுறவுக் கடையினர், மெக்கானிக்குகள், தபால் நிலைய ஊழியர்களின் உதவியுடன் நன்கு தாபிக்கப்பட்ட வலைப் பின்னலை ஏற்படுத்தி அடுத்து கைது செய்யப்படவேண்டிய இளைஞர்கள் பற்றி தகவல் திரட்டி வருகின்றனர்.

அண்மையில் கூட பத்தனை கல்வியியல் கல்லூரி மாணவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். பல பொலிஸ் நிலையங்கள் தமது தகவல் அளிப்போரின் பேரில் வழிநடத்தலிலேயே இயங்குகின்றன.

''அரசாங்கப் பாதுகாப்புப்படையில் ஆட்பற்றாக்குறை'' என அரசாங்கமும், ''மலையக இளைஞர்களைப் பொலிசில் சேர்த்துக்கொள்ள வேண்டும்'' என ஆறுமுகம் தொண்டமானும் புலம்புகின்றபோது அண்மையில் ரிசேர்வ் /பொலிஸ் பிரிவுக்கு சேர்க்கப்பட்டு மகியங்கணையில் பயிற்றுவிக்கப்பட்ட நூற்றுக்கணக்கான மலையகத் தமிழ் இளைஞர்கள், இரண்டே மாதங்களில் பொலிசில் தலைவிரித்தாடும் இனவெறி காரணமாக வெளியேறி உள்ளனர்.

ரஞ்சன் விஜேரத்ன காலத்தில் பொலிஸ் சேவையில் சேர்க்கப்பட்ட மலையக இளைஞர்கள் டசின் கணக்கானோர் விரட்டப்பட்டு விட்டனர். பல தமிழ்ப் பொலிசார் புலிப் பட்டம் சூட்டப்பட்டு கைது செய்யப்பட்டுள்ளனர். பலருக்கெதிராக வழக்குத் தொடரப்பட்டுள்ளது. இவர்களில் இ.தொ.கா. குண்டராகத் தொழிற்பட்ட பொலிசார் பலரும் அடங்குவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

மலையகப் பிரதேசத்தில் பல ரவுடிகள் பொலிசாருடன் சேர்ந்து இயங்குவதும், மலையகத்தின் பொலிஸ் நிலையப் பொறுப்பாளர்கள் மலையகத் தமிழரை நாயையும் விடக் கேவலமாக நடத்தி வருகின்றனர் என்பதும் தெரியாத ஒன்றல்ல.

மலையக அரசியல் தொழிற்சங்க சக்திகளும், அவர்களின் ஏவலாட்களும் பொலிசாருடன் சேர்ந்து அடக்கு முறைக்குத் தூபமிட்டுவருவதும் அரசியல் பழிவாங்கலை நடத்திவருவதும், ஆளும் வர்க்கத்திற்கு நல்ல பிள்ளையாவதற்காக ஒட்டுமொத்த மலையக இளைஞர்களையும் கொஞ்சங் கொஞ்சமாகப் பலிகொடுத்து வருவதும் சகலரும் கவனத்திற்கெடுக்க வேண்டிய விடயமாகும்.

—பிரான்சிஸ் ஐயாவு

## அக்கரைப்பற்று

நம்பியிருந்தோம். ஆயினும், புலிகளது முஸ்லிம் விரோதப் போக்கு இன்னமும் மாறவில்லையென்பதை அவர்கள் பொட்டில் அடித்தாற்போல் நமக்கு உணர்த்தியுள்ளனர்.

1990ல் கல்முனை, சம்மாந்துறை, அக்கரைப்பற்று பொலிஸ் நிலையங்களில் கடமையாற்றிய பொலிஸ் உத்தியோகத்தர்கள் புலிகளிடம் சரணடைந்தபோது புலிகள் அதிலிருந்த தமிழர்களை மட்டும் விடுதலை செய்துவிட்டு முஸ்லிம்களையும், சிங்களவர்களையும் படுகொலை செய்ததை நாம் இன்னமும் மறக்கவில்லை. தமது எதிரிகள் என்று பிரகடனப்படுத்தும் பொலிஸ் உத்தியோகத்தர்களில் கூட தமது இனத்தவர் மட்டும் எப்படித் துரோகிகளாக புலிகளுக்குத் தெரியாமல் விட்டனர்? இது புலிகளின் இரட்டை வேடமேயன்றி வேறென்ன?

சகோதர சிறுபான்மை மக்களான தமிழ் மக்களை அடக்கி ஒடுக்கும் சிங்களப் பேரினவாத ஆட்சியாளர்களின் இனவாதப்போக்குகளை முஸ்லிம்கள் மிகத்தெளிவாக உணர்ந்திருக்கின்றனர். தமிழ் மக்களது நியாயமான போராட்டத்துக்கு இப்போதும் ஆதரவளிப்பவர்களாகவே முஸ்லிம்கள் இருந்து வருகின்றனர். 90களின் கசப்பான நிகழ்வுகள் இந்த ஆதரவை மழுங்கடிப்பதாகவே அமைந்தன. எனினும், இது தொடராது என்ற ஆதங்கமும் எதிர்பார்ப்பும் முஸ்லிம் மக்களிடம் இருந்தன. அண்மைக்கால நிகழ்வுகள் இந்த எதிர்ப்பார்ப்பை சிதைப்பதாகவும் ஆத்திரத்தை ஊட்டுவதாகவுமே அமைந்துள்ளன.

தமிழ் மக்களது போராட்டத்தை சுயநல சந்தர்ப்ப வாத அரசியல் சகதிக்குள் பல முன்னாள் போராளிக் குழுக்கள் புதைத்துவிட்டபோதிலும், எண்ணற்ற உயிர்களைப் பலிகொடுத்தும் பல்வேறு இழப்புகளினூடாகவும் தொடரும் தேசிய விடுதலைப் போராட்டம் எந்த ஒரு அர்த்தமும் இல்லாமல் நீர்த்துப் போவதை முஸ்லிம்கள் ஒருபோதும் விரும்பப் போவதில்லை.

மேலும் இவ்வாறான சம்பவங்களின் பின்னரும் நாம் இதை இரு இனங்களிடையேயான மோதலாக மாற்ற விரும்பவில்லை. மருதமுனை, ஏறாவூர், அக்கரைப்பற்று சம்பவங்கள் இதற்கு நல்ல உதாரணங்களாகும். தமிழ் முஸ்லிம் உறவுகள் வளர்வதற்கான அறிகுறிகள் தென்படும் இந்த சூழ்நிலையில், அது ஆழமாக வேரூன்ற முற்போக்கு ஜனநாயக சக்திகள் பாடுபடும் ஒரு தருணத்தில் இது நிகழ்ந்துள்ளமை வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியதாகும்.

தமிழ் - முஸ்லிம் மக்களிடையே முறுகல் நிலை வளர்வது வரவேற்கத்தக்கதல்ல. இரு சிறுபான்மை இனங்களிடையே குரோதங்களையும், நாசகார செயல்களையும் வளர்ப்பதன் மூலம் இனவாத உணர்வுடைய இராணுவமும், பேரினவாத சக்திகளுமே அதிக பயன்பெறுவர் என்பதை நாம் ஆழ்ந்து புரிந்து கொள்ள வேண்டும். அவர்களுக்கு வாய்ப்புக்களை ஏற்படுத்திக்கொடுப்பதற்கே இவ்வாறான சம்பவங்கள் துணை போகும் என்பதை புலிகளது தலைமை ஆழமாகச் சிந்திக்க வேண்டும்.

தமிழ் மக்களது போராட்டம் இழைத்த வரலாற்று தவறுகளிலிருந்து, குறிப்பாக முஸ்லிம் விரோத போக்கிலிருந்து மீளாத வரை அந்தப் போராட்டம் வெற்றிபெறப் போவதுமில்லை. முற்போக்கான மாற்றங்களைக் கொண்டு வரப்போவதுமில்லை.

-ஸிராஜ் மஷ்ஹூர்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**அன்றைய புரட்சியாளர்கள் இன்றெங்கே எனும் தலைப்பில் 71 புரட்சியில் கலந்து கொண்டவர்களில் குற்றவியல் ஆணைக்குழுவின் முன்னிலையில் குற்றம் சமத்தப்பட்டிருந்தவர்களின் பேட்டிகளைத் தொடராக வெளியிடும் நோக்கில் லயனல் போபகேவின் நேர்காணல் முன்னைய இதழில் வெளியானது இந்த இதழில் ஒஸ்மன் டி சில்வாவின் நேர்காணல் பிரசுரமாகிறது.**

**ஒஸ்மண்ட் டி சில்வா**

*கொழும்பு வனாத்தமுல்லையைச் சேர்ந்த இவரது குடும்பம் இடதுசாரிப் பாரம்பரியமுள்ளது. தகப்பனாரும், தாயாரும் சீலவத்தி, ல.ச.ச.க.வின் தீவிர செயற்பாட்டாளர். வனாத்தமுல்லை சீவலி வித்தியாலயத்தில் கல்வி பயின்ற ஒஸ்மன்ட் சில வர்த்தக நிறுவனங்களில் தொழில் புரிந்து கொண்டிருந்த போது, சிறைச்சாலை அலுவலர் பதவி கிடைத்தது. ஆனாலும் இவர் ல.ச.ச.க.வின் ஆதரவாளர் என்று முறையீடு செய்யப்பட்ட தால் ஐ.தே.க. அரசாங்கத்தின் போது அத் தொழிலை இழக்க நேரிட்டது. ஜே.வி.பி.யில் இணைந்த சிறிது காலத்தில் தீவிர உறுப்பினராகச் செயற்பட்டு வந்ததுடன் கொழும்பு மாவட்டப் பொறுப்பாளராகவும் செயற்பட்டார். இவரது வீடு கட்சிக் காரியாலயமாகப் பயன்படுத்தப்பட்டு வந்தது. இவரது வீடே கட்சிப் பணிகளுக்கு அதிகமாகப் பயன்படுத்தப்பட்டது. கட்சியின் மத்திய குழு கூட்டங்கள், அரசியல் வகுப்புகள், என்பன இவரது வீட்டிலேயே நடத்தப்பட்டிருந்தன. அவ்வீட்டிலேயே இந்த நேர்காணலைச் செய்தோம். 1971 புரட்சியின் போது இராணுவத் தயாரிப்புக்கென அமைக்கப்பட்ட குழுவில் இவரும் ஒருவர் (ஏனையோர் பியத்திலக்க, உயங்கொட, போபகே, பியசிறி, மெரில் ஐயசிறி, களு லக்கி என்போர்). கொழும்பு மாவட்ட பொறுப்பாளராக இருந்தார். 71 ஏப்ரல் 6ஆம் திகதி கைது செய்யப்பட்டு கடுமையான சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டுக் குற்றுயிராக மீட்கப்பட்டார். வலது காலில் மாத்திரம் நான்கு எழும்பு முறிவுகள் இந்த 27 வருடங்களின் பின்பும் கூட அந்தக் காயங்களின் வடுக்களும், வீங்கிய இடங்களையும் காணக்கூடியதாக உள்ளது. 1976 டிசம்பர் 30ஆம் திகதி விடுதலையானார். இவரது தாய், கோதரர்கள் இருவர் என நால்வருமாக ஐந்து வருடங்கள் சிறையில் கழித்தனர். சிறைக்குள்ளிருந்த போதே அரசியல் காரணங்களினால் கட்சியிலிருந்து விலகினார். 1989 காலப்பகுதியில் கப்பில எனும் சகோதரர் படையினரால் கொல்லப்பட்டுள்ளார். விடுதலையானதன் பின்னர் திருமணம் செய்து கொண்ட இவருக்கு இரு பிள்ளைகள் (ஒரு ஆண், ஒரு பெண்). தற்போது 64 வயதுடைய இவர் புறக்கோட்டை இ.போ.ச. பஸ்தரிப்பு நிலையத்தில் சிரேஷ்ட டிப்போ பரிசோதகராக பணிபுரிந்து வருகிறார். வனாத்தமுல்லை எம்.எச்.மொஹமட் விளையாட்டரங்கின் தேசிய அமைப்பாளராக செயற்பட்டு வருகிறார். (அடுத்த இதழில் இவரின் தாயாரின் பேட்டி பிரசுரமாகும்.)*

# அன்றைய புரட்சியாளர்கள் இன்று-2

# "புரட்சியை மக்களிடம் திணிக்க முடியாது!"

## 1971 புரட்சியின் கொழும்பு பொறுப்பாளர் ஒஸ்மண்ட் டி சில்வா

**ஜே.வி.பி.யில் எப்படி இணைந்தீர்கள்? தீவிர செயற்பாட்டாளராக எப்படி ஆனீர்கள்?**

சிறைச்சாலை அலுவலர் பதவியிலிருந்து நீக்கப்பட்ட பின் நான் தொடர்ந்து ல.ச.ச.க.வில் பொரளைப் பிரிவு பிரதி அமைப்பாளராகச் செயற்பட்டேன். டி.பி.சில்வா என்பவருக்கூடாகத் தான் ஜே.வி.பி.யின் தொடர்பு கிடைத்தது. தோழர் விஜேவீரவை முதற்தடவை சந்தித்துப் பேசிய பின் கட்சியின் முழு நேர ஊழியரானேன்.

முதற் தடவையாக ஐ.தே.க. அரசாங்கம் தோழர் விஜேவீரவை ஹம்பாந்தோட்டையில் வைத்துக் கைது செய்தது. எங்களெவருக்கும் அவர் எங்கு வைக்கப்பட்டிருக்கிறார் என்று கூட அறியமுடியாதிருந்தது. லொக்கு அத்துல, நிமல்சிறி ஜயசிங்க ஆகியோருடன் கலந்துரையாடி தேடத் தொடங்கினோம். நான்கு நாட்களுக்குப் பின்னர் நுவரெலியா நீதிமன்றத்துக்கு விஜேவீர கொண்டு வரப்படுகிறார் என்ற தகவலை அறிய முடிந்தது. அங்கு போனால் நாங்களும் கைது செய்யப்படுவோம் என்பது தெரிந்திருந்தது. எனவே இதனைச் செய்து முடிக்கவென நான் உட்பட ஐந்து பேரைக் கொண்ட குழுவொன்று அமைக்கப்பட்டது. நுவரெலியாத் தோழர்கள் எங்களது பாதுகாப்பு இருப்பிட வசதிகளை ஒழுங்கு செய்திருந்தார்கள். ஒரு நாள் அங்கிருந்து விட்டு, அடுத்த நாள் நீதிமன்றத்துக்குச் சென்றோம். காலை பத்து மணிக்கு விஜேவீரவைப் பலத்த பாதுகாப்போடு கொண்டு வந்தார்கள். நான் விஜேவீரவுக்கு நாங்கள் வந்திருப்பதாகச் சிக்னலைக் கொடுத்தோம். தொடர்ச்சியாக விசாரணை நடத்துமுகமாக அவரைத் தொடர்ந்து தடுத்து வைப்பதற்கு நீதிமன்றம் பொலிஸாருக்கு அனுமதி அளித்தது. அவர் பதுளைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதை உறுதி செய்து கொண்டோம். எங்கள் குழுவில் விரிவாகப் பேசி சட்ட நடவடிக்கைகள் குறித்தும் ஆராய்ந்து அதற்கான முடிவுகளை எடுத்துக் கொண்டு, நாட்டு மக்களுக்கு விஜேவீரவைப் பற்றி விளக்கப்படுத்த வேண்டும் என்றும் நாங்கள் ஏழு பேர் தீர்மானமெடுத்தோம். அதன்படி சுவரொட்டி, துண்டுப் பிரசுரம் ஆகியவற்றைப்டி பிரசுரித்தோம். அவ் வேலை எனது பொறுப்பில் விடப்பட்டிருந்தது. "இதோ விஜேவீர" எனும் -துண்டுப் பிரசுரத்தில் தான் ஜே.வி.பி.யின் பேர் முதலாவது தடவை பாவிக்கப்பட்டது. தொண்ணூறு ஆயிரம் பிரதிகள் அடிக்கப்பட்டு நாடு முழுக்க விநியோகிக்கப்பட்ட இப்பிரசுரத்தின் மூலம் நாட்டு மக்கள் அது வரை அறியாதிருந்த விஜேவீரவை நாட்டு மக்களுக்கு அறியச் செய்தோம்.

அதே வேளை அம்மாவின் ஒத்துழைப்புடன் ல.ச.ச.க. வழக்கறிஞர் ஒருவரின் துணையுடன் வழக்குத் தொடர்ந்தோம். 70ஆம் ஆண்டு தேர்தல் வந்த போது நாங்கள் ஐக்கிய முன்னணிக்கு ஆதரவாகச் செயற்பட்டோம். ஐ.மு. பதவியேற்றதோடு விஜேவீரவின் வழக்கும் முடிவுக்கு வந்து அவர் விடுதலை செய்யப்பட்டார். அவரைக் கொழும்பில் பாதுகாப்பான இடத்துக்கு நகர்த்தினோம்.

அதன் பின் இனிமேலும் ஒளிந்து, ஒளிந்து செயற்பட முடியாது என்பதால் பகிரங்க வேலைகளில் ஈடுபடுவதன் அவசியம் குறித்துத் தீர்மானம் எடுத்துக் கொண்டோம். அதன் முதற் கட்டமாக ஹைட் பார்க்கில் மாபெரும் பொதுக்கூட்டம் ஒன்றை நடத்தினோம். அதற்கான முழு ஏற்பாடுகளும் கொழும்பு மாவட்டப் பொறுப்பாளர் என்ற வகையில் எனது பொறுப்பில் விடப்பட்டிருந்தது. அக்கூட்டத்திற்கான முழுப்பிரச்சார நடவடிக்கைகள், பாதுகாப்பு ஏற்பாடுகள், எல்லாவற்றையும் செய்து வெற்றிகரமாக நடத்தி முடித்தோம். அக்கூட்டத்தில் கலந்து கொண்ட தாய்மார், முதியவர்கள், இளைஞர் யுவதிகள் என்போர் தாம் அணிந்திருந்த தங்களது நகைகள், கடிகாரம் போன்றவற்றைக் கழற்றிக் கொடுத்து நிதியுதவிகளைச் செய்தனர். அன்றைய பெறுமதியின்படி ஏறத்தாழ அறுபதினாயிரம் ரூபா பெறுமதியான உதவிகள் எமக்குக் கிடைத்தன.


அதன் பின் மக்கள் மத்தியில் எமது செயற்பாடுகளை விரிவாக்கிக் கொண்டு சென்றோம். இதன் போது தான் எம்மைப் பற்றிய பிழையான தகவல்களைப் புலனாய்வுப் பிரிவு அரசாங்கத்துக்கு அறிவித்தது. ஐ.மு.அரசாங்கத்திலிருந்த இடதுசாரிக் கட்சிகள் கூட எங்கள் மீதான அடக்குமுறைக்கு ஒத்துழைப்பு வழங்கினார்கள். பலர் கைது செய்யப்பட்டார்கள்.

**ஆரம்பத்தில் எப்படிக் கைது செய்யப்பட்டீர்கள்?**

கட்சியின் கூட்டத்தை அறிவிக்கும் சுவரொட்டி ஒட்டச் சென்றிருந்த வேளை நாரஹேன்பிட்டியவில் வைத்து என்னைக் கைது செய்தார்கள். கைது செய்த பொலிஸ் சப் இன்ஸ்பெக்டர் கபூருடன் விவாதித்தேன். இது சட்டபூர்மாக அனுமதி பெறப்பட்ட கூட்டம் பற்றிய சுவரொட்டி. இது எப்படி சட்டவிரோதமாகும் என்றேன். ஆனாலும் நான் தடுத்து வைக்கப்பட்டுப் பின்னர் தோழர் எட்மன்ட் சமரக்கொடி வழக்கு பேசி என்னை விடுதலை செய்தார்.

**அந்த நேரத்தில் கட்சிக்குள் இருந்த கருத்து முரண்பாடுகள் எப்படித் தீர்க்கப்பட்டது?**

அப்போது கட்சிக்குள் இப்படிப்பட்ட முரண்பாடுகளைத் தொடர்ந்து நிலவ விடுவதைத் தவிர்க்குமுகமாக ஒரு உரையாடலை நடத்துவது நல்லதென தோழர் விஜேவீரவிடம் நான் கோரினேன். அந்த நேரத்தில் சீ.ஐ.டி.யினர் தொடர்ந்து கண்காணித்துக்



கொண்டிருக்கின்ற நிலையில் பாதுகாப்பு, மற்றும் ஏனைய நெருக்கடிகள் உள்ள நிலையில் ஒரு கலந்துரையாடலை அப்போது நடத்துவதில் உள்ள சிக்கல்களைக் குறிப்பிட்டார். நான் பாதுகாப்பு, இருப்பிட ஒழுங்குகளைச் செய்வதாகப் பொறுப்பேற்றேன். அதன்படி இதே வீட்டில் அந்தக் கூட்டம் நடத்தப்பட்டது. நாட்டில் உள்ள அனைத்து மாவட்டப் பொறுப்பாளர்களும் அதில் கலந்து கொண்டு விவாதித்தோம். இறுதியாக லொக்கு அத்துல இவற்றிக்குப் பதிலளிப்பதற்குத் தயாரான போது பொலிஸார் புகுந்தனர். ஏற்கெனவே நாங்கள் கண்காணிப்பு வேவு பார்க்கவென பல தோழர்களை சூழ நிறுத்தியிருந்தபடியால் அவர்களின் மூலம் பொலிஸார் வரும் தகவல் எமக்கு கிடைத்திருந்தது. எல்லோரையும் இன்னொரு வழியாகத் தப்பிக்க வழி செய்தோம். பொலிஸார் சுற்றி வளைத்த போது என்னைத் தவிர வேறு எவரும் இருக்கவில்லை. வாசலில் இருந்த செருப்புகள் எவரது என்று என்னிடம் வினவினர். இது கட்சியின் காரியாலயமாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. உறுப்பினர்கள் வருவார்கள் போவார்கள் அவர்களது செருப்புகள் தான் இவை என்றேன். என் கன்னத்தில் அறைந்தார்கள். எனது தாயையும் உதைத்தார்கள். தடுப்பிலிருந்த நான் பின்னர் பிணையில் விடுதலை செய்யப்பட்டேன்.

**—கோமதி**

அம்பாறையில் வைத்து கெலி சேனநாயக்கவும் விஜேவீரவும் கைது செய்யப்பட்டார்கள். கட்சிக்குள் ஏற்கெனவே இருந்த முரண்பாடுகளைத் தீர்க்கும் முகமாக மீண்டும் கங்கொடவில எனும் இடத்தில் மத்திய குழுக் கூட்டத்தை நடத்தினோம். அதில் தான் அடக்குமுறை ஒன்று கட்டவிழ்த்துவிடப்படுமாயிருந்தால் அதை எப்படி முகம் கொடுப்பது என்பது குறித்து சீரியஸாக விவாதித்தோம். ஏப்ரல் 2ஆம் திகதி நடத்தப்பட்ட இக்கூட்டத்தின் இறுதியில் ஏப்ரல் 5ஆம் திகதி தாக்குதல் நடவடிக்கையில் ஈடுபடுவது குறித்து முடிவு செய்யப்பட்டது. கட்சியின் தீமானம் இதுவாக இருந்தால் அத் தீர்மானத்தை நிறைவேற்ற உயிரையும் விடத் தயார் என நான் கூறினேன். ஆனால் ஏப்ரல் 4ஆம் திகதியன்றே எங்களது பலவீனங்கள் காரணமாக அரசாங்கத்துக்கு இது பற்றிய செய்திகள் கசிந்திருந்தது. குறிப்பாக மாணவர் பிரிவைச் சேர்ந்த பெண் தோழரொருவரால் இத் தகவல் கசிந்திருந்தது. 2ஆம் திகதி அப்படியொரு தீர்மானத்தை நாங்கள் எடுத்திருக்கக் கூடாது.

**இத் தீர்மானத்தை எடுப்பதில் விஜேவீரவின் பாத்திரம் எத்தகையது?**

தாக்குதல் தொடுக்குமாறு விஜேவீர எனது தாயிடம் செய்தி அனுப்பியதாகக் கூறப்பட்டது. ஆனால் எனது தாயாரிடம் அப்படியொரு செய்தி அனுப்பப்படவில்லை. விஜேவீர அப்படியொரு செய்தி அனுப்பியிருந்தாலும் இல்லாவிட்டாலும் அப்படியொரு தீர்மானத்தை நாங்கள் அவரசப்பட்டு எடுத்திருக்கக் கூடாது. ஆனால் அன்று கட்சித் தோழர்கள் விஜேவீரவால் வழங்கப்பட்டிருந்த வழிநடத்தல், கருத்து நிலை என்பன காரணமாக இது நடந்துதானிருக்கும். ஒருவரும் இத்தீர்மானத்தை எதிர்த்திருக்கவில்லை. எல்லோரும் இணங்கியிருந்தனர். ஆயுதப் படையினர் குறித்துக் குறைத்து மதிப்பிடப்பட்டிருந்தது. ஏனைய மாவட்டங்களிருந்த தோழர்கள் தமது பலம் குறித்து அதீதமாக மதிப்பிட்டிருந்தனர். இது குட்டிமுதலாளித்துவ சிந்தனையின் வெளிப்பாடே. வெடிகுண்டுகள் சிலவற்றைச் சேரித்ததால், சில கட்டுத் துவக்குகளைச் சேகரித்ததால், நாங்கள் புரட்சிக்குத் தயாராகி விட்டோம் என்பதல்ல அர்த்தம். புரட்சிக்குரிய சூழல் நிலவவில்லை. ஒரு புரட்சியை மக்களிடம் வற்புறுத்தித் திணிக்க முடியாது.

**கொழும்புத் தாக்குதல் குறித்த அனுபவங்களைக் கூறுவீர்களா?**

நாங்கள் தாக்குதலுக்கான ஆயத்தங்ளை செய்து கொண்டிருந்த வேளையில் ஜயதேவ உயங்கொடவிடமிருந்து ஒரு தகவல் வந்தது. கொழும்பில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. நாம் தாக்கினால் அதனால் மக்களும் நாங்களும் பாரிய அடக்குமுறையை எதிர்நோக்க வேண்டி வரும். எனவே வெளியிடங்களிலிருந்து தாக்குதல்களை நடத்திக் கொண்டு வெற்றிகரமாக நகரத்தை நோக்கி வரும் போது நாங்களும் தாக்குவது தான் சிறந்த வழியென்றும் அது வரை பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறும் குறிப்பிட்டிருந்தார்.

**அப்படியென்றால் நகரம் உஷாரானாலும் பரவாயில்லை என்று நம்பியிருந்தீர்களா?**

ஆம் கொழும்பு ஏற்கெனவே உஷாரடைந்திருந்தது. எனவே தான் பின் வாங்கிவிட்டு ஏனைய இடங்களின் வெற்றியோடு சேர்த்து கொழும்பில் தாக்குதலைத் தொடரலாம் என்றிருந்தோம். ஆனால் மாணவர் பிரிவு வேறொரு முடிவை எடுத்திருந்தது. பிரதமரின் இல்லத்தைத் தாக்கி பிரதமர் சிறிமாவை கைது செய்வதற்குத் திட்டமிட்டிருந்தோம். அதன்படி ஏற்கெனவே நாங்கள் சிக்னல் கொடுத்ததும் கைது செய்யும் வகையில் இரு பாதுகாப்புக்கு இருந்த படையினரையும் ஏற்பாடு செய்திருந்தோம். ஆனால் இத்தகவல் மாணவர் பிரிவைச் சேர்ந்த பெண் தோழர் ஒருவரால் கசிந்திருந்தது. ஆனால் தாக்குதலுக்கென்று ஆயத்தமாயிருந்த குழு அத்தினத்தன்று பொரளை ரிட்ஸ் சினிமா அரங்கில் வைத்து அக்குழுவிலிருந்த பலர் ஆயுதங்களோடு கைது செய்யப்பட்டனர். அக்குழுவில் தான் இன்றைய ஜே.வி.பி.யின் தலைவர் சோமவங்ச அமரவீரவும் இருந்தார்.

**நீங்கள் எப்படிக் கைது செய்யப்பட்டீர்கள்?**

ஏப்ரல் 6ஆம் திகதியன்று விறகுகாலையொன்றில் 50க்கும் மேற்பட்டவர்களுடன் இரவு 10 மணிக்கு கூட்டம் ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. அவர்கள் ஆயுதங்களுடன் தயாராக இருந்தார்கள். அவர்களது ஆயுதங்களை மறைத்து வைத்து விட்டு தலைமறைவாக இருக்கும்படி நான் அறிவித்துவிட்டு ... வழியில் அவர்கள் என்னைப் பிடிக்கக் காத்திருந் தார்கள். ஆனால் நான் போன வழியால் திரும்பி வரவில்லை. இகசியமாக எனது பாட்டி வீடு வந்து சேர்ந்து 15 நிமிடங்களில் பொலிஸார் சுற்றி வளைத்து என்னைக் கைது செய்தனர். ஆயுதங்களைத் தேடினர் எதுவும் கிடைக்கவில்லை. ஆயுதங்கள் மறைத்து வைத்திருக்கும் இடம், ஏனையோர் ஒளிந்திருக்கும் இடம், திட்டம் என்பற்றைக் கேட்டு என்னைத் தாக்கினர். அம்மாவை உதைத்தனர். தூக்கி வீசினர். என்னைக் குரூரமாகத் தாக்கினர். உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த என்னைப் புலனாய்வுப் பிரிவினர் பொறுப்பேற்றதன் பின்னர் அவர்கள் இந்தப் பழியைச் சுமக்க வேண்டி வரும் என்ற காரணத்தினால் எனக்குச் சிகிச்சை அளித்தனர். அதன் பின் சிறிது சிறிதாகத் தேறினேன். பின்னர் என்னிடமிருந்து வாக்குமூலம் பெற முயற்சி செய்தாலும் எனது உடல் உள நிலைமைகள் சரியாக இராததால் அதனைக் கைவிட்டனர். பின்னர் 8 மாதங்கள் கழித்து மீண்டும் நான்காம் மாடிக்குக் கொண்டு சென்று வாக்குமூலம் பெற்றனர். கேட்ட கேள்விகள் பலவற்றுக்கு நான் மறுத்த போது அவர்கள் ஏற்கெனவே சில தோழர்கள் ஒப்புக்கொண்டவற்றைக் காண்பித்து இனியும் மறைக்க முடியாது என்றனர். மறைக்கவே முடியாத சிலவற்றை நான் ஒப்புக்கொண்டேன் பலவற்றை நான் ஒப்புக்கொள்ளவில்லை. மேலும் சில பேரைக் காப்பாற்றவென்று அவர்களது குற்றங்களை நான செய்ததாக ஒபடுக்கொண்டேன். எப்படியோ நான் தண்டணை அனுபவிக்கப் போகிறேன். ஆனால் சிலரைச் சிறிய விடயங்களுக்காகத் தண்டனை அனுபவிக்கவிடாது செய்தேன். காப்பாற்றக் கூடியவர்களைக் காப்பாற்றினேன். எனது வாக்குமூலம் 8 பக்கங்களுக்குள் மட்டும் தான் இருந்தது. சிலரது வாக்குமூலம் 150-500 பக்கங்களையும் தாண்டியது.

**கட்சியிலிருந்து எப்போது, என்ன காரணங்களினால் விலகினீர்கள்?**

சிறைக்குள்ளிருக்கும் போதே பல பல விவாதங்கள் நடந்தன. குறிப்பாக ஏப்ரல் சம்பவங்கள், விஜேவீரவின் தன்னிச்சையான போக்கு, கட்சிக்குள் ஊழியர் கொள்கை பற்றிய பிரச்சினைகள் குறித்து எனக்கு இருந்த கருத்து முரண்பாடுகளை விவாதித்து தீர்த்துக் கொள்ளக்கூடிய பொறிமுறைகள் இருக்கவில்லை. விசாரணையின் போது விஜேவீர அளித்த உரையை நான் ஏற்றுக்கொள்ளவில்லை. மக்களுக்கு எமது உண்மையை ஏற்றுக்கொண்டு சுயவிமர்சனம் செய்தாக வேண்டும் என்று நான் கூறினேன். ஆனால் முதலாளித்துவ நீதிமன்றமொன்றில் தான் சுயவிமர்சனம் செய்யத் தயாராயில்லை எனக் கூறினார்.

சிறைக்குள்ளிருந்த தோழர்களை ஒன்று திரட்டி ஒரு கூட்டம் நடத்த வேண்டும் என்று நான் கூறினேன். ஆனால் அதற்கும் அவர் ஒப்புக்கொள்ளவில்லை. நான் ஒரு முறை சிரமப்பட்டு ஒரு கூட்டத்தை ஒழுங்கு செய்தேன். அதில் விஜேவீர, உயங்கொட, போபகே, கெலி சேனநாயக்க, லொக்கு அத்துல, குமாநாயக்க, போன்றவர்கள் கலந்து கொண்டனர். ஆனால் லொக்கு அத்துல சத்தமிட்டு குழப்பிவிட்டுப், போய்விட்டார்.

→ 11

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# புதிய இடதுசாரி ஐக்கிய முன்னணிக்கு ஜே.வி.பி முயற்சி!



ஜே.வி.பி. மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்று வருகிறது. ஜே.வி.பி.யின் மீது அரச அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்படுவதற்கான சூழல்கள் வெளிப்பட்டு வருகின்றது. மாகாண சபைத் தேர்தல் நெருங்கி வருகின்றது. இந்த நிலையில் ஜே.வி.பி. இடதுசாரி இயக்கங்களை ஒன்று திரட்டி ஒரு அணியின் கீழ் அவற்றைக் கொண்டு வரும் முயற்சியில் இறங்கியுள்ளன. இது குறித்து சரிநிகருக்கு கிடைத்த செய்திகளின்படி இப்போதைக்கு இது குறித்து நவ சமசமாஜக் கட்சி. மற்றும் "தியெச குழு" ஆகிய அணிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியிருப்பதாகத் தெரிகிறது

### முன்னைய இடதுசாரிகள் கூட்டு

கடந்த வருடம் நடத்தப்பட்ட மே தினத்தின் போது "ஐக்கிய இடதுசாரிகள் கூட்டு மேதினம்" எனும் பேரில் கட்சிகள், தொழிற்சங்கள் 14 ஒன்றிணைந்தததானது வெறுமனே மேதினத்தை நினைவு கூர்ந்து விட்டு கலைந்து விடுவதற்கல்ல. இடதுசாரி அமைப்புகளை ஓரணியில் திரட்டி அவற்றை ஒரே குடையின் கீழ் கொண்டு வந்து பொதுவான வேலைத் திட்டங்களை முன்னெடுப்பதற்கே.

அந்தக் கூட்டணியில் நவ சமசமாஜக் கட்சி, புதிய ஜனநாயகக்கட்சி, சோஷலிச மக்கள் கட்சி, மாவோயிச இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, தியெச கல்வி வட்டம், தேசிய காணி, விவசாய சீர்திருத்த இயக்கம், இலங்கை ஆசிரியர் சங்கம், "வலையத்தில் நாங்கள்" இயக்கம், மக்கள் விவாத கேந்திரம், அரசாங்க ஐக்கிய தொழிலாளர் சம்மேளனம், அரசாங்க லிகிதர் சேவை சங்கம் என்பன இணைந்திருந்தன. அப்போதே இந்த அமைப்புகள் ஒன்றிணைந்து, ஜே.வி.பி.யை அதனுடன் இணைக்க முற்பட்ட போதும் அது தோல்வியில் முடிந்ததாக அப்போது அக்கூட்டணியைச் சேர்ந்தவர்கள் தெரிவித்து வந்தார்கள்.

இதே வேளை அந்தக் கூட்டணி இன்னும் உறுதியாக ஒரு அமைப்பு வடிவம் பெறவில்லை என்பது வெளிப்படை. பல்வேறு விடயங்களில் உடன்பாடு காணும் நோக்குடன் தொடர்ச்சியாக தங்களுக்குள் விவாதங்களை நடத்தி வருகின்றனர். இதன் காரணமாகவே இம்முறை கொழும்பில் மீண்டும் இவ்வமைப்புகள் ஒன்று கூடி மே தினம் நடத்திய போதும் அதனை "புதிய இடதுசாரி முன்னணி ஏற்பாட்டுக் குழு" எனும் பெயரில் நடத்தியது. நீண்ட காலமாக ஸ்டாலினிச-ட்ரொஸ்கிச முரண்பாடுகளைக் கொண்ட தரப்புகள் கூட, கருத்தாடலொன்றுக்கூடாக ஒரு பொது உடன்பாட்டுக்கு வர முடியும் என்ற நம்பிக்கையில் செயற்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

இன்னமும் சில விடயங்களில் உடன்பாடு காண முடியாமல் இழுபடுவதற்கான அடிப்படைக் காரணமும் இந்த ட்ரொஸ்கிச-ஸ்டாலினிச முரண்பாடுகள் தான் என்றாலும் அப்படிப்பட்ட கருத்து முரண்பாடுகளுடனும் தொடர்ந்து இயங்கலாம் என்ற நம்பிக்கையைக் கொடுத்துள்ளது என்று ஒரு கட்சியைச் சேர்ந்த தலைவரொருவர் சரிநிகருக்கு தெரிவித்தார். எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலுக்கு இவ்வமைப்புகள் ஒன்று சேர்ந்து போட்டியிடுவதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆனால் ஒரு கட்சியாக பதிவு செய்வதற்கு தாமதமாகி விட்டதனால் இந்த அமைப்பின் கீழ் இருக்கும் ஏதாவது ஒரு அமைப்பின் பெயரில் போட்டியிட அல்லது ஏனைய அமைப்புகள் அதற்கு உடன்படாத பட்சத்தில் சுயேட்சைக் குழுவாகப் போட்டியிடவும் தீர்மானித்துள்ளன.

### இது வரை தனிமைப்பட்ட ஜே.வி.பி. இனி...?

இந்த நிலையில் தான் அப்படிப்பட்ட ஐக்கியத்தை இது வரை பொருட்படுத்தாது இருந்த ஜே.வி.பி., இம்முறை தாமாகவே ஒரு இடதுசாரி ஐக்கிய கூட்டணியொன்றை அமைக்கும் முயற்சியில் இறங்கியுள்ளது. 1994ஆம் ஆண்டு ஜே.வி.பி. பகிரங்க அரசியலில் மீண்டும் வந்து செயற்படத் தொடங்கியதிலிருந்து பெருமளவு அதன் உறவுகள் அனைத்தும், மக்கள் ஐக்கிய முன்னணி மற்றும் இலங்கை முற்போக்கு முன்னணி போன்ற இனவாத அமைப்புகளுடன் தான் அதிகளவு இருந்து வந்தது என்பது எவரும் அறிந்தது. ஆனால் பல்வேறு காரணங்களினால் அந்த உறவுகளை அது துண்டித்துக் கொண்டுள்ளதை அவதானிக்க முடிகிறது. அதே வேளை ஜே.வி.பி. கடந்த காலங்களைப் போலல்லாது எல்லா அமைப்புகளையும் பகைத்துக் கொண்டு தனிமைப்பட்டு போனதை அடையாளம் கண்டு திருத்திக் கொண்டுள்ளதையும் காண முடிகிறது. அதன் விளைவாக பல்வேறு தொழிற்சங்கங்கள், மாணவர் இயக்கங்கள், பல்வேறு வெகுஜன இயக்கங்கள் எனப் பல்வேறு சக்திகள் மத்தியிலும் சேர்ந்து செயற்படத் தொடங்கியிருப்பதை பலராலும் அறிய முடிகிறது. ஜே.வி.பி.யின் இந்த முயற்சிகள் குறித்து பல்வேறு தரப்பினர் மத்தியிலும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளன.

### 'தியெச'-ந.ச.ச.க. குழுவினர்

ஆனால் இதனை ஒரு அமைப்பாக உருவாக்கும் எண்ணம் இல்லை என்றும் அதற்கு பல்வேறு தத்துவார்த்த அரசியல் முரண்பாடுகள் குறித்து விவாதித்து உடன்பாடு காண வேண்டி வருமென்றும் அது வரை உடன்படக் கூடிய குறைந்தபட்ச விடயங்களில் சேர்ந்து செயற்படுவது குறித்தே பேசி வருவதாகவும் "தியெச" அமைப்பைச் சேர்ந்த பெட்ரிக் பெர்ணாண்டோ சரிநிகருக்கு தெரிவித்தார்.

தியெச குழுவானது 1971 ஏப்ரல் கிளர்ச்சியில் கலந்து கொண்டு பின் கருத்து முரண்பாடுகளின் காரணமாக விலகியவர்களால் அமைக்கப்பட்டதே இது. 25 வருடங்களுக்கும் மேலாக ஜே.வி.பி.யுடன் எந்தவித உடன்பாடும் இல்லாமல், அவர்களை விமர்சித்து வந்த இக்குழுவினர் தற்போதைய ஜே.வி.பி.யின் முயற்சியை கௌரவிப்பதாகக் கூறுகின்றனர். ஜே.வி.பி. இப்படிப்பட்ட ஒரு முயற்சிக்கு வந்திருப்பதே பெரிய காரியமென்றும் எனவே இதனை முறியவிடாதபடி சேர்ந்து செயற்படக்கூடிய விடயங்களில் தாங்களும் ஒன்றிணையப் போவதாக பெட்ரிக் சரிநிகருக்குத் தெரிவித்தார். "மரபு இடதுசாரிக் கட்சிகள் அனைத்தும் இன்று இந்த முதலாளித்துவ அரசாங்கத்துடன் சேர்ந்து கொண்டு தொழிலாளர்களை ஒடுக்கத் துணை போகின்றன.... எங்களைப் பொறுத்தளவில் இடதுசாரிப் பலத்தைக் கட்டியெழுப்புவது குறித்து இதுவரைகாலம் விவாதங்களையும், கருத்தாக்க விவகாரங்களிலும் ஈடுபட்டு வந்திருக்கிறோம். எங்களால் ஆட்பலத்தை தந்துதவக் கூடிய நிலைமை இல்லாத போதும் பல்வேறு அமைப்புகளுடனும் தத்துவார்த்த வேலைகளில் அதிகபட்ச ஒத்துழைப்பு வழங்க முடியும்...." என தியெச குழுவைச் சேர்ந்த வசந்த திசாநாயக்க "சித்திஜய எனும் பத்திரிகைக்கு வழங்கியுள்ள பேட்டியொன்றில் தெரிவித்துள்ளார்.

நவ சமசமாஜக் கட்சியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரத்ன "அடக்குமுறை மற்றும் தொழிற்சங்க வேலைகள் போன்றவற்றுக்கு அப்பால் ஒன்றிணைவதில் தடைகள் இருக்கின்றன. என்றாலும் உடன்படக்கூடிய குறைந்தபட்ச விடயங்களிலென்றாலும் ஒன்றிணைந்து தொழிற்பட முடியும் என்று எதிர்பார்க்கிறோம்.." என்கிறார்.

### அரசாங்க-இடதுசாரிகள்

பத்திரிகை அச்சுக்குப் போகும் வரை ஜே.வி.பி. வேறு கட்சிகளுடன் பேசியதாகத் தகவல் இல்லை. ஆனாலும் வேறு எந்தப் இடதுசாரி-முற்போக்கு சக்திகளுடனும் எந்த பிடிவாதமும் எம்மிடமில்லை என ஜே.வி.பி. தெரிவிக்கின்றது. ஆனாலும் எந்த முதலாளித்துவ சக்திகளுடனும் நிச்சயமாக இணையப் போவதில்லை என்றும் தெரிவிக்கின்றனர். அது போல அரசாங்கத்துடன் இருக்கின்ற இடதுசாரிக் கட்சிகள் எவற்றுடனும் பேசத் தயார், ஆனால் கூட்டு செயற்பாடுகளில் ஈடுபடுவதாயிருந்தால் அவர்கள் அரசாங்கத்திலிருந்து வெளியேறிச் செயற்படுவதையே தாங்கள் விரும்புவதாகவும் கூறி வருகின்றனர்.

அரசாங்கத்துடன் இணைந்திருக்கிற இடது சாரிக் கட்சிகளைப் பொறுத்தவரை (கம்யூனிஸ்ட் கட்சி, லங்கா சம சமாஜக் கட்சி, ஸ்ரீலங்கா மக்கள் கட்சி (வை.பி. டி.சில்வா தலைமையிலான), நவ சம சமாஜக் கட்சி (வாசுதேவ நாணயக்கார அணி) அவை அனைத்துமே வெறும் பெயர்ப்பலகையுடன் இருக்கின்ற, மரபார்ந்த, மக்களிடமிருந்து அந்நியப்பட்டுள்ள கட்சிகளாகவே உள்ளன. இவை அனைத்தும் தொழிலாளர்களுக்கெதிரான அரசின் நடவடிக்கைகள் அனைத்துக்கும் துணைபோவனவாகவே உள்ளன. அரசாங்கத்தின் பல அடக்குமுறைகளை எதிர்த்துச் செயற்படுவனவாக இல்லை. அரசாங்கத்தைக் கவிழாமல் பாதுகாக்க வேண்டும் எனும் நிலைப்பாட்டில் தொடர்ந்தும் இருக்கின்றன. குறிப்பாகத் தொழிலாளர்களையும், சிறுபான்மை சமூகங்களையும் அடக்குவதற்காக அரசு பாவித்துவரும் கருவியான அவசரகாலச் சட்டத்துக்கு இன்னும் ஆதரவு தெரிவித்து வருகின்றன.

புதிய தலைமுறையினரை இக்கட்சிகளில் காண்பதே அரிது. இன்னமும் அக்கட்சிகள் தாம் இருப்பதை உணர்த்தி வரும் காரணி எதுவெனில் நாற்பது வருடத்துக்கு முன்னர் ஆற்றிய அரசியல் பங்களிப்பே. அதைச் சொல்லியே இது வரை காலம் கடத்தியாகிவிட்டது.

### ஐ.தே.க. = பொ.ஐ.மு அடுத்தது யார்?

இது வரை காலம் ஐ.தே.க.வை ஒரு முதலாளித்துவக் கட்சியாகவும் ஸ்ரீ.லங்கா சுதந்திரக் கட்சியை ஒரு முற்போக்கு சக்தியாகவும், கருதி வந்த இந்த மரபு இடசாரிக் கட்சிகள், ஒவ்வொரு முறையும் ஐ.தே.க. எனும் முதலாளித்துவக் கட்சியை வீழ்த்துவதற்காக ஸ்ரீ.ல.சு.க. எனும் "முற்போக்கு" கட்சியைக் காப்பாற்றி வந்துள்ளன. அதே போல ஸ்ரீ.ல.சு.க. கட்சியும் 1956ஆம் ஆண்டுக்குப் பின் ஆட்சியமைத்த ஒவ்வொரு தடவையும் இடதுசாரிக் கட்சிகளின் துணையின்றி ஆட்சியமைத்தது கிடையாது. ஸ்ரீ.ல.சு.க.-வும் இது வரை பாம்புக்குத் தலையையும் மீனுக்கு வாலையும் காட்டும் வகையில் இடசாரிக் கட்சிகளுக்கு தம்மை ஒரு தேசிய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புகின்ற ஒரு கட்சியாகவும் உலக ஏகாதிபத்திய மற்றும் பல் தேசியக் கம்பனிகளுக்கு தம்மை ஒரு முதலாளித்துவ பொருளாதார சக்தியாகக் காட்டியும் வந்திருக்கிறது. ஆனால் இறுதியாக 1994இல் ஆட்சியமைத்த பொது ஜன ஐக்கிய முன்னணியானது இன்று முழுமையாக அம்பலப்பட்டு நிர்வாணமடைந்துள்ளது. இன்று அது திறந்த பொருளாதாரம், இன ஒடுக்குமுறை, தொழிலாளர்களை ஒடுக்குதல், பல்தேசியக் கம்பனிகளிடம் தங்கியிருத்தல், அமெரிக்காவை திருப்திபடுத்துதல் என்பவற்றில் ஐ.தே.க.வை விட அதிகளவில் செய்து வருகிறது.

எனவே அரசுடன் இணைந்துள்ள இடதுசாரிக் கட்சிகள் இத்தனைக்குப் பின்னரும் பொ.ஐ.மு.வைக் காப்பாற்றி வருகின்றன. இதில் கவனிக்க வேண்டிய முக்கிய விடயம் என்னவென்றால் இனிவரும் தேர்தல்களில் பொ.ஐ.மு.-வினது தேர்தல் விஞ்ஞாபனத்துக்கும், ஐ.தே.-க.வினது விஞ்ஞாபனத்துக்கும் இடையில் வித்தியாசம் சிறிதும் இருக்கப்போவதில்லை என்பதே. எனவே அடுத்த பலம் வாய்ந்த சக்தியாக இருக்கின்ற ஜே.வி.பி.யினுடைய விஞ்ஞாபனமே இவற்றிலிருந்து மாறுப்பட்டு இருக்கப்போகின்றது என்பது குறித்து அரசியல் அரங்கில் இன்று பரவலாகப் பேசப்பட்டு வருகிறது.

### உடன்பாடும், முரண்பாடும்

இன்றைய இந்த புதிய கூட்டுக்கான முயற்சியில் முக்கியமாக கவனம் செலுத்த வேண்டிய ஒன்று தான் இன்றைய நிலையில் அரசாங்கம் இன்னொரு அடக்குமுறையை நடத்துமாயிருந்தால் அதற்கு ஜே.வி.பி. தனித்து முகம் கொடுக்க நேரிடாது. முன்னைய அடக்குமுறைகளின் போது கண்ட முக்கிய அம்சம் தான், அந்த சந்தர்ப்பங்களிலெல்லாம், ஏனைய இடதுசாரி சக்திகள் அனைத்தையும் அது பகைத்துக் கொண்டிருந்தமை, அவற்றிலிருந்து தனித்துப் போனமை, நட்பு சக்திகள் என எவற்றையும் கொண்டிராமை என்பன. இதுவே கடந்த கால வேட்டையாடல்கள் சாத்தியமாவதற்கு வழிவகுத்தன. இந்த புதிய முயற்சிகள் அந்த வகையில் முக்கியத்துவம் வாய்ந்தது. 1981இல் லங்கா சமசமாஜக் கட்சி, கொம்யூனிஸ்ட் கட்சி, சீ.எம்.யு (பாலா தம்புவின்)என்பன ஜே.வி.பி.யுடன் இணைந்து "அடக்குமுறைக்கு எதிரான ஐக்கிய செயற்பாடு" எனும் வேலைத்திட்டத்தை முன்னெடுத்தனர். அது பின்னர் முறிவடைந்ததன் விளைவாக 1983 யூலையில் ஜே.வி.பி. தடைசெய்யப்பட்டு வேட்டையாடப்பட்ட போது கைகொடுக்க எவருமிருக்கவில்லை என்பதையும் யாரும் மறந்திருக்க மாட்டார்கள்.

மேலும் இன்றைய தொழிலாளர் போராட்டங்கள் அனைத்தின் போதும் அரசாங்கத்தின் அடக்குமுறை மோசமாகி வருகிற நிலையில் சிதறி துண்டு துண்டாக இருக்கின்ற தொழிற்சங்கங்கள் ஒன்றுபட்டு இனி செயற்படுவது தொழிலாளர் போராட்டங்களுக்கு வலுசேர்த்து நம்பிக்கையை ஊட்டுவனவாக இந்தக் கூட்டு இருக்கின்றன. ஆனால் இனப்பிரச்சினை குறித்த விடயத்தை நிகழ்ச்சி நிரலில் சேர்த்துக் கொண்டால் அதுவே பிளவுக்கு உடனடியாக வழிவகுத்துவிடும் என்கின்ற காரணங்களினால் அதனைப் பின்போட்டுவிட்டு, ஆரோக்கியமாக இக்கூட்டு நகர்ந்தால் அதனை சேர்த்துக் கொள்ளலாம் என்று கருதுகின்றன. இந் நிலைப்பாடு எந்தளவு ஏற்புடையது என்பதை அவர்கள் தான் விளக்க வேண்டும்.

**-ஜென்னி**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மாகாண சபைத் தேர்தல் : கொழும்பு வாழ் தமிழ் மக்களின் அரசியல் எதிர்காலம் ?

மாகாணசபைத் தேர்தலுக்கான அமளிகள் ஆரம்பித்து விட்டன. கொழும்பு மாவட்டத்தில் தேசிய கட்சிகளும் சிறுபான்மைக் கட்சிகளும் இதற்கான ஆயத்தங்களில் மும்முரமாக ஈடுபடத் தொடங்கியுள்ளன. கட்சிகளுக்கு அப்பால் பல்வேறு சுயேட்சைக் குழுக்களும் கூட தேர்தல் நடவடிக்கைகளில் இறங்கியுள்ளன. கொழும்புத் தமிழ் மக்களின் நிலையில் தற்போது பாரிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளது.

கொழும்பில் பெரும்பான்மையாகவும் அதேவேளை பெரிதாக கவனிப்பிற்கு உள்ளாகாமலும் இருந்த விளிம்பு நிலை மக்கள் குறிப்பாக தோட்டங்கள் எனப்படும் வசதி குறைந்த தொடர் குடியிருப்புகளிலும் சேரிப்புறங்களிலும் வாழ்ந்த மக்கள் இன்று கவனிப்புக்கு உரியவர்களாக மாறியுள்ளனர்.

இம்மக்களுக்கு பிரஜாவுரிமையும் அதன்வழி வாக்குரிமையும் கிடைத்தமை, வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் காரணமாக மேன்நிலை நோக்கிய அசைவு அதிகரித்தமை, பொது அறிவு மட்டம் வளர்ச்சியடைந்தமை, தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ் பிரதிநிதிகளின் கல்வி அபிவிருத்தி நடவடிக்கைகளினால் இவர்கள் மத்தியில் கல்வி வளர்ச்சி ஏற்பட்டமை, விகிதாசார பிரதிநிதித்துவத்தினால் செல்வாக்குள்ள பிரஜைகளாக இவர்களும் மாறியமை, படையினரின் தொடர்ச்சியான கெடுபிடிகள் போன்ற அம்சங்கள் இவர்களை முக்கிய அரசியற் செயற்பாடுள்ள சக்திகளாக மேல் கொண்டு வந்துள்ளன. கொழும்புத் தமிழர்கள் என்றால் கறுவாக்காடு, வெள்ளவத்தை போன்ற இடங்களில் வாழும் யாழ்ப்பாணத் தமிழர்களையும், இந்திய வம்சாவழி வர்த்தகர்களையும் கருதியிருந்த நிலை மாறி இன்று விளிம்பு நிலை மக்களும் கொழும்புத் தமிழர் என்ற வரையறைக்குள் பிரதான இடத்தினை வகிக்கும் நிலை மேலோங்கியுள்ளது.

இதைவிடப் போரினால் ஏற்பட்ட இடப்பெயர்வுகளும் திறந்த பொருளாதாரத்தினால் ஏற்பட்ட தலைநகரை நோக்கிய படையெடுப்பும் கூட கொழும்பில் நிரந்தரமாக வாழும் தமிழர்களின் எண்ணிக்கையை பாரியளவில் அதிகரிக்கச் செய்துள்ளது. ஏறத்தாழ இவர்களின் பெரும்பாலானவர்களும் கொழும்பில் வாழும் விளிம்புநிலை மக்களுக்கு சமனான அல்லது அதிலும் சற்று கூடிய தரத்தினைக் கொண்டவர்களாகவே விளங்குகின்றனர். இவ்வாறான நிலைமை கொழும்புத் தமிழர்களை ஒரு இனக் குழுமமாகவும் தனியான சமூக சக்தியாகவும் தனியான ஒரு அரசியல் சக்தியாகவும் வளர்த்தெடுத்துள்ளது. இவர்களது அரசியல் அபிலாசைகள் முன்னரையும் விட பாரியளவு வளர்ச்சி கண்டுள்ளது. இவ்வளர்ச்சிப் போக்கு அவர்களின் அரசியலிலும், அரசியல் அபிலாசைகளை தீர்ப்பதற்கான தீர்வு நடவடிக்கைகளிலும் பாரிய மாற்றங்களை வேண்டி நிற்கின்றன. இதுவரை கால நிலைமைகளில் மாற்றங்களைக் கொண்டு வராமல் இவை சாத்தியப்படாது என்ற நிலை இன்று தோன்றியுள்ளது.

## இதுவரைகால நிலைமைகள்

இதுவரை காலமும் தமிழ் தலைமைத்துவங்களினால் கொழும்பு தமிழர்களை ஒரு தனியான இனக்குழுமமாகவும் ஒரு அரசியல் சக்தியாகவும் பார்க்கும் நிலை இருக்கவில்லை. மாறாக வடக்கு கிழக்கு அரசியலின் தொடர்ச்சியாகவும் மலையக அரசியலின் தொடர்ச்சியாகவுமே பார்க்கப்பட்டது. அதாவது வடக்கு கிழக்கு அரசியல் நிலையில் இருந்தும் மலையக அரசியல் நிலையிலிருந்துமே கொழும்புத் தமிழர்களின் அரசியல் பார்க்கப்பட்டது. தேர்தல்களில் கூட கொழும்புத் தமிழர்களின் அரசியல் அபிலாசைகளைத் தீர்ப்பதற்கான கோரிக்கைகள் கருத்துக்கள் முன் வைப்பதற்குப் பதிலாக வடக்குகிழக்கு அல்லது மலையக அபிலாசைகளைத் தீர்ப்பதற்கான கோரிக்கைகளும் கருத்துக்களுமே முன்வைக்கப்பட்டன. உண்மையில் கொழும்புத் தமிழர்களுக்கென தனியான அரசியல் அபிலாசைகள் எதுவுமில்லை என்ற வகையிலேயே விடயங்கள் பார்க்கப்பட்டன.

ஆனால் நிலையான உண்மை அதற்கு மாறானதாக உள்ளது. வடக்குகிழக்குப் பிரச்சினை தீர்க்கப்பட்டாலும், மலையகப் பிரச்சினை தீர்க்கப்பட்டாலும் தொண்ணூறு வீதமான கொழும்புத் தமிழர்கள் கொழும்பிலேயே நிரந்தரமாக வசிக்கப் போகிறார்கள். அதுவும் சில வேளை இனக்கலவரம் போன்ற நெருக்கடி ஏற்பட்டால் கொழும்பின் உயர் வர்க்கத் தமிழர்கள் தற்காலிக இடப்பெயர்வுக்கு உட்படலாம். ஆனால் விளிம்பு நிலைத் தமிழர்கள் தொடர்ந்தும் கொழும்பிலேயே வசிக்கப்போகின்றார்கள்.

எனவே கொழும்புத் தமிழர்கள் என்ற தனியான ஒரு இனக்குழுமம் தொடர்ந்தும் கொழும்பில் நிலையாக வாழப்போகின்ற தருணத்தில் பாதுகாப்பு உட்பட அவர்களின் அரசியல் அபிலாசைகளை தீர்ப்பதற்கான தேவையும் தொடர்ந்து இருக்கப் போகின்றது. இந்நிலையில் கொழும்புத் தமிழர்களுக்கான அரசியல் தீர்வு என்ன என்பது பற்றி ஒரு தேடலை மேற்கொள்ள வேண்டிய நிலை முன்னரை விட இன்று பெரிதும் அதிகரித்துள்ளது.

கொழும்புத் தமிழர்களுக்கான அரசியல் தீர்வினைத் தீர்மானிக்கும் போது முழு இலங்கையினதும் பொதுவான அரசியல் நிலையில் இருந்தும், கொழும்புத் தமிழர்களின் குறிப்பான அரசியல் நிலையில் இருந்தும் அதனைக் கண்டு கொள்ள நாம் முயல வேண்டும்.

முழு இலங்கையினதும் பொதுவான நிலையின் பிரதான அம்சம் பேரின அரசாங்கங்களே தொடர்ந்தும் பதவியில் இருக்கின்றன என்பதாகும். இப்பேரின அரசாங்கமும் அதன் பின்னால் உள்ள அழுத்தசக்திகளும் சிறுபான்மை இனக் குழுமங்களை தொடர்ச்சியாக ஒடுக்குவதையே தமது கொள்கைகளாகக் கொண்டுள்ளன. சிறுபான்மை தேசிய இனக்குழுமங்களோடு அதிகாரங்களைப் பங்கிட்டுக் கொள்வதற்கு அவை ஒரு போதும் முன்வருவதில்லை. அதிகாரங்கள் பேரினச் சமூகத்திடமும் அவர்களின் அரசாங்கத்திடமும் குவிந்திருப்பது சிறுபான்மைத் தேசிய இனக்குழுமங்கள் தமது அரசியல் அபிலாசைகளுக்கப்பால் சிறிய அடிப்படை அரசியல் அபிலாசைகளான கல்வி, சுகாதாரம், வேலைவாய்ப்பு, குடியிருப்பு, அரசாங்கத் தொடர்புகள் போன்றவற்றைத் தீர்ப்பது கூட அவர்களுக்குக் கடினமானதாக உள்ளது. இவ் அரசியல் அபிலாஷைகளைத் தீர்த்துக் கொள்வதானால் குறைந்த பட்சம், அடிப்படைத் தேவைகளைப் பொறுத்தமட்டிலாவது அவ்வினக் குழுமத்திற்கு அதிகாரங்கள் வழங்குவது அவசியமாயுள்ளது.

கொழும்புத் தமிழர்களில் உயர் வர்க்கத் தமிழர்களுக்கு இதன் தேவை சற்றுக் குறைவாக இருந்த போதும் விளிம்பு நிலைத் தமிழர்களுக்கும் இடை நிலைத் தமிழர்களுக்கும் இவ் அரசியல் அதிகாரம், மிக மிக அவசியமாகவே உள்ளது. இதன் மூலமே, அவர்களின் அடிப்படைத் தேவைகள், பூர்த்தியாவதோடு மேல்நிலை நோக்கிய அசைவும் சாத்தியமாகும்.

இரண்டாவது அம்சம், வடக்கு கிழக்கிற்கோ, மலையகத்திற்கோ முன் வைக்கப்படும் அரசியல் தீர்வுகள், கொழும்புத் தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை தீர்க்கப் போவதில்லை என்பதாகும். எனவே கொழும்புத் தமிழர்களுக்கென, தனியான அரசியல் தீர்வு அவசியமாக உள்ளது.

மூன்றாவது அம்சம், சர்வதேச நிர்ப்பந்தங்களினாலும், பல்வேறு வகையான வேறு அழுத்தங்களினாலும் வடக்கு கிழக்கு மக்களுக்கென, ஒரு தீர்வும், அதை ஒட்டிய அரசியல் யாப்பு மாற்றங்களும் விரைவில் வர வேண்டியது தவிர்க்க முடியாததாக உள்ளது. இச்சந்தர்ப்பத்தில், கொழும்புத் தமிழர்களுக்கான தீர்வுகளும் அதில் வருவதற்கான முயற்சிகளை நாம் மேற்கொள்ள வேண்டும். இச்சந்தர்ப்பத்தைத் தவற விட்டால, பல விலைகளைக் கொடுத்தே கொழும்புத் தமிழர்கள் தங்களுக்கான அரசியல் தீர்வினை காண வேண்டியேற்படும். இவ்வாறான கோரிக்கைகளை முன் வைத்தல், வடக்கு கிழக்கு கோரிக்கைகளையோ, போராட்டத்தினையோ கொச்சைப்படுத்துவதாக அமையாது, மாறாக அதனை வலுப்படுத்துவதாகவே அமையும். தற்போது வடக்கு கிழக்குப் போராட்டத்துக்கு கொழும்பு தமிழ் மக்கள் தார்மீக ஆதரவினை வழங்கி வருகின்றனர் என்பது அனைவரும் அறிந்த உண்மையாகும்.

## கொழும்புத் தமிழர்களின் குறிப்பான நிலைமைகள்

இதில் பிரதான அம்சம், கொழும்புத் தமிழர்கள் ஒரு நிலத்தொடர்ச்சியான பிரதேசத்தில் செறிந்து வாழாமல், பெரும்பான்மை இனத்திடையே சிதறி வாழ்தல் ஆகும். இதனால், கொழும்பு மக்கள் அனைவரையும், இணைக்கக் கூடிய பிரதேசத்திற்கு அதிகாரத்தினை வழங்குதல் என்பது சிரமமாக உள்ளது.




இரண்டாவது அம்சம், கொழும்புத் தமிழர்களில் பெரும்பாலானவர்கள், மாநகர சபை எல்லைக்குள் வாழ்கின்ற நிலையாகும். கொழும்பு மாவட்டத்தின் ஏனைய பிரதேசங்களில் இவர்கள் மிகக் குறைவாகவே வாழ்கின்றனர். அவிசாவளைத் தொகுதி மட்டும் இதற்கு விதிவிலக்காக உள்ளது. அத்தொகுதிப் பெருந்தோட்டங்களில் தமிழர் சற்று செறிவாக வாழ்கின்றனர். எனவே மாநகர சபை மட்டத்திலும், ஒரு அதிகாரப் பிரிவு பற்றி யோசிக்க வேண்டும்.

மூன்றாவது அம்சம் இவ்வாறு தமிழர்கள், சிதறி வாழ்கின்ற போதும், சில குறிப்பிட்ட பிரதேசங்களில், மிகச் செறிவாக வாழ்கின்ற நிலை இருப்பதாகும். குறிப்பாக கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் கொட்டாஞ்சேனைப் பிரதேசம், வெள்ளவத்தைப் பிரதேசம், மட்டக்குளியில் காக்கை தீவுப் பிரதேசம், ஊறுகொடவத்தையில் தமிழ் நாடு என அழைக்கப்படும் பிரதேசம், கொச்சிக்கடை-ஜிந்துப்பிட்டி பிரதேசம் என்பவற்றில் தமிழர்கள் மிகச் செறிவாக வாழ்கின்றனர். இதைவிட அவிசாவளைப் பகுதியில் பெருந்தோட்டப் பிரதேசங்களிலும் செறிவாக வாழ்கின்றனர்.

## சரியான அரசியல் தீர்வு

மேற்கூறிய நிலைமைகளைக் கவனத்தில் எடுத்து நோக்கும் போது, பின்வரும் அம்சங்கள் அடங்கிய அரசியல் தீர்வுகளை முன் வைப்பது தொடர்பாக நாம் யோசிக்கலாம்:

1. கொழும்பு மாவட்டத்தினை ஒரு பல்லின மாவட்டமாக மாற்றுதல் வேண்டும். அதற்கு தனித்து சிங்கள மக்கள் வாழ்கின்ற பிரதேசங்களை கொழும்பு மாவட்டத்திலிருந்து நீக்கி அருகிலுள்ள சிங்கள மாவட்டங்களுடன் அதனை இணைத்தல் வேண்டும். அதே வேளை கம்பஹா மாவட்டத்தில் தமிழர் கணிசமான அளவு வாழும் வத்தளைப் பிரதேசத்தினை கொழும்பு மாவட்டத்துடன் இணைக்க வேண்டும்.

2. இப்பல்லின மாவட்டத்துக்கென ஒரு தனியான அதிகார அலகு உருவாக்கப்படல் வேண்டும். அது ஒரு தனியான மாகாண சபையாகக் கூட இருக்கலாம்.

3. இவ்வதிகார அலகின் மையத்தில் தமிழ்ப்பிரிவு ஒன்று உருவாக்கப்பட்டு கொழும்பு தமிழ் மக்களின் கல்வி, சுகாதாரம், வேலைவாய்ப்பு, குடியிருப்பு அரச தொடர்பு, தமிழ் மொழி உபயோகம் சம்பந்தமான அதிகாரங்கள் அதற்கு வழங்கப்படல் வேண்டும்.

4. தற்போது மலையகத்தில் உருவாக்கப்பட்ட பெருந்தோட்ட உள்கட்டமைப்பு அமைச்சுப் போன்று புதிய அதிகார அலகின் மையத்தில் கொழும்புத் தமிழர்களுக்கான உள்கட்டமைப்பு அமைச்சு ஒன்று உருவாக்கப்பட்டு, தமிழ்ப் பிரிவிடம் ஒப்படைக்கப்படல் வேண்டும். கொழும்புத் தமிழர் சம்பந்தப்பட்ட அனைத்து அபிவிருத்தி நடவடிக்கைகளையும் தமிழ் பிரிவினூடாகவும் அதன் பொறுப்பிலுள்ள உள் கட்டமைப்பு அமைச்சினூடாகவும் மேற்கொள்வதற்கு ஆவன செய்ய வேண்டும்.

5. இத்தமிழ்ப் பிரிவு கொழும்பு மாவட்ட தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களையும் புதிய அதிகார அலகின் தமிழ் உறுப்பினர்களையும் கொண்டு அமைக்கப்படல் வேண்டும்.

6. மாநகர சபை மட்டத்திலும் தமிழ்ப் பிரிவொன்று அமைக்கப்பட்டு அதன் எல்லைக்குள் உள்ள தமிழ் மக்கள் தொடர்பான அதிகாரங்கள் அதற்கு வழங்கப்படல் வேண்டும்.

7. கொழும்பு மாவட்டத்தில் தமிழ் மக்கள் செறிவாக வாழ்கின்ற வெள்ளவத்தை, கொட்டாஞ்சேனை, கொச்சிக்கடை-ஜிந்துப்பிட்டி, காக்கைதீவு, ஒறுகொடவத்தை-தமிழ் நாடு பகுதிகளில் தனியான பிரதேச சபைகள் உருவாக்கப்பட்டு அதற்கு அதிகாரங்கள் கையளிக்கப்படல் வேண்டும்.

8. இப்புதிய முயற்சிகள் தொடங்குவதற்கு முன்னர் தற்போது தற்காலிகமாக மேல் மாகாண சபையில் தமிழ்ப் பிரிவு ஒன்றும் தமிழ் மக்களுக்கான உள் கட்டமைப்பு அமைச்சு ஒன்றும் உருவாக்கப்படல் வேண்டும். இதன் மூலம் கொழும்புத் தமிழ் மக்களின் நலன்களை மட்டுமல்ல களுத்துறை கம்பஹா மாவட்டத் தமிழர்களின் நலன்களையும் பேணுவதற்கும் முயற்சிகள் எடுக்கலாம்.

9. பாராளுமன்றத்துக்கான கொழும்பு தமிழர்களின் பிரதிநிதிகள் அதிகரிக்கப்படல் வேண்டும். இதற்கேற்ற வகையில் இரட்டை வாக்குரிமை முறையையோ அல்லது 1920களில் பின்பற்றப்பட்ட இனவாரி வாக்களிப்பு முறையையோ, அறிமுகப்படுத்துவது பற்றியும் யோசிக்க வேண்டும்.

## ஆயத்த வேலைகள்

இத் தீர்வுகள் பற்றி வெகுஜன மட்டத்தில் பேசுவதற்கு முன்னர் கொழும்பு மாவட்டத்தில் வசிக்கும் புத்திஜீவிகள், அரசியல் சக்திகள், முன்னேறிய பிரிவினர் மத்தியில் மனந்திறநத கலந்துரையாடலுக்கு முயற்சி செய்ய வேண்டும் அதன் போது நாட்டின் பொதுவான நிலை கொழும்புத் தமிழர்களின் குறிப்பான நிலை பற்றி மட்டுமல்ல, சர்வதேச ரீதியாக சிறுபான்மைத் தேசிய இனக்குழுமத்தின் பிரச்சினைகளுக்குத் தீர்வாக முன்வைக்கப்பட்ட கருத்துக்களையும் கவனத்தில் எடுக்கலாம். குறிப்பாக சோவியத் யூனியன், சீனா, சுவிஸ், சிங்கப்பூர், மலேசியா, இந்திய அனுபவங்களையும் கவனத்தில் எடுப்பது கூடிய பயன்பாட்டினைத் தரக்கூடியதாக இருக்கும். இந்தியாவைப் பொறுத்தவரை நாகலாந்து, மிசோராம், மணிப்பூர் போன்ற வடகிழக்கு மாநில அனுபவங்கள் கூடிய பயனைத் தரக்கூடியதாக இருக்கும்.

அரசியல் தீர்வு பற்றிய ஒரு முடிவுக்கு வந்து விட்டால், கொழும்பு தமிழர் அனைவரையும் ஐக்கியப்படுத்தும் மார்க்கம் பற்றியும், அதற்கான அமைப்பு பற்றியும் அவ்வமைப்பின் வேலைத்திட்டம் பற்றியும், போராட்ட வழிமுறை பற்றியும், விரிவான ஆலோசனைகளையும், கலந்துரையாடல்களையும் நாம் மேற்கொள்ளலாம்.

அரசியல் வழி பற்றித் தீர்மானிக்கும் இப்பணி விரைவாகவும் அவதானமாகவும், செய்ய வேண்டிய பணி. கொழும்புத் தமிழர்களின் எதிர்காலம் இச்சிறப்பான பணியின் வெற்றியிலேயே தங்கியுள்ளது.

-பரந்தாமன்

www.tamilarangam.net



# தமிழ் மக்களின் இரட்சகராகப் போவது எவர்?

பிரபாகரனுக்குப் பத்து வருடங்கள் வட-கிழக்கை ஒப்படைக்கத் தான் நினைத்திருந்ததாக ஜனாதிபதி "டைம்" (Time) சஞ்சிகைக்கு அளித்த கருத்தானது பல்வேறு எச்சரிக்கை, குறைகூறல், குற்றச்சாட்டுகள் மற்றும் விடயங்களைத் தெளிவாக்குதல் ஆகியன மத்தியில் மறைந்து சென்றது கவலைக்கிடமான விடயமாகும். ஏனெனில், வட- கிழக்குப் பிரச்சினை பற்றிப் பெரும்பான்மை இனத் தரப்பிலிருந்து இதுவரை முன்வைக்கப்பட்ட ஒரேயொரு பொருத்தமானதும், யதார்த்தமானதுமான கருத்து அது என்பது எனது அபிப்பிராயம்.

எவ்வாறெனினும், ஜனாதிபதியின் இக்கருத்துக்கு எதிராக விடுக்கப்பட்ட பல்வேறு எதிர்க் கருத்துக்களின் ஊடாக எமக்கு ஒரு விடயம் தொடர்பாகப் பருமட்டான புரிதல் ஒன்றைப் பெற்றுக் கொள்ள முடியும். அதாவது, தேசிய இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக அல்லது தீர்க்காது விடுவதற்காக அந்த அந்த அரசியல், சமய மற்றும் சமூகப் பிரிவுகள் பொருந்தும் விதமாகும். இவ் அனைவரையும் பருமட்டாக இரு பிரிவினராக வகுத்துக் கொள்ளலாம்.

இதில் ஒரு பிரிவு, அரசியல் தீர்வொன்றுக்கு எதிராக உள்ள யுத்தத்தில் நம்பிக்கை வைத்துள்ளவர்களாவர். அவர்களின் கருத்துப்படி பிரபாகரனுக்குக் குறிப்பிட்ட காலமொன்றுக்கு வட- கிழக்கை ஒப்படைப்பது மட்டுமன்றி மகாத்மா காந்தி போன்ற ஒருவருக்குக் கூட அவ்வாறான அதிகாரமொன்றை வழங்க முடியாது. ஏனெனில் அவர்களைப் பொறுத்தளவில் இது சிங்கள - பௌத்தர்களின் ஒருமைப்பட்ட தாய் நாடு என்பதனாலாகும்.

மற்றைய பிரிவினர், அரசியல் தீர்வொன்றுக்காக உண்மையாகவும், போலியாகவும் தோற்றுபவர்கள். உண்மையிலேயே அதற்காகத் தோற்றுபவர்களும் ஜனாதிபதியின் இக்கூற்றினால் பெரும் அதிர்ச்சியடைந்து உள்ளதாகத் தெரிகிறது.

அதனாலேயே அவர்கள் ஜனாதிபதியின் இக்கருத்துக்கு வெள்ளையடிக்க முனைகிறார்கள். அவர்கள் அரசியல் தீர்வினுள் கூட, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமும், பிரபாகரனும் ஆகக்குறைந்த முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுக் கவனத்தில் எடுக்கப்பட வேண்டிய நிலையே உள்ளது. அவர்கள் தமிழ் மக்கள் பற்றி அடிக்கடி பேசினாலும், அத் தமிழ் மக்களை வென்றெடுக்கக் கூட ஆரம்ப நிபந்தனையான பிரபாகரனை ஏதாவது உடன்பாடொன்றுக்கு வரச்செய்து, வென்றெடுப்பது என்ற கருத்தை நேரடியாக அல்லது மறைமுகமாக நிராகரிப்பவர்களே ஆவர். ஏனெனில், அவர்கள் கருத்துப்படி பிரபாகரன் என்பவர் நம்பிக்கை வைக்க முடியாத பயங்கரவாதியொருவர் மட்டுமே. இதனால் ஜனாதிபதியின் இக்கூற்றை எமது கடும் போக்காளர் (Radical) பிரிவுகளையும் விட முன்னேற்றகரமான கருத்தாக எடுப்பது தவறல்ல.

இற்றைக்குச் சில வருடங்களுக்கு முன்பு என்னால் செய்திப் பத்திரிகை ஒன்றுக்கு எழுதப்பட்ட பத்தியொன்றில் இதே விடயம் எழுப்பப்பட்டு இருந்தது. அதில் ஜனாதிபதி இப்போது தெரிவிக்கும் பத்து வருடங்களுக்குப்பதிலாக ஐந்து வருடங்கள் என்பது தெரிவிக்கப்பட்டு இருந்தது. இவ்விடயமானது எம்மால் உடனுக்கு , உடன் கவனத்தில் எடுக்கப்பட வேண்டிய ஒன்றாகும். முன்பு என்றால் இவ்வாறான முக்கியத்துவம் வாய்ந்த கருத்து ஒன்றை அரச தலைவர் அல்லது தலைவி ஒருவர் மூலமாக எமக்குக் கேட்கக் கிடைப்பதில்லை. ஆனாலும் பின்பு ஒரு காலத்தில், அதற்குப் பத்து அல்லது இருபது வருடங்கள் சென்றுள்ள சந்தர்ப்பத்தில் அத் தடை செய்யப்பட்ட தலைப்பு நம்மையே அறியாமலே நாம் பேசும் தலைப்பாகி விட்டுள்ளது. சமஷ்டி முறை, இனங்கள் மற்றும் மொழிகளுக்கு இடையே சம இடம், தேசிய சுயாட்சி ஆகிய கோட்பாடுகள் இவ்வாறானவையே. பத்து வருட காலத்துக்கு வட- கிழக்கு நிர்வாகத்தைப் (ஆட்சியை) பிரபாகரனுக்கு ஒப்படைப்பதற்குத் தான் உடன்படுவது என்ற கருத்தை ஜனாதிபதி தெரிவித்திருப்பது, எதிர்காலத்தில் ஏற்படுத்தப்படவுள்ள எந்தவொரு அரசியல் தீர்விலும் இருக்க வேண்டிய ஒரு அடிப்படை அம்சமாகவே அதனை அடையாளங் காணவேண்டும்.



பிரபாகரன் என்ற அரசியல் பாத்திரம் உருவாக்கப்பட்டது முழுக்க முழுக்க யுத்தத்தின் உள்ளேயே ஆகும். யுத்தத்தினுள் கட்டியெழுப்பப்படும் தலைமையொன்று அநேகமாகச் சாதாரண அரசியல் சூழ்நிலைகளினுள் வெற்றிகரமான தலைமையொன்றாக அமைய முடியாது.

வின்ஸ்டன் சேச்சில் இரண்டாம் உலக யுத்தத்தினுள் கட்டியெழுப்பிக் கொண்ட அரசியல் செல்வாக்கு இங்கிலாந்துக்கு மட்டுமன்றி பிரான்ஸ் மற்றும் அமெரிக்கா போன்ற பெரும் வல்லரசுகள் மத்தியிலும் பெரும் ஈர்ப்பை ஏற்படுத்தியிருந்தது. ஆனாலும் யுத்தத்தின் பின்பு நடைபெற்ற முதலாவது பொதுத் தேர்தலிலேயே சேச்சில் தோல்வியடைந்தார். அதே யுத்தத்தினுள்ளேயே கட்டியெழுப்பப்பட்ட பிரான்சின் சாள்ஸ் டிகோல் யுத்தத்தின் பின்பு சேச்சிலை விட அதிக காலம் ஆட்சியை பிடித்துக் கொண்டு இருந்தாலும், இறுதியில் அவரும் அதிக மனமுடைந்த, தோல்வியடைந்த பாத்திரமாகவே அரசியலிலிருந்து விடைபெற்றார். அதன் பின்னைய காலகட்டத்தில் நிகரகுவாவின் சண்டினிஸ்டா இயக்கத்துக்கும் அதே தலைவிதியே ஏற்பட்டது. இவற்றையெல்லாம் பிரபாகரன் தெரியாதிருக்க முடியாது. இவ் வரலாற்றுப் பாடம் அவரது மனதைக் கவலையுறச் செய்யுமானால் அது அசாதாரணமானது அல்ல. ஏனெனில், இன்று இலங்கையில் சிறுபான்மை பிரச்சினை தொடர்பாக ஏதாவது அறிமுகமொன்றுக்கு அனைத்துச் சமூகங்களும், அரச இயந்திரங்களும் வந்திருக்குமானால், அதன் தன்னிகரற்ற சொந்தக்காரனாக இருக்க வேண்டியவர் பிரபாகரனே அன்றி வேறு எவரும் அல்ல. சரியாகச் சொல்வதானால் பாலஸ்தீன விடுதலைப் போராட்டத்தின் ஒரே சொந்தக்காரர் யசீர் அரபாத் ஆனது போல.

அரபாத், 1980கள் வரையும், உலக மக்கள் முன்னிலையில், அதாவது மேற்குலக வல்லரசுகளால் கட்டி எழுப்பப்பட்ட உலக மக்கள் கருத்துக் கணிப்பின் முன்னிலையில் முன் வரிசைப் பயங்கரவாதியொருவர் ஆகவே இருந்தார். இதன் காரணமாகவே அப்''பயங்கரவாதி''யுடன் எதுவித உடன்பாட்டுக்கும் மட்டுமின்றி, பேச்சுவார்த்தைகளுக்குக் கூட வருவதை அமெரிக்கா, இஸ்ரேல் உட்பட உலக வல்லரசுகளும் நிராகரித்தன. ஆனாலும் இறுதியில் இப்''பயங்கரவாதிக்கு'' சகல அதிகாரங்களும் வழங்கப்படக் கூடிய அதாவது வேறு எதுவித அரசியல் சக்தி எதற்கும் கேள்வி எழுப்ப முடியாத விதத்தில் சகல அதிகாரங்களையும் அளிக்கும், ஆட்சி முறையொன்றை உருவாக்கி வழங்க வேண்டிய நிலை (அவரைப் பயங்கரவாதி என அடையாளப்படுத்திய) மேற்கூறிய லேபல்காரர்களுக்கே ஏற்பட்டது.

அதன் பின்பும் பாலஸ்தீனுக்கும், இஸ்ரேலுக்கும் இடையே அந்நியோன்ய அறிமுகத்துக்கும், அபிவிருத்திமயத் தளத்துக்கும் வரும் ஆரம்பக் காலகட்டத்தில் கூட அரபாத்தின் பாலஸ்தீன விடுதலை இயக்கத்தை அம் மக்களின் ஏக நற்பிறப்புள்ள பிரதிநிதியாக ஏற்றுக்கொள்வது இஸ்ரேலினால் நிராகரிக்கப்பட்டது. ஆனாலும் இறுதியாக இவர்கள் எவர் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் மேற்கூறிய அனைத்து நாடுகளும் அரபாத்தை அந்த இனத்தின் ஒரே தலைவராக ஏற்றுக்கொள்வது வரை செல்ல வேண்டி ஏற்பட்டது. இறுதியில் அவருக்கு அதிகாரம் கையளிக்கப்பட்டது. மாறாக, ஏற்றுக் கொள்ளப்பட்ட ஜனநாயகத் தேர்தல் முறையொன்றின்படி சென்று அல்ல.

அரபாத் போலவே பிரபாகரன் தொடர்பாகவும் எழும் முக்கிய முரண்பாடு ஒன்றுள்ளது. பயங்கரவாதம் எனக் கணிக்கப்படும் முறையினூடாக வென்றெடுக்கப்பட்ட ஏதாவது அரசியல் அதிகாரம் ஒன்றை, ஜனநாயக அரசியல் அதிகாரம் என உருமாற்றம் செய்வது எவ்வாறு என்பதே அதுவாகும். எந்த ஒரு தலைவர் தொடர்பாகவும் இங்கு எழுகின்ற அதேசமயம் கவனத்தில் எடுக்காது விட முடியாத பிரச்சினையானது மேற்கூறிய பயங்கரவாத அதிகாரத்துக்கும், பின்பு கூறிய ஜனநாயக அதிகாரத்துக்கும் இடையே தொடர்ச்சியை உறுதிப்படுத்துவதே ஆகும். அவ்வாறு நடைபெறாவிட்டால் அதுவரை காலமும் செய்த அனைத்து அர்ப்பணிப்புகளுமே 'விழலுக்கு இறைத்த நீராக ஆகுவதற்கு' நன்றாகவே இடமுள்ளதாக எந்தப் போராட்டத் தலைவரும் மோப்பம் பிடித்து அறிந்து கொள்வர். பழைய பயங்கரவாதத் தலைவர் புதிய அரசியல் தயாரிப்பின்னுள்ளும் கட்டாயமாகத் தலைவராகவே வேண்டும்.

இது தனியே நபர் அதிகாரம் தொடர்பான முரண்பாடு மட்டும் அல்ல. அது அதற்கு அப்பால் செல்லும் அரசியல் வேலைத் திட்டம் தொடர்பான பிரச்சினையுமாகும். பிரபாகரன் தொடர்பாக நாம் கவனத்தில் எடுப்பதானால், இனம் ஒன்று என்ற வகையில் தமது மக்களுக்கு உரித்துடையதாக வேண்டியதென அவர் பின்பற்றும் தேசிய, அரசியல் மற்றும் கலாசாரமய சுயாதிபத்தியம், புதிய வேலைத்திட்டத்தின் கீழ் நடைமுறையில் நிஜமாகிறதா? இல்லையா? என்பதைப் பரீட்சித்துப் பார்க்கும் ஒரே அரசியல் அதிகாரம் தமக்கு உரித்தாக வேண்டும் என்ற நிலைப்பாடு இதன் காரணமாக முற்றிலும் நியாயமானதாகும். அதற்காக இரத்தத்தினாலும், உயிர்த் தியாகங்களினாலும் இதுவரை காலமும் போராட்டம் நடத்திய ஒரே அணி அதுவாகும் போது, ஆகக் குறைந்த முக்கியத்துவத்துடன் கூடிய ஏனைய எல்லாத் தமிழ்ப்போராட்ட அணிகளும் கூடிக் குறைந்த அளவில் இன்றுவரை பெரும்பான்மை இன அரசியல் நீரோட்டத்தினுள் உறிஞ்சப்பட்டுள்ளமை போன்ற விடயங்களைக் கவனத்தில் எடுக்கும் போது இது மேலும் தெளிவாகிறது.

இதன் காரணமாக, நாம் எவ் அரசியல் தீர்வொன்றுக்கு வந்தாலும், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் மற்றும் பிரபாகரன் என்ற நபரின் அதிகாரத்தை (சர்வாதிகாரம் அல்ல) உறுதிப்படுத்தும் வேலைத் திட்டமொன்று அதனுள் இருக்க வேண்டியது கட்டாயமானதாகிறது. ஆனால் இவ் இயக்கம், பாசிச இயக்கமே; பிரபாகரன் என்பவர் பாசிசவாதச் சர்வாதிகாரியே என்ற எதிர்ப்பு இங்கு எழலாம்.

இது பற்றி ஆரம்பத்திலேயே கூற வேண்டிய ஒன்று உள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமும், பிரபாகரனும் பாசிச வாதியாவதோ அன்றிச் சர்வாதிகாரியாவதோ அடிப்படையில் பாதிப்பை உண்டுபண்ணுவது எங்களுக்கு அன்றி, தமிழ் மக்களுக்கும், தமிழ்ச் சமூகத்துக்குமேயாகும். தமிழ் மக்கள் சார்பாக நல்லொழுக்கமய் அடிப்படையின் மீது முடிவு எடுக்கும் அதிகாரமும், உரிமையும் தொடர்ந்தும் சிங்கள இனத்துக்கும், கொழும்பு அரசாங்கத்துக்கும் உரித்துடையது அல்ல. இதனால் பிரபாகரனோ அல்லது தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமோ பாசிசவாதியோ அன்றி பாசிசவாத அமைப்போ ஆவது, இலங்கை என்ற ஐக்கிய அரசின் பாதுகாப்புக்கு குந்தகம் விளைவிக்கப்படும் போது மட்டுமேயாகும். இவ்வாறான சந்தர்ப்பத்தில் அதில் தலையிடும் உரிமை மத்திய அரசுக்கு உரித்துடையதாவது வேறான விடயமாகும். அதுவும் ஐக்கிய இலங்கை என்ற வகையில் அனைத்து இனங்களும் ஒன்றாக வாழும் எல்லா உறுதிப்பாடும், சூழ்நிலையும் இப் புதிய வேலைத் திட்டத்தினுள் உருவாக்கப் பட்டிருந்தால் மட்டுமேயாகும். மிகச்சுருக்கமாக தமிழ் மக்கள் சார்பாக ''இரட்சணிய பாத்திரம் இதன் பின்பு உரித்துடையதாவது தமிழ்ச்

→

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சமூகத்துக்கே அன்றி அந்நிய இனமொன்றுக்கோ அன்றி அந்நிய அரசாங்கமொன்றுக்கோ அல்ல.

அது எவ்வாறெனினும், ஐந்து அல்லது பத்து வருடக் காலத்துக்குப் பிரபாகரனுக்கு அதிகாரத்தை வழங்குவது இன்று நிலவும் நாசகார யுத்தத்தின் அளவைப்போல் மோசமானதாக ஆகுவதற்கு இடம் ஏதும் இக்காலப் பகுதியினுள் தட்டிக்கழித்து விட்டுச் செல்ல முடியாத சவாலொன்றுக்குப் பிரபாகரன் முகங்கொடுக்க வேண்டி இருக்கும். அதன் பின்பு அவர் கொழும்பு மத்திய அரசாங்கத்துடன் அல்லாமல் நேரடியாகத் தமிழ் மக்களுடனேயே கொடுக்கல் -வாங்கல் (Transaction) செய்வார்.

இது உண்மையிலேயே யுத்தம் புரிவதைவிடச் சவாலான கருமமாகும். அதில், தமது தேசம் அடைந்துள்ள பௌதீக அழிவிலிருந்துமீளக் கட்டியெழுப்புவதைப் போலவே தமது இனத்தின் சுயாதிபத்தியத்தைப் புதிய அரசியல் சட்டகத்தினுள் நிலை நிறுத்திக்கொள்ளும் இரு சவால்களுக்கு முகங்கொடுப்பதையும், அவர் தொடர்பாகக் கருத்திற்கொள்ளும்போது கடமைசெய்யத் தவற முடியாத வரலாற்றுப் பணியாகும்.

மறுபுறம் தமிழ்ச் சமூகம், இச்செயற்பாட்டினுள் அரசியல் ரீதியாகப் பலம்பெறுவதைப் பிரபாகரனாலோ அன்றித் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினாலோ நிறுத்த முடியாது. இந்த அந்நியோன்ய கொடுக்கல்-வாங்கலில் அதாவது தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், தமிழ்ச் சமூகத்துக்கும் இடையே நடைபெறும் இந்த அரசியல் பரீட்சித்துப் பார்த்தலில் ஏதாவது விதத்தில் தமது நற்குணத்தைக் காட்டுவதும், அதனூடாகத் தமிழ்ச் சமூகத்தைத் தம்மீது வென்றெடுக்கவும், அவ் இயக்கத் தலைமை தவறுமானால் அதன் பின்பு இன்று உள்ள யுத்த பலத்துடன் யுத்தமொன்றில் ஈடுபடும் ஆற்றல் அவ் இயக்கத்துக்குக் கிடைக்காது போகும். அதற்குக் காரணம், ஒரு புறம் புதிய அரசியல் இயந்திரத்தினுள் ஒரு விதத்தில் இயக்கத்தின் இராணுவ பலம் கரைந்து போவது இயல்பாகவே இடம்பெறுவதும், மறு புறத்தில் தமிழ்ச் சமூகம் இயல்பான அரசியல் முதிர்ச்சியடையும், பலமும் இக்காலப்பகுதியினுள் கட்டாயமாக ஏற்பட்டிருப்பதன் காரணமாகவும் ஆகும். அதன் காரணமாகத் தமிழ்ச் சமூகத்திலிருந்து இன்று பிரபாகரனுக்குக் கிடைக்கும் நல்லொழுக்க ரீதியான அடிப்படை அந் நிலைமையினுள் அவருக்கு உரித்துடையதாகாது.

சிங்களவர்கள் என்ற முறையிலும், கொழும்பு அரசாங்கம் என்ற முறையிலும் நாம் இவ்வாறான வேலைத்திட்டமொன்றைப் பின்பற்ற வேண்டியது பிரபாகரனைத் தோல்வியடையச் செய்யும் அல்லது துரத்தி அடிக்கும் அடிப்படையை இலக்காகக் கொண்டதல்ல. அவ்வாறு அமைந்தால் நாம் வரலாற்றில் சென்ற தவறான வழியிலேயே திரும்பப் பயணம் செய்ய வேண்டியிருக்கும். தமிழ்ச் சமூகத்துடன் அவர் நடத்தி வரும் ஜனநாயகக் கொடுக்கல் - வாங்கல்களிலும், செயற்பாடுகளிலும் அவரின் பலம் குறைவதோ, இல்லாது போவதோ வேறான விடயம் ஆகும். இது இயல்பான செயற்பாட்டின் விளைவாகவே நடைபெறவேண்டுமே தவிர பெரும்பான்மை இனம் பொருத்தும் பொறியின் விளைவாக அன்றி என்ற உணர்வு என்றாவது ஒரு நாள் பிரபாகரனுள் ஏற்படுமானால், எவ்வளவு இரக்கமற்ற வரலாற்றுக்கு அவர் உரிமை கொண்டாடினாலும், அன்று அவர் கூட வரலாற்றின் முன் தோல்வியை ஒப்புக்கொள்ள நிறையவே இடமுள்ளது என்பது எனது உணர்வாகும். ஏனெனில், பிறப்பிலேயே பயங்கரவாதியொருவராகி, இறக்கும் வரையுமே அதனை வாழ்க்கையாக நடத்திக்கொண்டு போகும் பயங்கரவாதிகள் உலகின் எந்த இடத்திலும் இல்லாதது குறிப்பிடத்தக்கது.

இதில் அடிப்படையான ஏற்றுக்கொள்ளல் சிலவற்றுக்கு நாம் வரவேண்டியிருக்கும். சிங்களச் சமூகமும், குறிப்பாக மத்திய அரசாங்கமும் முழுமையாகவும், நற்குணத்துடனும் தமிழ் மக்களை இனமொன்று என்ற வகையில் உரிய சம அதிகாரங்கள் மீது அடிப்படையான தேசிய, கலாசார அடையாளங்களை ஏற்றுக்கொண்டு, அதன்படி செயற்பட வேண்டும். 13வது திருத்தச் சட்டத்துடன் வந்த மாகாண சபை முறை அக் காலத்தின்படி எவ்வளவு தூரம் ஆக்க பூர்வமானதும், முற்போக்கானதுமான நடவடிக்கையானாலும் அது சிங்கள ஆட்சி பீடத்தினரின் நற்சான்றைப் பெறவில்லை. அதனால் புத்தகமொன்றில் உயர்ந்த கருத்துக்கள் எழுதப்பட்டிருந்தாலும் நடைமுறையில் செயற்படுத்தப் பட்டது அதற்கு முழுமையாகவே முரணான கொள்கையே ஆகும்.

ஐக்கிய அரசுக்குப் பதிலாக அரசியலமைப்பு, நிறைவேற்று, நீதிமன்ற மய அதிகாரம் என்பவற்றை உண்மை அர்த்தத்தில் பிரதேச மயமாக்கும் ஐக்கிய சமஷ்டி அரச முறையொன்றுக்கு நாம் மாற வேண்டும். அந்த அரசிலிருந்து அனைத்துச் சமயங்களும் முழுமையாகவே அகற்றப்பட வேண்டும். அதாவது அரச சொற்களின் முழு முடிவான அர்த்தத்திலேயே லௌகீகம் செய்ய வேண்டும். வட-கிழக்கை முழுமையாகக் கொண்ட பாரிய, துரித பொருளாதார வேலைத் திட்டமொன்றின் மீது அனைத்துப் பொருளாதாரமும் மீள வியூகம் வகுக்கப்பட வேண்டும். இவ்விடயங்கள் நடைமுறைப்படுத்தப்படுமானால், ஜனாதிபதியின் ''பத்து வருட குத்தகைக் காலம்'' அர்த்த புஷ்டியானதொன்றாக நிறையவே இடமுள்ளதால் நாம் அது பற்றி கலங்கத் தேவையில்லை. உண்மையிலேயே இந்த யோசனையைக் கூடப் பிரபாகரன் நிராகரித்தால் மட்டுமே நாம் ஆச்சரியப்பட வேண்டும். இல்லாவிட்டால், ஜனாதிபதியினால் இவ்வாறான கருத்தொன்று இதுவரை தெரிவிக்கப்படாமல் இருந்தாலும் அது ஆச்சரியத்துக்குரியதாகும்.

***நன்றி: லக்பிம - 19980329***
***பிரான்சிலிருந்து காமினி வியன்கொட***
***தமிழில்: சி.செ.ராஜா***



# மண்டையன் தொலைக்காட்சி நாடகம்: விளங்காத தத்துவமா?

மண்டையன் நாடகம் தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்ட பின் அதனை ஒளிப்பதிவு செய்த பிரதிமூலமாக பார்க்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. பார்த்து முடித்ததும் நாடகத்தைப் பற்றி நண்பருடன் அலசமுற்பட்ட போது நண்பர் வீரசேகரியில் பேராதனை அபிமானிகளால் எழுதப்பட்ட விமர்சனத்தை தூக்கி என்முன் போட்டார். அதை வாசித்து முடித்ததும் நான் இப்படி ஆரம்பித்தேன். ''இதில் எழுதியிருக்கிற அளவுக்கு இது அவ்வளவு மோசமாக இல்லை. ஆனால்...'' உடனே நண்பர் (இதே படைப்பாளிகளின் -1 நாடகத்தை நான் மிகவும் காரசாரமாக விமர்சித்ததை நண்பரும் அறிவார்.) ''அவர்கள் 'மண்டையனை' அவ்வளவு மோசமாக விமர்சித்திருப்பதால் 'மண்டையனைக்' காப்பாற்ற வேண்டிய உளவியல் தேவை உனக்கு ஏற்பட்டிருக்கிறது''. உண்மை எதுவாக இருப்பினும் மண்டயனை விமர்சிக்க வேண்டியத்தேவை ஏற்பட்டிருக்கிறது என்பது உண்மையே.

ஒரு சராசரிக் குடும்பத்தில் நிகழக் கூடிய தர்க்கங்கள் அதனால் ஏற்படக் கூடிய பாதிப்புகள் இன்றைய கல்விக் கோட்பாடுகள், வேலையில்லாப் பிரச்சினை, விடலைப் பருவத்தில் ஏற்படும் பாலியல் கவர்ச்சி, அதில் ஏற்படும் சறுக்கல்கள் இவையெல்லாம் எவ்வாறு இளவயதினரைப் பாதிக்கிறது என்பதை விவரணப் படுத்தும் ஒரு முயற்சியே 'மண்டையன்'. ஒரு சராசரி இளைஞன் வாழ்க்கையின் ஒவ்வொரு படியிலும் சமூகத்தின் இறுக்கமான கட்டமைப்பைத் தாண்டவும் முடியாமல் அதனுடன் இணங்கவும் முடியாமல் தத்தளிக்கிறான். உதாரணமாக, அவனுக்கு தனக்கேயுரிய தனியுடைமையான பெண்ணின் நேசம் தேவைப்படுகிறது. ஆனால் பொதுமைப்படுத்தப்பட்ட ஆண், பெண் நேச உணர்வுகளுடன் அவனால் இணங்க முடியவில்லை. இவ்வாறாக வாழ்க்கையில் ஏற்பட்ட தொடர்ச்சியான சறுக்கல்கள் அவனை மனநோயாளியாக்கித் தற்கொலைக்குத் தூண்டுவதாக நாடகம் அமைகிறது.

மண்டையன் காட்சி ஊடகத்தின் (Visual Media) வலிமையை புலமாகக் கொண்டு எடுக்கப்பட்ட தொலைக் காட்சி நாடகம் ஆரம்பம் முதல் இறுதிவரை நாடகத்தில் இணைந்து காணப்படும் காட்சிப்படிமங்கள் இதனை வலியுறுத்துகின்றன. மணற் கோட்டை கட்டும் விடலைப்பருவத்து காதலைச் சித்திரிக்கும் காட்சிப் படிமம், வாழ்வுக்கான உந்துதல், சமநிலையைப் பேணுவதற்கான போராட்டம், விரக்தியின் உச்சத்தில் சாவுக்கான போராட்டம் ஆகியவற்றை ஒரே நேர்கோட்டில் இணைத்த காட்சிப்படிமம் என்பவை சிறப்பாக அமைந்திருக்கின்றன. நாடகத்தில் இளைஞனாக வரும் ஜீவா மீண்டும் ஒரு முறை தனது நடிப்பை நிரூபித்திருக்கிறார். ஏனையோரும் நடிப்பு என்றளவில் திருப்தியாக நடித்திருக்கிறார்கள்.

மண்டையனைப் பற்றிக் கூறப்படும் முக்கிய குறைபாடு 'ஒன்றுமே விளங்கவில்லை' என்பதாகும். என்னைப் பொறுத்தவரை மண்டையனில் விளங்குவதற்கு கடினமான 'தத்துவங்கள்' எதுவும் கூறப்படவில்லை. இங்கு விளங்கவில்லை என்பதன் அர்த்தம் இரசித்துப்பார்க்க முடியவில்லை என்பதாகும். மண்டையன் எமக்கு எல்லாம் பரீட்சயமான தொலைக் காட்சி நாடகங்கள் வழங்கப்படும் முறையில் இருந்து விலகி துண்டு துண்டான காட்சிப்படிமங்களைக் கொண்டிருப்பதும், காட்சி ஊடக மொழியின் (Visual Media Language) வீச்சு அதிகமாக இருப்பதும் இரசித்துப் பார்ப்பதில் ஒரு குழப்ப நிலையை ஏற்படுத்தி விளங்கவில்லை என்ற மாயையை ஏற்படுத்தியுள்ளது.

மண்டையனைப் பொறுத்தவரை அது பெரும்பாலான பார்வையாளர்களால் வரவேற்கப்படவில்லை என்பதை அதன் படைப்பாளிகள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

சமூகப் பிரக்ஞையுள்ள ஒரு படைப்பாளி தனது படைப்பாற்றலை உயர்த்திக்கொள்ளும் அதேவேளை பார்வையாளர்களின் தரத்தையும் உயர்த்துமுகமாக செயலாற்ற வேண்டும். மண்டையன் ஏற்படுத்த விரும்பும் காட்சி ஊடகத்தை நோக்கிய மாற்றம் வரவேற்கப்பட வேண்டியதே. ஆனால் மாற்றங்கள் திடீரென்று புகுத்தப்பட முடியாதவை. இந்த மாற்றம் ஆரோக்கியமாக நிகழ வேண்டுமாயின்

1. படைப்பாளிகள் தங்களின் தளங்களில் இருந்து சராசரிப் பார்வையாளனுக்கு எட்டக்கூடிய உயரத்திற்கு இறங்கி வந்து அவர்களின் தரத்தை உயர்த்த முயற்சிக்க வேண்டும்.
2. சாதாரண மக்களுக்கு காட்சி ஊடக மொழியில் பரீட்சயம் ஏற்பட வேண்டுமாயின் இவ்வாறான நாடகங்களுக்கு வழங்கப்படும் சந்தர்ப்பம் அதிகரிக்கப்பட வேண்டும்.

**டி.வி.ஆர். கொழும்பு**

## புரட்சியை...

நாங்கள் எங்களால் உயிர் நீத்த தோழர்களுக்காக ஒன்றிணைய வேண்டும். ஆயிரக்கணக்கான இளைஞர்கள் சிறையில் துன்பப்படுகிறார்கள். இன்னமும் தங்களது வீடுகளுக்குப் போக முடியாமல் காடுகளில் மறைந்து வாழும் ஆயிரக்கணக்கான இளைஞர்களுக்கு என்ன பொறுப்பு சொல்லப் போகிறோம். என்று கூறினேன். ஆனால் அம்முயற்சி தோல்வியில் முடிந்தது. சிறையில் கருத்து முரண்பாடுகள் நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டே சென்றதேயொழிய அவற்றைத் தீர்ப்பதற்கான பிரக்ஞைபூர்வமான ஒன்றுபட்ட அக்கறை இருக்கவில்லை. நானும் விரக்தியடைந்தேன். இறுதியில் நான் கட்சியிலிருந்து விலகிக் கொள்வதாக விஜேவீரவுக்கும் ஏனைய தோழர்களுக்கும் அறிவித்தேன்.

**தற்போது அரசியல் ஈடுபாடு ஏதும்?**

இல்லை. நம்பிக்கை தரத்தக்க ஒன்றும் கிடையாது.

**நீங்கள் ஜே.வி.பி. என்ற இயக்கம் குறித்து அவநம்பிக்கையடைந்திருக்கிறீர்களா? அல்லது ஒட்டுமொத்த புரட்சிகர இலக்கு குறித்து நம்பிக்கையற்றிருக்கிறீர்களா?**

புரட்சிகர சமூகமாற்றத்துக்கான அவசியம் மேலும் மேலும் வலுப்படுத்தப்பட்டு வருகிறது. சோஷலிச இலக்கு குறித்து இன்னும் நம்பிக்கையிழக்கவில்லை. ஆனால் அதற்கு நம்பிக்கை தரத்தக்க எந்த அமைப்புமில்லை என்ற கருத்து என்னிடமுள்ளது.

**71ஐ திருப்பிப் பார்க்கும் போது அது எதனால் பிழைத்தது என்று என்னுகிறீர்கள்?**

நாங்கள் 71ஐத் திரும்பிப் பார்க்கும் போது முக்கியமாக நா[illegible]கள் தொழிலாளர் வர்க்கத்தை அணிதிரட்டியிருக்கவில்லை. மல[illegible]யகத்தில் இருந்த தோட்டத் தொழிலாளர்கள் முக்கிய சக்திகள் அவர்களைப் பற்றி கூட சரியான புரிதல் இருக்கவில்லை. 71 ஏப்ரலில் தொழிலாளர்கள் வீதிகளுக்கு இறங்கி எமக்கு ஆதரவு தரவில்லை. சில தொழிற்சாலைகளிலிருந்த தொழிலாளர்கள் எங்களை பிடித்துக் கொடுத்தது ஏன்? நாங்கள் தனிமைப்பட்டிருந்தோம். பல்கலைக்கழகங்கள், பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள், இளைஞர்கள் எங்களோடு இருந்தார்கள் தொழிலாளர்கள் எங்களோடு இருக்கவில்லை. அது தான் பிழைத்துப் போன முக்கிய இடம். நாங்கள் அந்த இளைஞர்களுக்கு எமது வகுப்புகளில் ஊட்டியது என்ன? அடக்குமுறைக்கு முகம் கொடுக்கத் தயாராகுங்கள், தாக்குங்கள் என்பதே. குண்டுகள் தயாரியுங்கள், ஆயுதங்களைச் சேகரியுங்கள், கொள்ளையடித்து என்றாலும், பணம் சேகரித்து ஆயுதங்களை, வாங்குங்கள் என்று தான் கூறினோம். புரட்சிக்கான சூழலை உருவாக்கும்படி கூறவில்லை. இப்படி இளைஞர்கள் வழிநடத்தப்பட்டால் என்ன பிரதிபலிக்கும். வீடுகளிலிருந்து இளைஞர்கள் தப்பி வந்தார்கள். (சிலர் கைக்குக் கிடைத்த பெறுமதியான பொருட்களையும் வீடுகளிலிருந்து திருடிக் கொண்டு வந்தார்கள்.) ஏன் புரட்சியை நடத்தி முடித்துவிட்டு வீட்டுக்குப் போய்விட வேண்டும் என்று அவர்கள் எண்ணினார்கள். இது ஒட்டு மொத்தத்தில் குட்டி முதலாளித்துவ எண்ணங்கள். இந்தப் பிழைகளை நாங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

பாருங்கள், கேகாலை மாவட்டத்தில் பெருமளவு பிரதேசங்கள் எமது கட்டுப்பாட்டுக்குள் இருந்தன. 8 பொலிஸ் நிலையங்களை நாங்கள் கட்டுப்படுத்தியிருந்தோம். தெனியாய பொலிஸ் நிலையத்தை தரைமட்டமாக்கியிருந்தோம். தெனியாய, அக்குரெஸ்ஸ, எல்பிட்டிய போன்ற பிரதேசங்களை முழுமையாக எமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர முடிந்தது. ஏழு நாட்கள் அப்படி வைத்திருந்தோம். ஆனால் மக்களுக்கு எங்களிடமிருந்து கொடுப்பதற்கு ஒன்றுமில்லை. அடுத்தது என்ன செய்வதென்று ஒருவருக்கும் விளங்கவில்லை. முதலாவது நாளன்று அக் கிராமத்துக்குத் தேவையான அரிசி, தேங்காய், பாண் என்பவற்றைக் கொடுத்தோம். பௌசரை கடத்திக் கொண்டு வந்து மண்ணெண்ணெய் வழங்கினோம். அடுத்தடுத்த நாட்களில் படையினர் அவற்றைக் கிடைக்க முடியாதபடி செய்தனர். மக்கள் ஏசத் தொடங்கினர். கிராமத்தைக் கைப்பற்றி ஒன்றும் பிரயோசனமிருக்கவில்லை. ஏன் கிராமத்தில் அதற்குரிய சூழலை வளர்த்திருக்கவில்லை. அதற்கு மேல் தாக்குப் பிடிக்க முடியாமல் சிங்கராஜ வனத்தை நோக்கிப் பின்வாங்க நேரிட்டது. இது தொழிலாளர்களுக்கெதிரான ஒரு சதிப்புரட்சி போன்றது. அவற்றை ஏற்றுக்கொள்ள மறுத்ததன் விளைவே 1987-89களில் ஏற்பட்ட இழப்புகள். 1987 காலப்பகுதியில் தனது சக தோழர் எரிந்து கருகிக் கொண்டிருப்பர், அந்தக் கொடுமையான அனுபவத்தைக் கண்டும் கூட அப்பிணத்தையும் தாண்டிச் சென்று போஸ்டர்களை ஒட்டினார்கள் ஜே.வி.பி. மாணவிகள். களுத்துறை ஆஸ்பத்திரியில் எந்த நாளும் போஸ்டர்கள் ஒட்டப்பட்டன. யாரென்பதைப் பிடிக்க முடியவில்லை. ஒரு பசை நிறைந்த சுடுதண்ணி போத்தலுடன், நோயாளியைப் பார்வையிடுவதைப் போல வந்து இரகசியமாகப் போஸ்டரை ஒட்டிவிட்டுச் சென்றனர். இறுதியில் காத்திருந்து பிடித்து சுட்டது அந்த யுவதியை. வறுமையில் கல்வி கற்று பல்கலைக்கழகம் வரை வர பட்ட கஸ்டங்கள் கொஞ்ச நஞ்சமல்ல. ஆனால் அவர்கள் வீணாக சாவதை எப்படி பொறுத்துக்கொள்வது. நாங்கள் இனிமேலும் இவ்வளவையும் சுயவிமர்சனம் செய்யாவிட்டால் இப்படி பல இளைஞர்களை இழப்பது உறுதி.

*சில முக்கிய நிகழ்வுகள்:-*

- பாபர் மசூதி கரசேவைக்காரர்களால் தரைமட்டமாக்கப் பட்டது. புராதன காலத்தில் அங்கு இருந்ததாகக் கருதப்படும் இராமர் கோவிலை மீள எழுப்பப் போவதாக சிவசேனா, பா.ஜ.க போன்றன பிரச்சாரம் செய்து வருகின்றன. பா.ஜ.க. ஆட்சியமைத்த பின்னர் அவ்வேலை தொடங்கப் பட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.
- பழம் பண்டிதருக்கு ஈழமோகம் பதிலடி! தினக்குரலின் பத்தி எழுத்தாளரான பழம் பண்டிதர் 'இந்தியா = இந்துக்களின் பூமி' எனும் தொனியில் எழுதிய பத்தியையிட்டு சரிநிகரில் ஈழமோகம் தனது வெண்பாத் தொடர் மூலம் தகுந்த பதிலடி கொடுத்திருந்தார்.
- பாப்பரசரை கியூபாத் தலைவர் வரவேற்று உபசரித்தார்.
- ஒரு பிரபல புத்தக சாலையுடன் தொலை பேசியில் தொடர்பு கொண்டு கேட்டேன்.

  ''விஷ்ணுபுரம் இருக்கா?''

  ''விஷ்ணுபுராணமா...? இருக்கும்... இருக்கும்...'' புத்தகத்தை வாங்கிச் செல்லும் போது ''இது விஷ்ணுவைப் பற்றியதா?'''' என்று அப்பாவித் தனமாகக் கேட்டார் விற்பனையாளர்.
- இந்தியா அணுகுண்டுச் சோதனையை வெற்றிகரமாக நடாத்தியது. எங்களில் பலருக்கு 'ஆனையிலை ஏறின புளுகு'
- 'இஸ்லாத்தை விமர்சித்தால் தண்டனை' என்னும் சட்டத்தை எதிர்த்து பாகிஸ்தானில் கத்தோலிக்க மதகுரு ஒருவர் தற்கொலை.
- கொழும்பில் திடீர் புரளி! ஜெயமோகன் கொழும்புக்கு வந்திருப்பதாக திடீர் புரளி கிளப்பிவிடப்பட்டது. இலங்கையின் பலபாகங்களிலுமுள்ள இலக்கியவாதிகள் கொழும்பில் உள்ள நண்பர்களுக்கு தொலைபேசி அழைப்பின் மேல் அழைப்பாகப் போட்டு துளைத்து எடுத்தார்கள். இங்கு முக்கியமானது என்னவெனில், அவர்களது குரலில் ஆர்வமும், ஜெயமோகனை சந்தித்து உரையாடுவதிலுமுள்ள தவிப்பும் நிறைந்து வழிந்தன.



# விஷ்ணுபுரத்தில் விஸ்வரூபம் கொள்வது எது ?

விஷ்ணுபுரம் என்னும் நாவல் வெளிவர முன்னரே அதைப்பற்றிய செய்திகள் இலக்கிய உலகில் கசிந்திருந்தன. வெகுவாக பலராலும் எதிர்பார்க்கப்பட்ட ஒரு நூலாக அது இருந்தது. மற்றவர்களின் நிலை எப்படியோ, என்னைப் பொறுத்த மட்டில் வைரஸ் காய்ச்சலினால் உடல் பலவீனமடைந்து தலை கிறுகிறுத்துக் கொண்டிருந்த நிலையிலும், விடாப்பிடியாக படிக்க ஆரம்பித்தேன். ஒரு தடவை படித்து முடிந்த பின், மீண்டும் கால இடைவெளியின்றி உடனடியாகவே முதலிலிருந்து படிக்க ஆரம்பித்தேன். ஜே.ஜே. சில குறிப்புக்களுக்கு பிறகு கால இடைவெளியின்றி தொடர்ந்து இரண்டு தடவைகள் வாசித்த புத்தகம் இதுதான். எனினும் எனது அபிப்பிராயங்களை தலை கிறுகிறுத்துப்போன அபிப்பிராயங்களாகக் கருத மாட்டீர்களென நம்புகின்றேன்.

இந்திய ஆன்மீக மரபின் சுருக்க வரலாறு இந்த நாவலின் அடிநாதமாக அமைகின்றது. தமிழ் இலக்கியத்துக்கு ஆன்மீக மரபு செய்துள்ள பங்களிப்பு பெரிது. இந்திய இலக்கியத்துக்கு என்றும் இதை நீட்டலாம். உலகளாவிய ரீதியில் ஆன்மீக மரபின் இலக்கியத்துக்கான பங்களிப்பு, என்றும் வியாபகம் செய்யலாம். இல்லாவிடில், தார்ல்ஸ்தோய் போன்ற இமயங்களை நாம் பெற்றிருப்பது எவ்வாறு?

தமிழில் ஒரு காலகட்டத்தில் ஆன்மீகம் மட்டுமே இலக்கியமாக இருந்தது என்றுகூடச் சொல்லலாம். பக்தி இலக்கிய காலம் என்று விமரிசகர்கள் இதைக் குறிப்பிடுவர். காலகட்டப் பிரிவுகள் எமது ஆய்வு வசதிகளுக்காக நாம் கற்பித்துக் கொள்ளும் கற்பனைக் கோடுகளே. வரலாறு என்பது எமது கைக்குள் அகப்படாமல் தொடர்ச்சியாகவும், சிக்கலாகவும் எமக்கு முன்பும், பின்பும் நீள்கின்றது. வரலாற்றின் தொடர்ச்சியுடன் பக்தி இலக்கியம் தேய்ந்து வருவதை நாம் பார்க்கின்றோம். ஒரு நிலையில் அதன் தடம் மிகமெலிந்து 'காணாமல் போய் விட்டது' என்ற ஒரு மாயைத் தோற்றம் எங்களுக்குத் தெரிகின்றது. மார்க்சியத்தின் வலிமையான ஆளுகையினுள் தமிழ் இலக்கியமும் பிரவேசிக்கும் நிலையில் இது நிகழ்கின்றது. அதன் பின்னர் தமிழிலக்கியம் ஒரு அகண்ட பெருங்கிளையொன்றை படரவிடுகின்றது. அந்தக்கிளையில் காய்த்த கனிகள்தாம் நாமெல்லோரும், பிஞ்சுகளும், வெம்பல்களும், புழுக்குத்தல்களும் உண்டு. தீவிர மார்க்சியர்கள் என்றும், மார்க்சிய அனுதாபிகள் என்றும், மார்க்சிய விரோதிகள் என்றும் நமக்குள்ளே பல பிரிவுகள் தோன்றுகின்றன.

இதுவரை காலமும் ஆன்மீக மரபு இருந்துவந்த பிற்போக்குத்தளத்திலேயே அதைத்தீவிரமாகப் பேணுபவர்களும் தோன்றுகின்றார்கள்.

இந்த கிளைபிரிதலுக்கு சற்று முன்னராக இரண்டு பெரிய ஆளுமைகள் எமக்குக்கிடைக் கின்றார்கள். ஒருவர் பாரதி. அடுத்தவர் புதுமைப்பித்தன். இவர்களுள்ளும் பாரதி, மார்க்சியத்தை வரவேற்று திறந்த மனத்துடன் பரிசீலிக்கத் தயாராக இருந்ததற்கான சில சமிக்ஞைகள் அவர் படைப்புக்களில் காணப்படுகின்றன. புதுமைப்பித்தனிடம் இவ்வியல்பு இல்லை. எனினும் இன்றும் கூட நவீன தமிழ் இலக்கியத்தின் சிறந்த படைப்பாளிகள் யார் எனக்கேட்கும் போது பல பத்தாண்டுகள் பின்னோக்கி மூச்சிரைக்க ஓடி பாரதியிடமும், புதுமைப்பித்தனிடமும் தான் வந்து நிற்போம். அப்படியாயின், இந்தக் கிளை பிரிதலில் ஏதோ தவறு நேர்ந்திருப்பதாக அர்த்தம்.

பல நூற்றாண்டுகளாக எம்முடன் கலந்து தொடர்ந்து கொண்டிருந்த எமது நாகரீகத்தின் செழுமையை முற்றாக மறந்து மார்க்சியத்தின் சூத்திரங்களை மட்டும் மெல்லாமல் கூட விழுங்க முயன்றதே அது அது செரிக்காமல் பலபேர் வாந்தியெடுத்தோம். ஒரே பிரச்சாரவாடையும் ஜே! என்னும் ஓங்கார ஒலிப்பும் முற்போக்கு இலக்கியம் என்று அதற்குப் பெயர்.

சமீபத்தில் ஒரு கமியூனிஸ்ட் நண்பர் ''நமது முற்போக்கு எழுத்தாளர்கள் பசியைப்பற்றி மட்டுமே சிந்திக்கிறார்கள். அதற்கப்பால் ஒன்றுமேயில்லை'' என்று வேதனைப்பட்டார். இந்த எளிய ஆனால் முக்கியமான உண்மையைச் சொல்லப்போனால், எங்களில் பலருக்கு முகம் சுளிக்கின்றது. பிற்போக்காளன் என்ற முத்திரையை ஓங்கி அவன் முகத்தில் குத்திவிட்டு தப்பித்துக்கொள்கிறோம். எங்களது வேர்கள் எவை என அலசிப் பார்ப்பதில் மிகவும் அலட்சியம் எங்களுக்கு. கார்ல் மார்க்ஸ் இற்கும், லெனினுக்கும், மா ஓஇற்கும் பிறகு தான் உலகமே சுழல ஆரம்பித்தது என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை எங்களில் சிலருக்கு. அதற்கு முந்தைய எதையும் புறங்கையால் ஒதுக்கிவிட்டு விடுகிறோம். ஏதாவது யாராவது கொஞ்சம் பேச முற்படுகையில் 'ஓ' என்று கத்தி அவர்களது வாயை அடைத்து விடுவதில் குறியாக இருக்கிறோம்.

ஆனால், உண்மையான இலக்கியவாதி எமது கலாசார வேர்களின் செழுமைகளுடன், நவீன வாழும் தத்துவமான மார்க்சியத்தை ஒன்றாக இணைத்து வியாபகம் காணபதிலேயே தனது கருத்தைச் செலுத்துகின்றான்.

தமிழின் முக்கிய படைப்பாளிகள் எனக் கருதப்படும் யாவரும் இந்த சிலுவையில் அறையப்பட்ட மார்க்சிய வட்டத்துக்கு வெளியேதான் பிடிவாதமாக நின்று கொண்டிருக்கிறார்கள். அவர்களது வாழ்வனுபவங்களும், சிந்தனையும் அந்தத் திசை நோக்கியே அவர்களை நகர்த்திச் செல்கின்றது.

இவ்விடத்தில், ஜெயமோகன் எவ்விடத்தில் நிற்கின்றார். அவரது இந்த நாவல் என்ன சொல்கின்றது என கவனிக்க முயல்வோம்.

**விஷ்ணுபுரம் ஒரு கற்பனை நகரம்.**

கற்பனைக் கதையுலகுக்களுக்கா எம்மிடம் பஞ்சம். இளைய பல்லவனின் வெறும் மரக்கலமொன்றில் நமது முற்போக்கு, பிற்போக்கு கற்பனைச் சரக்குகளை ஏற்றி, அவற்றின் ஆசிரியர்களையும், வெறும் கோவணத்துடன் ஏற்றி, ஒரு போத்தல் தண்ணீரும், ஒரு பிடி அரிசியும் மட்டுமே கொடுத்து, எமது வானொலி மழை புயல் இல்லை என்று அறிவித்த ஒரு நன்னாளில் கண்காணாத தேசமொன்றுக்கு நாடுகடத்த வேண்டிய நிலையில் நாம் உள்ளோம். உங்கள் கற்பனைச் சிறகை கொஞ்சம் விரித்துக் கொள்ளுங்கள்.

காஞ்சி, உறையூர், காவிரிப்பூம்பட்டினம், (அந்தக்கால) மதுரை போன்ற பெருநகரங்களை கற்பனை செய்ய முடிகிறதா? சுலபம் இல்லையா? ஆனால் தளபதி பரஞ்சோதியினால் வல்லுறவுக்குள்ளாக்கப்படும் சிவகாமியை (அப்படியொன்றும் பிரமாத அழகி அல்ல) கற்பனை செய்ய முடிகிறதா? அட இது அநியாயம் என்கிறீர்களா? அப்படியானால் விஷ்ணுபுரத்துக்குள் நுழைய உங்களால் முடியாது. இன்னும்... சிலைகளை எல்லாம் செய்து முடித்துவிட்டு, போதையில் மிதக்கும் ஆயனச்சிற்பி, மேகநோய் பிடித்த மந்தபுத்தியுடைய குதிரைக்கு பயப்படும் மகேந்திர பல்லவன், அவனுக்கு ஒரு தம்பி, மூக்குப்பொடி டப்பியைத் தவிர வேறு எதையும் எண்ணவும் தெரியாத ஒரு நாயனார், பாட்டுப் பாடாமல் ஆற்றில் படகு மட்டும் ஓட்டும் பூங்குழலி, அவளைப் படகிலேயே புணர்கின்ற ஒரு அனிருத்தப் பிரம்மராயர், தத்துவ விசாரத்தையே ஜீவாதாரமாகக் கொண்ட நாகநந்தி அடிகள், சதா வயிறு வெடிக்கத்தின்பதிலும், வம்பளப்பதிலும் முக்தியை கண்டுவிடலாம் என்று நம்பும் பிராமணோத்தமர்கள், மாவன்னாதூனா என்று உச்சரித்த மாத்திரத்திலேயே ஸ்கலிதம் செய்துவிடுகின்ற சேந்தன் அமுதன், ஒரு வணிகன் பறைகளுள் மலங்கழிக்கும் போது உருவிய வாளுடன் காவல் காக்கின்ற வந்தியத்தேவன், ஒற்று வேலையை மறந்து போய் விட்ட பஜனைக்கூட்டத்தில் சேர்ந்து விட்ட ஆழ்வார்க்கடியான், குதிரைகளுக்கு வைத்தியம் பார்க்கும் நகுலன், புத்தி சுவாதீனமற்ற ஆயர்பாடிக் கண்ணன், இன்னும்...

பென்னாம் பெரிய கோயில் (மதுரை மீனாட்சி கோயில் மாதிரி ஆயிரம் மடங்கு பெரியது என்று கோடி காட்டலாம்), பிருத்வி ஏவுகணை மூலம் நேர் செங்குத்தாக மேலே சென்றாலும் முடியைக் காணமுடியாத கோபுரங்கள், மகாமகத் திருவிழாக்கள், ஞானச் செருக்குக்கொண்ட பண்டிதர்கள் (பெரும்பாலும் பிராமணர்கள்), கம்பனுக்கு ஒப்பான காவியக்கர்த்தாக்கள், காளமேகங்கள், புகழேந்திகள், மலைவாசிகள், பழங்குடிகள், அக்குலப் பெண்களின் பருத்த முலை, உருண்டு திரண்ட தொடை, காளா முகர்கள், முஸ்லிம் படையெடுப்பாளர்கள், அவர்களுடன் போய்ச்சேர்ந்து கொள்கின்ற அடிநிலை மக்கள், பிணம் மிதக்காத கங்கை, நம்நாட்டு புத்தர் சிலைகள், நூற்றுக்கணக்கானவற்றை ஒரே சிலையாக்கினால் வரும் பரிமாணத்தில் ஆனந்த சயனம் செய்யும் தோற்றத்தில் ஒரு விஷ்ணு சிலை; இந்தியாவின் மேற்குப் புரத்துக்கு நகர்ந்து வந்து விட்ட இமயமலை, சுமார் இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த எமது முன்னோர், ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னால் தமிழர்களுக்கு பொற்காலம் ஒன்று இருந்ததாமே அந்தக்காலத்து பாக்கியவான்களான மக்கள், சமஸ்கிருத மொழி....

உங்களால் கற்பனை செய்ய முடிகின்றதா? சரி விஷ்ணுபுரத்தை நெருங்கி விட்டோம்.

ஆனால், சாய்வுநாற்காலியில் அப்பாடா என்று சாய்ந்து கொண்டு, தாம்பூலம் மென்று கொண்டு, காலை ஆட்டிக்கொண்டு, கதை படிக்கும் உத்தேசத்துடன் இந்த நாவலுக்குள் நாம் புக முயன்றால் முதல் பக்கத்திலேயே படீர் என்று நாற்காலி முறிந்து விழ, நாம் சுதாகரித்துக் கொள்ள நேரும். கதை கேட்கின்ற பாப்பாக்களுக்கு இங்கு வேலை இல்லை. நாவலின் மொழியுடன் பரிச்சயம் செய்து கொள்ளவே கொஞ்சம் பயிற்சி வேண்டும். ஜெயமோகனின் இதர புத்தகங்களைப் படித்திருக்கிறீர்களா? அவரது இரண்டு சிறுகதைத் தொகுப்புக்களையும், நாவல் என்ற பகுப்பாய்வு நூலையும் படித்திருப்பது பிரயோசனமானது. புதுமைப்பித்தனை எல்லோரும் படித்திருக்கிறோம் இல்லையா, கபாடபுரம், பிரம்மராடிஸ், அன்று இரவு, அகலிகை, சாபவிமோசனம் கட்டிலை விட்டிறங்காக் காதை ஆகியவற்றை ஞாபகப் படுத்திக் கொள்ளுங்கள். எம்.வி. வெட்கட்டின் நித்தியகன்னி, காதுகள் முதலிய நாவல்களை படித்திருப்போம். ஜெயகாந்தனின் விருதுகள் நெருங்கதையை ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள். ஜெயமோகனின் கதைகளுள் டார்த்தீனியம், லங்காதகனம், மண், திசைகளின் நடுவே, போதி போன்ற கதைகளை கொஞ்சம் மீட்டிக் கொள்வோம்.

இனிப்படிக்கத் தொடங்கினால், ஆயாசமின்றிப் படித்து விடலாம். படித்து முடித்தீர்களா?

இதுகாலவரையில் தமிழில், வெளிவந்த நாவல்களில், நாவலின் கட்டமைப்பு, கதையை நகர்த்திச் செல்லும் லாவகம், மொழியின் செழுமை, கூர்மையான சிந்தனை, தர்க்கிக்கும் ஆற்றல், அடிக்கொருதரம் வாசகனை ஆசுவாசப்படுத்தி குசலம் விசாரித்து விவாதத்துடன் கூடிய சம்பாஷணை நடாத்தும் நேர்த்தி, தேர்ந்த நகைச்சுவை, பாத்திரங்களின் தன்மை ஆகியவற்றில் விஷ்ணுபுரத்துடன் ஒப்பிடக்கூடிய நாவல் எதுவும் இல்லை என்று அடித்துக் கூறலாம்.

ஆனால்...

பென்னாம் பெரிய ஆனால்...

(அடுத்த இதழில்)

– ரஞ்சகுமார்

www.tamilarangam.net



# பெண்கள் போர் வீரர்களாகவும் கள வீரர்களாகவும் !

அஜித்தா கதிர்காமர்

இலங்கையில் பெண்கள் குழுக்கள் தங்களது பலவகைப்பட்ட நியாயங்களுக்காகவும் போராடும் அதே வேளையில், சமூக வரையறைக்குள் பெண்களின் பங்களிப்பானது ஒரு புதிய அத்தியாயத்தை ஆரம்பித்திருப்பதை நாம் கண் கூடாகக் காண்கிறோம். போரில் போர் வீரர்களாகவும், களத்தில் சண்டை பிடிப்பவர்களாகவும், மற்றும் எந்தப் பக்கத்திலாயினும் தம்மால் இயன்றவரை பெண்கள் பங்களிப்பு செய்கின்றனர். வடக்கில் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் பெண்கள் அதிகளவில் இணைந்து வருகிறார்கள் என்பது கண்கூடு. அதேபோல் தெற்கிலும் இராணுவத்திலும், காவற்றுறையிலும் சேரும் பெண்களின் எண்ணிக்கை முன்னெப்பொழுதுமில்லாதவாறு அதிகரித்துள்ளது. அலுவலக வேலைகளில் பெண்கள் அடையாளத்துக்காக மட்டுமல்லாமல், உண்மையான யுத்த வீரர்களாக திறமையாகப் பயிற்றப்பட்டு, எதிரியை நகரவீதிகளிலும் இதனை விடக் கடினமாக உள்ள காட்டுப் பகுதிகளிலும் கூட சந்தித்துப் போரிடும் வல்லமை உடையவர்களாகவே சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.

நவீனகாலப் பெண்களுக்கு இத்தகைய பங்களிப்பு புதிதான ஒன்றாக இருக்கலாம். ஆனால் உண்மையில் வரலாறு வேறுவிதமாகவே உள்ளது. மனித வரலாற்றுக்காலம் பூராவும் போர்க்களத்தில் உக்கிரமாக நின்று போரிட ஆண்களைப் பெண்களே தூண்டி வந்துள்ளார்கள் எனத் தெரிய வருகிறது. கொள்ளைகளிலும், படையெடுப்புக்களிலும் ஆண்களோடு பெண்களும் சேர்ந்தே போயிருந்தார்கள் யுத்தக் களங்களில் போராட பெண்களும் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். போர் முனைகளில் காயமடைந்த ஆண்களையும் பெண்களே பராமரித்தனர். போர்க்களங்களில் ஆண்கள் நிற்க, வீட்டு வேலைகளை பெண்களே கவனித்து வந்தார்கள் என்பதும் உண்மை. தமது நாளாந்த வாழ்க்கைக்குத் திரும்பிய காயப்பட்ட போர்வீரர்களைப் பராமரிக்க இவர்கள் தயாராக இருந்தனர்.

பெண்களின் பங்களிப்பு இல்லாமல் எதுவும் நடைபெற்றதாகத் தகவல்கள் இல்லை. பெண்கள் சாதாரணமாக வீட்டைப் பராமரிப்பவர்களாகவும், குழந்தைகளைப் பெற்றுக் கொள்பவர்களாகவும், அண்மைக் காலத்தில் பெரும் மனக்குறையுடன் ஏற்றுக் கொள்ளப்பட்ட கொள்கைப்படி வருமானம் பெற்றுக் கொடுப்பவர்களாகவும் மட்டுமே சமுதாயத்தில் இடம் வகிக்கிறார்கள் என்று நம்பியிருப்போருக்கு, இந்த நாட்டில் பெண்கள் விரும்பி அடையக் கூடிய புதிய வாய்ப்புகள் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன என்பதை ஏற்றுக்

குழந்தைகளின் எதிர்காலத்தையும் பாதுகாக்கின்றவளாக மாறுகிறாள். இராணுவ அல்லது காவற்றுறை சீருடையில் இவள் எதிர்க்கும் எதிரிப் படையிலும் பெண்களே கூடுதலாகக் காணப்படுகின்றனர். இது மேலும் மேலும் அதிகரித்துச் செல்கின்றது. விடுதலைப் புலிகளின் பெண்கள் முன்னணியானது முன்னேறும் சண்டைப் பிரிவுகளாகவும், தற்கொலைக் குண்டுதாரிகளாகவும் இருக்கின்றது.

மூர்க்கத்தனமான சண்டைக்களங்கள் பெண்களுக்குரியனவல்ல என்று அநேகர் கருத்துத் தெரிவிக்கலாம். எவ்வாறாயினும் பெண்கள் ஆண்களைப் போன்றே ஆக்ரோசமுள்ளவர்களாகவும் போராட்டத் துடிப்பு மிகுந்தவர்களாகவும் உள்ளார்கள் என்று, பெண்கள் போர்த்திறன் பெற்றவர்கள் என வாதாடுபவர்கள் குறிப்பிடுகிறார்கள். மூன்றாம் மண்

பெண்மணி ஒருவர் கூறினார்: இவர்களைப் பார்க்கும் போது அவர்களில் தாமாக வரவழைத்துக் கொண்ட ஒரு மூர்க்கமான, வலிந்து தாக்கும் தன்மை தென்படுவதாகவும் மேலும் கூறியுள்ளார்.

பெண்களை இந்த யுத்த களங்களில் சண்டை பிடிப்பதற்காக இராணுவத்தில் சேரத் தூண்டியது என்னவாயிருக்கும்? தனது தாய் நாட்டைக் காப்பாற்ற வேண்டும் என்ற நாட்டுப் பற்றுடைய கடமையுணர்வா? அல்லது இந்த ஆண்கள் உலகத்தில் தன்னுரிமையை நிலைநாட்டவா? இல்லாவிடின், அதிகாரத்தின் மீதும் கட்டுப்படுத்தல் மீதும் கொண்டுள்ள அவாவா?

### சிறிய தலைக்குனிவு

முன்னை நாள் இராஜதந்திரியான 'மானெல் அபயசேகரா' தனது பார்வையில் இராணுவத்தில்

''இவர்கள் எப்போதும் அசாத்திய திறமையுடையவர்களாக இருப்பதைக் கண்டு அதிசயப்படுகின்றேன். ஏனெனில், மற்றெவரையும் போலல்லாது, தற்கொலையாளி ஒருவர் அசாத்திய திறமைகளைக் கொண்டிருக்க வேண்டும். நோயாளியாக இருந்தாலும், செத்துக் கொண்டிருப்பவராக இருந்தாலும் எல்லோரும் வாழ்வதற்காகவே போராடுகிறார்கள். இவர்கள் தாம் சாக வேண்டும் என விரும்பினால், அதற்குச் சரியான காரணம் ஒன்று இருந்தேயாக வேண்டும். ஆனால் இந்தச்சாவு அர்த்தமுள்ள ஒன்றாக இருக்க வேண்டும். நாங்கள் தற்கொலை செய்வதற்கு சில வேளைகளில் ஏதேனுமொன்றை இழந்த தாக்கத்துக்கு உட்பட்டிருக்கலாம். அல்லது வேறுபல உளவியல் காரணங்கள் இருக்கலாம். ஒரு தற்கொலைக் குண்டுதாரி ஏதோவொன்றை அழிக்கிறாள். அதன் மூலம் தன்னைத் தானேயே அழித்துக் கொள்கிறாள்.


அவளை ஆயுதம் ஏந்தச்செய்கின்றன.''

ஆனால் இவருடைய கருத்தின்படி, ஆயுதப்படை ஒன்றில் சேருவதற்கு பழிவாங்கும் நோக்கமும் காரணமாக இருக்கலாம் என்கிறார். இது ஒரு வகை ''பாடம் புகட்ட வேண்டும்'' எனும் போக்கு. ஆனால் இந்தக் கொள்கையானது ஆணுக்கோ, அல்லது பெண்ணுக்கோ இருக்கக் கூடாத தவறான இலக்குக் கொண்ட கொள்கையாகும்.

ஆக மொத்தத்தில் இது சமத்துவம் கேட்கும் பெண்களின் கோரிக்கைகளில் ஒரு சாதகமான முன்னேற்றமாகும். அத்துடன் இம்முயற்சியில் தொடர்ந்து ஈடுபடுபவர்கள் இற்றை வரை பெண்கள் எட்டியிராத சிகரங்களைத் தொடுவார்கள் என்பது நிச்சயம்.

### அந்தஸ்து

ஒரு புகழ்பெற்ற வணிகத்துறைப் பெண்மணியாக இருக்கும் ராணி ரட்நாயக்கா, பெண்கள் யுத்தத்தில் ஈடுபடுதல் எனும் கோட்பாட்டை எதிர்க்கிறார். ஏனெனில், இவரது கருத்துப்படி, குழந்தைகளின் எதிர்காலத்தை உருவாக்கும் காரணிகளுள் பெண்களே முக்கிய பங்கு வகிக்கின்றனர். பெண்கள் யுத்தத்துக்காக வெளியே போகும் பொழுது குழந்தைகள் தவறான வழிகளில் செல்லத் தலைப்படுவர் என்பது இவரது வாதம். சில பெண்கள் ஆயுதப் படையில் சேர்ந்து சில உயர் பதவி



டல நாடுகளில் உள்ள பல விடுதலை இயக்கங்கள் சண்டைக்கான விருப்பப்படியான ஆட்சேர்ப்பில் பெண்களை சேர்த்துக் கொண்டமை இதற்குச் சான்றுபகர்கின்றது.

இதனால் நாம், ஆண்களைவிட பெண்கள் கூடுதலாக சாவை விளைவிக்கின்ற சூழ்நிலையை எதிர்கொள்கின்றோமா?

கம்பீரமான, நிமிர்ந்த நன்னடையும் நேர்கொண்ட பார்வையுமாக சில வேளைகளில் அசாதாரண வளர்த்தியுடன் ஆயுதம் ஏந்திக் கொண்டு வீதிகளில் நடந்து செல்லும் பெண் காவற்றுறை உறுப்பினர் ஒருவரை கருதுகோளாக எடுங்கள்;

அவர்களுடைய நீளக்காற்சட்டைகள், சண்டைச் சப்பாத்துக்கள், தொப்பிகளுக்குள்ளே நீளமான கூந்தல்

இருப்பது பெண்களோ, ஆண்களோ என்பது பிரச்சினையல்ல எனக் கூறுகிறார். ஆனால், விடுதலைப் புலிகளைப் பொறுத்தமட்டில் குண்டுத் தாக்குதல்கள் போன்ற மூர்க்கத்தனமான நடவடிக்கைகளில் பெண்கள் ஈடுபடுவதும், இந்த நடவடிக்கைகள் புகழப்படுவதும், பாராட்டப்படுவதும் சமுதாயத்தையும் பெண்களையும் நலிவுறச் செய்கின்றன. அவர் மேலும் கூறியதாவது:

''ஒழுங்கான ஒரு இராணுவ அமைப்பெனில், அங்கு வழக்கங்கள் விதிகளாக்கப்பட்டிருக்கும். ஆனால் ஒரு பயங்கரவாதக் குழுவொன்றில் இலக்கை எட்டுவதற்காக மேற்கொள்ளப்படும் சகலவித அணுகுமுறைகளும் இருக்கும் இதில் ஈடுபடுவது என்பது பெண்களைப் பொறுத்த மட்டில் பெருமைக் குறைவை



பெண்களை இந்த யுத்த களங்களில் சண்டை பிடிப்பதற்காக இராணுவத்தில் சேரத் தூண்டியது என்னவாயிருக்கும்? தனது தாய் நாட்டைக் காப்பாற்ற வேண்டும் என்ற நாட்டுப் பற்றுடைய கடமையுணர்வா? அல்லது இந்த ஆண்கள் உலகத்தில் தன்னுரிமையை நிலைநாட்டவா? இல்லாவிடின், அதிகாரத்தின் மீதும் கட்டுப்படுத்தல் மீதும் கொண்டுள்ள அவாவா?

கொள்வது இயலாமல் இருக்கும். இது ஆண்களோடு எந்தவித தடையுமின்றி பெண்களும் சரிசமமாக தடம் பதிக்க ஏற்படுத்திக் கொடுக்கப்பட்ட வாய்ப்பும் ஆகும்.

### எதிர்பாராதது

தற்காலப் பெண்ணொருத்தி தனது நாட்டைப் பாதுகாப்பதற்காக ஆயுதம் ஏந்துகின்ற வாய்ப்பைப் பெற்றிருக்கின்றாள். இதன் மூலம் காலப் போக்கில் தனது குடும்பத்தையும் வீட்டுச் சூழலையும் பிறக்கப் போகும்

லாவகமாக மடித்து வைக்கப்பட்டுள்ள தன்மை, கடும் பயிற்சியினால் கிடைத்த தன்னம்பிக்கை மூலம் ஆயுதத்தை எளிமையாக ஏந்தி வைத்திருக்கும் பாணி ஆகியவற்றைப் பார்க்கையில், உண்மையில் ஒருவர் 'இந்தப் பெண்கள் என்ன, சிறீலங்காப் பெண்களின் புதிய ஒரு வகையினரோ' என ஆச்சரியப்படுவர்.

இவர்கள் நிற்கும் சோதனைச் சாவடிகளில் விசாரணைக்காகத் தடுத்து நிறுத்தப்படும் போது, தான் பயப்படுவதாக எமக்குத் தெரிந்த

ஏற்படுத்தும். அவர்கள் உயிரை உயிராக மதிப்பதில்லை.''

தேசிய பெண்கள் கழகத்தின் தலைவராக இருக்கும் மானெல் பெண்கள் துப்பாக்கிகளிலும் அதன் வழிவந்த வன்முறைகளிலும் தம்மை ஈடுபடுத்திக்கொள்வதற்கு அவர்கள் மனதில் தோன்றும் எத்தகைய உளவியல் தீர்மானங்கள் துணை போகின்றன என்பது பற்றி தன்னைத் தானே கேட்டுக் கொள்கிறார். விடுதலைப் புலிகளைப் பற்றிய தனது கருத்தில் சிலவற்றை இவர் கூறினார்:

வெறுப்பும், மாயை நீங்கிய தன்மையுமே இதற்குக் காரணமாகும்.''

வணிக, தொழில் சார், பெண்கள் ஒன்றியத்தின் இணைச் செயலாளராகவும், தொழிற்துறை ஒன்றில் காரியதரிசியாகவும் கடமையாற்றும் மல்காந்தி டி சில்வாவிடம், பெண்கள் ஆயுதம் ஏந்தத் தகுதியாவதற்கு எத்தகைய ஆளுமையைக் கொண்டிருக்க வேண்டும் என்ற கேள்வியைக் கேட்டேன்.

அவருடைய பதில் வருமாறு;

''குறிப்பிட்ட பெண் உளவியல் ரீதியாக இதன் பாதிப்புக்குள்ளாகியிருக்க வேண்டும். கசப்பான அனுபவங்களைக் கொண்டிருக்க வேண்டும். சில வேளைகளில் தங்கள் அன்புக்குரியவர்களை இவ் வன்முறையினால் இழந்திருக்க வேண்டும். இவை தான்

களை அடைந்திருப்பதையும், அவர்கள் ஆயுதம் கொண்டு செல்வதையும் பார்த்து இவர் பெருமை கொள்ளும் அதேநேரம், போர் முனையில் சென்று பெண்கள் சண்டை பிடிப்பதை இவர் விரும்பவில்லை.

இவர் விடுதலைப் புலிகளின் பெண் போராளிகளின் கொள்கைகளையும் நோக்குகின்றார். இப்போராளிகள் தங்களது நியாயத்துக்கு அப்பால், தாங்களே தங்களுக்கான ஒரு வாழ்க்கை முறையை வகுத்துக் கொள்ளும் வாய்ப்பாகவே இதைப்பயன்படுத்துகின்றனர். பழகும் சுதந்திரமும், சமூக கருத்து மோதலுக்கான வாய்ப்பும் இவ்வியக்கத்தில் சேர்ந்து கொள்ளும் பெண்கள் அடையும் நன்மைகளாகும்.

→19

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## முன் கதைச் சுருக்கம்

ஜேர்மனியின் பெரிய வீதிகளில் ஒன்று. எங்கு பார்த்தாலும் கார்கள்... லொறிகள்.. பாரிய வாகனங்கள்.. நீளத்திற்கு வரிசையமைத்திருந்தன.

பொறுமையிழந்தவர்கள் காரிலிருந்து இறங்கித் தாராளமாகத் திட்டினார்கள். மற்றும் பலர் சிகரெட் பிடித்தார்கள். கொண்டுவந்திருந்தவர்கள் எடுத்துச் சாப்பிட்டுக் குடித்தார்கள். ஒரு சிலர் புதினம் பார்க்க நடந்து போனார்கள்.




எல்லாக் கார்களுக்கும் முன்பாக பொலிஸ் வாகனங்கள், நீல வெளிச்சம் கக்கியபடி. தொடர்புக் கருவிகள் பரபரப்பாயிருந்தன.

முற்றிலும் ஆயுதபாணிகளாகவும், கவசமணிந்துமிருந்த பொலிசார் நிலைமையைத் தலைமையகத்திற்கு அறிவித்து அங்கிருந்து கட்டளைகளைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

இவர்களுக்கும் முன்னால் சுமார் நூறுக்கும் மேற்பட்ட குர்திஸ்காரர்கள் பாதையில் குறுக்கு மறுக்குமாகத் தங்கள் வாகனங்களை நிறுத்தி வைத்துக்கொண்டு தங்கள் பாஷையில் முழங்கிக் கொண்டிருந்தார்கள். பாதையில் படுத்துமிருந்தார்கள். அவர்களில் சில ஜேர்மனியர்களும் கலந்திருந்தனர். அவர்களுக்கும், பொலிஸாருக்குமிடையில் நின்று மூன்று குர்திஸ்காரர்கள் ஒரு கையில் பெற்றோல் வாளியும், மறுகையில் லைற்றருமாக விறைத்திருந்தார்கள்.

மேலால் இரண்டு ஹெலிகள் வட்டமடித்துக் கொண்டிருந்தன.

நேரம் போனது.

நாள் போனது.

பின்-

தலைமையகக் கட்டளைக்கிணங்க சில பொலிஸ்காரர்கள் துப்பாக்கிகளை நீட்டிப்பிடித்தபடி அடியெடுத்து வைத்தார்கள்.

தங்களது எச்சரிக்கை மீறப்பட்டவுடன் முதலாவது குர்திஸ்காரன் தனக்கு மேல் பெற்றோல் ஊற்றி நெருப்பைப் பற்றவைத்தான்.

தீப்பிடித்தது.

பொலிஸ் பின்வாங்கியது.

"குர்திஸ்தான் வாழ்க!"


"துருக்கிய அரசை முறியடிப்போம்!"

"ஜேர்மனியப் பணமும் இராணுவ உதவிகளும் குர்திஸ் மக்களைக் கொலை செய்கின்றன."

கோஷங்கள் ஹெலியின் இரைச்சலையும் மீறிப் பலமாய் ஒலித்தன.

எல்லோரும் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவன் முழுதாய் எரிந்து முடியும்வரை..

பொலிஸ்காரர்கள் வீடியோவில் படம் பிடித்தார்கள்.




**பார்த்திபன்**

மாரிகால மாலை. குளிர் கலந்த இருள்.

அவிழ்த்துப்போட்டு நின்ற மரங்கள் பனியில் சிலிர்த்துப் போயிருந்தன. பாதையையும், சிறிய செடிகளையும் வெண்பனி பக்குவமாய்ப் போர்த்தியிருந்தது. காற்று விறைத்திருந்தது.

வீடுகளிலும், தெருக்களிலும் வெளிச்சம் போட்டிருந்தார்கள். சனி பிற்பகுதிக்குரிய நெரிசலற்ற போக்குவரத்து. ஆங்காங்கே சிறுவர்கள் பனியை எறிந்தும், உருவங்கள் செய்தும் விளையாடிக் கொண்டிருந்தார்கள். குதூகலித்து ஆரவாரித்தார்கள்.

குளிருக்கெதிராக அல்கஹோலை சிலர் நாட, இளஞ்சோடிகளோ இறுக அணைத்து, உதட்டோடு உதடு சேர்த்து வெப்பமானார்கள்.

**புள்ளி** X' என்ற கொஞ்சமாய் பாழடைந்துபோன அந்த மண்டபத்தில் நிறையப்பேர் குழுமியிருந்தார்கள். அவர்களது தோற்றம் ஜேர்மனிய அடையாளங்களுக்கு முரணாயிருந்தது. தலையைக் கோணல் மாணலாக வெட்டியிருந்தார்கள். அதற்குப் பலவர்ணங்களும் பூசியிருந்தார்கள். எல்லோரும் கறுப்பு லோங்சும், ரீ சேட்டும் போட்டிருந்தார்கள். அவை கசங்கியும், பொறுத்த இடங்களில் கிழிந்துமிருந்தன. தடித்த இராணுவச் சப்பாத்துகள் பழசாயிருந்தன. மூக்குத்தி, காதுக்குத்திகளும் தென்பட்டன. கட்டிடத்துச் சுவர்களைப்போலவே ரீ சேட்டுகளிலும் அரசியல் விமர்சனங்களைத் தடித்த மையினால் கிறுக்கியிருந்தார்கள். நாஸிகளுக்கெதிரான சின்னம் பரவலாகக் குத்தப்பட்டிருந்தது. Aயைச் சுற்றி வட்டம் போட்டிருந்தார்கள்.

ஓட்டோனொமன்களாகிய அவர்களின் வருடாந்தச் சந்திப்பு. முன்னைய வருடங்களைப போலவே இன்றும் நிறைய நிகழ்ச்சிகள். கலந்துரையாடல்கள், வாக்குவாதங்கள் பகலில் முடிந்து இப்போது ஆடல் பாடல்களை எதிர்பார்த்திருந்தார்கள்.

மேடை போன்ற இடத்தில் வாத்தியங்களைச் சிலர் சரிபார்க்க, ஒலிப் பெட்டிகள் பலமாகச் சத்தம் போட்டன.

பியர் போத்தல்கள் கிலுங்க, எங்கும் புகை மயம்.

பாதையில் போன ஒறிஜினல் ஜேர்மனியர்கள் இவர்களை விசித்திரமாகப் பார்த்து, அருவருத்துப் போனார்கள். கடும் கோபம் கொண்டவர்கள் நடுவிரலை நீட்டிக்காட்டித் திட்டினார்கள்.

* * *

குற்றவியல் திணைக்களம்.

இரண்டு உயர் அதிகாரிகள் மட்டும் அந்த அறையிலிருந்து புகைத்துக் கொண்டிருந்தார்கள். முகங்கள் தீவிரமாயிருந்தன.

"அவர்களது நடவடிக்கைகள் மிகவும் மோசமாகிவிட்டன. பொறுத்திருப்பது ஆபத்தானது."

"எங்களுக்கு விளங்குகிறது. விளங்க வேண்டியவர்களுக்கும் விளங்க வேண்டுமே. பக்கம் பக்கமாக அறிக்கைகள் எழுதியனுப்பியாகிவிட்டது."

"தேர்தலை நினைத்துப் பயப்படுகிறார்கள் போலும். துணிவில்லாத அரசியல்வாதிகள்."

"இப்போது இப்படியிருப்பார்கள். நிலைமை மோசமானபின் எங்கள் மீதுதான் பாய்வார்கள்."

"எமது ஒப்பிரேசன் X சரி வருமா?"

"நம்பிக்கை இருக்கிறது. இம்முறை பி.என்.டியை அணுகியிருக்கின்றேன். அவர்களிடம் நிறையத் தகவல்கள் இருக்கின்றன. எப்படியும் வென்று தருவார்கள். அவர்கள் முடிவு எந்த நேரத்திலும் வரலாம். நாம் தயாராக இருக்க வேண்டும்."

அவர்கள் இருவரும், உயிராயிருந்த கணனியின் முன் காத்திருந்தார்கள்.

இசைக் குழு முழங்கத் தொடங்கிவிட்டது.

எல்லாம் அடக்குமுறைக்கெதிரான பாடல்கள் தான். வரிக்கு வரி சூடு கிளம்பியது. தங்களுக்குப் பிடித்த வரிகள் வரும்போது கைதட்டி விசிலடித்தார்கள். தாங்களும் சேர்ந்து பாடினார்கள்.

ஒரு பகுதி ஓரளவுக்குச் சுமாராக ஆடியது. பியர் போத்தல்கள் தொடர்ந்து காலியாகிக் கொண்டிருந்தன. அந்த நேரத்திலும் இரண்டொருவர் தனித்து நின்று அரசியல் கதைத்தார்கள்.

சுவர்களில் ஜேர்மனிய அரசியல் தலைவர்களின் கேலிச் சித்திரங்களுக்குக் கீழ் தாறுமாறாகக் கிழித்து எழுதியிருந்தார்கள். தூசணங்களும் பரவாயில்லை.

சேகுவேராவின் தொப்பி போட்ட படம் மட்டும் அழகாயிருந்தது.

இசைக்குழு பொப் மாலியின் பாட்டை முடித்து, தாங்கள் சுயமாக இயற்றிய 'அகதிகளைக் கொளுத்துபவர்கள் பாராளுமன்றத்தில்....' என்ற பாடலை ஆரம்பித்தார்கள்.

கேட்டுக் கொண்டிருந்தவர்கள் உணர்ச்சி வசப்பட்டார்கள்.

* * *

பி.என்.டியின் இரகசிய அறைகளில் ஒன்று.

அங்கிருந்த மூவரில் அரசியல்வாதியும் ஒருவர். மிகவும் கவனமாக வார்த்தைகளை அளந்து கதைத்துக் கொண்டிருந்தார்கள்.

"இது தேர்தல் வருடம். எதிர்க்கட்சிகள் உன்னிப்பாக இருக்கின்றன. சிறிய தகவல் கசிந்தாலும் உசாராகிவிடுவார்கள்."

"அவர்களுக்கும் இவர்கள் எதிரிகள்

→

## முன் கதைச் சுருக்கம் (தொடர்ச்சி...)

இருள் சுத்தமாக நகரைப்பூசியிருந்தது. அவ்வப்போது வாகனங்கள் போய் வருவதைத் தவிர வேறு சத்தமில்லை.



எறோற்றிக் படம் பார்க்காத வீடுகள் தூங்கிப்போயிருந்தன. ஏற்கெனவே அது ஒதுக்குப்புறமான குடியிருப்புத்தான்.

தெருவின் முடிவிலிருந்த நான்கு மாடிக்கட்டிடத்தின் முன் அந்த வான் சத்தமில்லாமல் நின்றது. மிக எச்சரிக்கையுடன் அதிலிருந்து இறங்கிய நால்வர் இருளுடன் கலந்தார்கள்.

உரிய திறப்புக்குப் பதிலாக வேறு கம்பிகள் முயற்சி செய்ததால் நான்கு மாடிக் கட்டிடத்தின் முன் வாசல் தாமதமாகவே திறந்தது. பேனா விளக்கு வெளிச்சம் படிகளில் ஏறியது. இரண்டாம் மாடியின் வலது பக்கக் கதவும் தாமாகவே சத்தமின்றித் திறந்து உடன் மூடியது.

உள்ளேயிருந்து சில பொருட்கள் உடைந்த சத்தமும் ஒருவனின் அலறலும் வெளியே கேட்கவில்லை.

எல்லாக் கதவுகளும் திரும்ப மூடி, வான் புறப்படும் போது, தற்செயலாக ஒரு வீட்டின் சன்னலால் எட்டிப்பார்த்த ஒருவர் வானைக் கவனித்தார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



என்பதுதான் இங்கு முரண்நகை.''

''இதுவரை எவ்வளவோ பெரிய வேலைகள் செய்திருக்கின்றோம். ஒன்று கூட வெளியாக வில்லை. இப்போது செய்யப்போவது மிகச் சின்ன வேலை. ஒரு சிறு பிள்ளையின் விளையாட்டைப் போல''

''எதற்கும் எச்சரிக்கையாய் இருப்பது நல்லது. பத்திரிகைகள் கூட எல்லா இடங்களிலும் உளவுக்கு ஆட்கள் வைத்திருக்கிறார்கள்.''

''எங்களையே உளவா?'' என்று சிரித்தார் பி.என்.டி. அதிகாரிகளில் ஒருவர்.

''இதில் மொத்தமாக எத்தனை பேர் சம்பந்தப்படுவார்கள்?''

''நாங்கள் மூவர், நீங்க்ள், உங்கள் நகர குற்றவியல் திணைக்கள அதிகாரிகள் இருவர், முக்கியமாக உள்நாட்டமைச்சர். இவ்வளவுதான்.''

## பலமா ? பலமா ? பலமா ? பலமா ? பலமா ? பலமா ?
## பலமா ? பலமா ? பலமா ? பலமா ? பலமா ? பலமா ?
## பலமா ? பலமா ? பலமா ? பலமா ? பலமா ? பலமா ?
## பலமா ? பலமா ? பலமா ? பலமா ? பலமா ? பலமா ?

''இவர்கள் எந்தளவுக்கு ஆபத்தானவர்கள் என்று இதுவரையான தகவல்கள் சொல்லுகின்றன?''

''அரசாங்கத்திற்கு எதிரானவர்கள் என்பது தெளிவு. வெளிநாட்டு இடதுசாரிப் பயங்கரவாதிகளுடன் தொடர்பு உண்டு. இங்குள்ள வெளிநாட்டு அரசியற் குழுக்களும் பின்னணியில் இருக்கிறார்கள். இதுவரை சாதாரண ஆயுதங்கள் வைத்திருப்பதே கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. விரைவில் பயங்கர ஆயுதங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.''

''இப்போது நீங்கள் உத்தேசித்துள்ள ஒப்பிறேசன் X இனால் எதிர்பார்க்கப்படுகின்ற விளைவுகள் நிச்சயமானவை என்று நம்புகின்றீர்களா?''

''ஆம். அவர்கள் கூடுவதற்கும், பொதுசன வேலைகளில் ஈடுபடுவதற்கும் அந்த மண்டபம் தான் உதவுகிறது. அதை அவர்களுக்கு இல்லாமல் ஆக்கிவிடலாம். அவர்களுக்கு ஆதரவு கொடுக்கின்ற சாதாரண மக்களுக்கு அவர்கள் மேல் வெறுப்பை உண்டாக்கிவிடலாம். சனநாயக நடவடிக்கையில் ஈடுபடாதவகையில் அவர்களுக்கு நெருக்கடி கொடுத்தால் பொலிசார் அவர்கள் மீது எப்போது வேண்டுமானாலும் நடவடிக்கை எடுக்க உதவியாயிருக்கும். முக்கியமாக எமது நடவடிக்கையினால் அவர்களில் தீவிரமானவர்களை கைது செய்து சிறையிலடைத்தால் மற்றவர்கள் சிதறிவிடுவார்கள்.''

## பின்கதைச் சுருக்கம்

*சில மாதங்களின் பின்-*

*புகையிரதங்கள் கடைசியாக நிறுத்தி வைக்கப்படும் தரிப்பிடம்.*

*இறுதிப் புகையிரதத்தையும் நிறுத்தி விட்டுப்போன சிலமணி நேரங்களின் பின், அவை தீப்பிடித்து எரியத் தொடங்கின.*

*பொலிஸ், தீயணைப்புப்படை எல்லாம் விரைந்து வந்தன.*

*அணுக் கழிவுகளை ஏற்றிவருவதற்கான எமது எதிர்ப்பு, இந்த வடிவில் தொடரும் என்ற உரிமை கோரல் பொலிசுக்குக் கிடைத்தது.*

''விட்ட பிழைகளிலிருந்து கற்றுக்கொண்டு கவனமாயிருக்கின்றோம்.''

''உங்கள் நடவடிக்கைக்கு எனது சம்மதம்.''

* * *


புள்ளி Xகட்டிடத்திற்கு முன்னாலுள்ள கத்தோலிக்க தேவாலயத்திற்கு மிகவும் சாமர்த்தியமாக ஒளிந்து ஒளிந்து ஒருவன் வந்தான். தான் கொண்டு வந்த பொருட்களை எடுத்து முயற்சியில் இறங்கினான். பிறகு வந்தவழியே மறைந்தான்...

சிறிது நேரத்தின் பின்..

## முன்கதைச் சுருக்கம் (தொடர்ச்சி...)

*ஜேர்மனிய, நெதர்லாந்து எல்லை.*

*ஐரோப்பிய இணைவில் உத்தியோகபூர்வ எல்லைகள் காணாமல் போயிருந்தன. என்றாலும், சாதாரண உடையிலும், சாதாரண கார்களிலும் பொலிஸ்காரர்கள் ஆங்காங்கேயிருந்து கவனித்துக் கொண்டிருந்தார்கள். கோடை கால விடுமுறைக்காலம். கார்களுக்கு மேலோ அல்லது பின்னாலோ சைக்கிள்கள் கட்டப்பட்டிருந்தன. இழுத்துக் கொண்டு இத்தனை நாள் உழைத்து சந்தோசிக்கவே என்ப*



*படகுகளையும் போனார்கள். ஊர் சுற்றிச் தாக அவர்கள்.*

*வாகனங்களின் வெளிச்சக் கத்தால் தெரிந்த அந்தநேரத்து*

*முன்பக்கத்தால் வந்த கோடுகளும், பின் பக் சிவப்புப் புள்ளிகளுமே இயக்கமாயிருந்தன.*

*நடுநிசிக்குப்*

*பின்னதாக.*

*நெதர்லாந்து ஜேர்மனியப் எல்லைப்பொலிசாருக்கு பொலிசாரிடமிருந்து தகவல் வந்தது.*

*அவர்கள் காத்திருந்து, அந்த வான் வந்தபோது, குறுக்கே வந்து மறித்தார்கள். ஆயுதம் தரித்திருந்த பொலிசார் தடதடவென வானைச் சூழ்ந்தார்கள்.*

*சாரதி ஆசனத்திலும், பக்கத்திலும் ஜேர்மனியர்கள்.*

*பொலிசார் மிகக் கவனமாக வானின் பின் கதவைத் திறந்தபோது - பயந்த விழிகளுடன் அல்ஜீரியர்கள்.*

## இன்றைய குட்டிக் கதை

*ஜேர்மனிக்குத் தமிழர்கள் புலம்பெயர்ந்து பல ஆண்டுகள் போயிருந்தன.*

*அவர்கள்-*

*திரையிசை நடனம் ஆடினார்கள்.*

*பெண்பிள்ளைகளுக்குச் சாமத்தியச் சடங்கு முடிந்ததும் இலங்கை அல்லது இந்தியாவில் விட்டு சுத்தமாக வளர்ப்பதைப்பற்றி யோசித்தார்கள்.*

*செற்றியிலிருந்து ஜொனிவோக்கர் அடுத்தபடி சோவியத் யூனியனின் சரிவை ஆராய்ந்தார்கள்.*

*நாஸிகள் துரத்தினர்.*

''அவரும் உங்கள் அரசியல் கட்சிதானே.''

''அவருக்கு ஏற்கெனவே விபரமாகத் தொலைநகல் அனுப்பிவிட்டோம். மேலதிக விபரங்கள் தேவைப்படின் அவர் எம்முடன் தொடர்புகொள்வார்.''

''அவருடைய பதிலைத்தான் பார்த்துக் கொண்டிருக்கிறோம். எந்த நேரத்திலும் தொடர்பு கொள்ளலாம்.''

காத்திருந்தார்கள்.

உள்நாட்டமைச்சர் தொலைபேசியில் கதைத்துக் கொண்டிருந்தார். கையில் தொலைநகல் இருந்தது.

''நீங்கள் எழுதிய சம்பவங்களுக்குத் தகுந்த ஆதாரங்கள் இருக்கின்றனவா?''

''நிச்சயமான ஆதாரங்கள் இருக்கின்றன. அவர்களின் கடந்த கால நடவடிக்கைகளை ஏற்கெனவே உங்களுக்கு அனுப்பி வைத்திருக்கின்றோம். அண்மைக்கால நடவடிக்கைகளையும் சேகரித்திருக்கின்றோம். குர்திஸ்காரர்களின் வீதித்தடை நடவடிக்கைகளில் இவர்கள் பங்குபற்றியது எம்மிடம் வீடியோ நாடாவாக இருக்கிறது.

தம்மில் ஒருவனைத் தாக்கிய புதிய நாஸிக்காரனின் வீட்டுக்குள் புகுந்து அவனது உடைமைகளைச் சேதமாக்கியதுடன், அவனையும் குற்றுயிராக்கிவிட்டு இவர்கள் தப்பிச்சென்றபோது இவர்கள் வானைப் பக்கத்து வீட்டுக்காரர் அவதானித்திருக்கிறார். தேவையென்றால் இன்னும் சாட்சியங்களை நாங்கள் உருவாக்கலாம். ஏனெனில் அந்தக் கட்டிடத்தில் வசிப்பவர்களில் பெரும்பாலானோர் புதிய நாஸிக் கட்சியைச் சேர்ந்தவர்கள் தான். கடைசியாக நாடு கடத்தப்பட இருந்த அல்ஜீரியக் குடும்பங்களைச் சட்டவிரோதமாக நெதர்லாந்துக்குக் கடத்தியமைக்கு நெதர்லாந்துப் பொலிசார் விசாரணைகளும்

''கவனம் தேவை. ஏற்கெனவே பேர்லினில் நடந்த ஊர்வலத்தில் பொலிசாரே ஊர்வலக்காரர்கள் போல கலந்து கலகத்தைத் தொடக்கி வைத்ததைப் பத்திரிகைகள் மோப்பம் பிடித்துவிட்டன.''



பலத்த சத்தம். தேவாலயம் தீப்பிடித்து எரியத்தொடங்கியது.

**புள்ளி** Xஇல் குழுமியிருந்தவர்கள். பரபரப்புடன் வெளியே ஓடிவந்தார்கள். நெருப்பைப் பார்த்தார்கள். சிலர் தேவாலயத்தை நோக்கி ஓடினார்கள்.

அயல் வீடுகள் விழித்துக்கொண்டன. தூக்கக்கலக்கத்துடன் சன்னல்களைத் திறந்தார்கள். தேவாலயத்திற்கும், புள்ளி X க்குமாக ஒட்டொனொமன்கள் ஓடித் திரிவதைப் பார்த்தார்கள். பொலிசுக்குப் போன் செய்தார்கள்.

தயாராக இருந்த பொலிசார் வந்து புள்ளி Xஐ சுற்றிவளைத்தார்கள். வெளியே நின்றவர்களையும் உள்ளே இழுத்துவந்து அடைத்தார்க்ள். அவர்கள் எல்லோருடைய விபரங்களும் பொலிஸ் கணனியில் பதியப்பட்டன. ஏற்கெனவே திட்டமிட்டபடி குறித்த ஆறு பேருக்கு விலங்கு மாட்டி, பொலிஸ் வானில் ஏற்றினார்கள்.


....இன்றிரவு நூறன்பேக் சங்ற் ஜோசப் தேவாலயத்திற்கு தீவைக்கப்பட்டது. இத்தேவாலயத்திற்கு முன்பாக உள்ள புள்ளி X என்ற மண்டபத்தில் கூடியிருந்த இடதுசாரித் தீவிரவாதிகளே இந்நெருப்பை வைத்ததாக அயல்வீடுகளில் வசித்தவர்களின் சாட்சியங்கள் மூலம் தெரியவந்துள்ளது. தீவைப்புக்கான காரணம் இதுவரை வெளியாகவில்லை. கருக்கலைப்பைத் தடுக்கவேண்டுமென்ற பாப்பரசரின் வேண்டுகோளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கவே தீவைத்திருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது. நேரடியாகச் சம்பந்தப்பட்ட ஆறு பேரைப் பொலிசார் கைது செய்துள்ளனர். புள்ளி X காலவரையறையின்றி மூடப்பட்டுள்ளதாக நகர முதல்வர் அறிவித்துள்ளார். இம்மண்டபத்தை மூடிவிடும்படி ஏற்கெனவே இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்தது தெரிந்ததே. இக்குழுவினர் பொலிசாரின் கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட வேண்டுமென அரச வழக்கறிஞர் தெரிவித்துள்ளார் அமெரிக்காவில் கிளின்டனின் பாலியல்....

நன்றி : இன்னுமொரு காலடி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# நாடக வரலாறு :

## எழுதப்படும் முறை குறித்துச் சில கேள்விகள் !

இன்று ஈழத்துத் தமிழ் நாடகம் அதன் வரலாற்றுப் பாரம்பரியப் பின்னணி பற்றிப் பேசும்போது, பல்கலைக்கழகம் சார்ந்த நாடக அளிக்கைகளில் மட்டும் இருந்தே வரலாறு எடுத்துப் பேசப்படுகிறது. எழுதப்படுகிறது. இது ஏன்? என்ற வினா இயல்பாக எழுகின்றது?

இன்றுவரை பல்கலைக்கழக மட்டத்தில் அளிக்கை செய்யப்பட்ட நாடகங்கள் அதனுடன் தொடர்புடைய அளிக்கையாளர்களின் பெயர்களை மாத்திரமே திரும்பத் திரும்பவும் மந்திர உச்சாடனம் போல் உச்சரிக்கப்படுகின்றன. அப்படியானால் 1950களின் பின்னர் பேராதனையில் அளிக்கை செய்ப்பட்டபோது அதற்கு முன்னரும் சரி, - அதே சமகாலத்தில் பல்கலைக்கழகங்களுக்கு அப்பால் பல்வேறு சமூக மட்டங்களிலுச் சரி, நாடக அளிக்கைகள் இடம்பெறவேயில்லையா? இன்றும், கூட பல்கலைக்கழக மட்டங்களுக்கு வெளியில் அளிக்கைகள் எதுவுமே இடம்பெறாமல் தான் உள்ளனவா? போன்ற வினாக்கள் எம்முன்னால் எழுகின்றன.

ஈழத்தில் பல்வேறு நாடக அளிக்கைகள் இடம்பெற்றிருக்கின்றன. இடம்பெற்று வருகின்றன. ஆனால் அவற்றுள் ஒன்றே பல்கலைக்கழக மட்டத்தில் அளிக்கை செய்யப்படும் நாடகங்கள். இவை மாத்திரமே ஈழத்தின் தமிழ் நாடக வரலாறாக முடியாது.

நாம் ஈழத்தின் சமூக வரலாற்றுப் பின்புலங்களை அவற்றினூடு வெளிக்கிளம்பும் சிரத்தைகளை ஏனோ மறந்து அல்லது மறுத்து வரலாறு ஒன்றைக் கட்டமைக்கும் போக்கை நமது பல்கலைக்கழகம் சார்ந்தோர் தொடர்ந்தும் செய்து வருவதுதான் புரியவில்லை. இன்னொரு விதத்தில் கூறினால், வரலாற்று மோசடிகளை வரலாற்று இருட்டிப்புக்களைத் தான் தமது சமூக இருக்கையின் அங்கீகாரம் நிமித்தம் செய்து வருகின்றார்கள்.

நாம் இன்று இந்தப் பின்னணிகள், போக்குகள் குறித்து உரத்துச் சிந்திக்கவேண்டிய, மறுவிசாரணை செய்ய வேண்டிய கட்டத்திற்கு தள்ளப்பட்டுள்ளோம். பல்கலைக்கழக மரபு மாத்திரமே மையப்படும் போக்கை பிரச்சினைப்பாடாகக் கருதி அதை மாற்றவும், அது தொடர்பான சில சிந்தனைகளையும் கேள்விகளையும் முன்வைக்கும் ஓர் தொடக்க முயற்சியாக இக்கட்டுரை அமையும்.

நமக்கு நாடகம் மேற்கத்தைவர்களின் வருகையின் பின்னரே அறிமுகமான கலை வகைமை அல்ல. ஆனால், நமக்கு மேற்கத்தைய சிந்தனையின் தாக்கத்தால் புதிய கலை வகைமைகள் பல அறிமுகமானவை என்பது உண்மைதான். அவற்றை சிறுகதை, நாவல், புதுக்கவிதை, நவீன ஓவியம், நவீன நாடகம் என வகைப்படுத்தப்படலாம்.

இன்று தமிழுக்கு சிறுகதையும், நாவலும் புதிய வகைகள். ஆனால் நவீன நாடகம், நவீன ஓவியம் புதுக்கவிதை யாவும் அப்படியல்ல. இவை யாவும் ஏலவே நம்மிடமிருந்தவற்றின் மாற்றாக நமக்குக் கிடைத்தவை எனலாம்.

புதிய மத்தியதரவர்க்க எழுச்சியுடன் புதிய வாசகக் கூட்டத்தை உருவாக்கிக் கொண்டு நாவல், சிறுகதை வகைமைகள் தங்களை நிலைநிறுத்திக் கொண்டன. ஆனால், ஏனைய வகைமைகளான நாடகம், கவிதை, ஓவியம் யாவும் நமது நீண்ட பாரம்பரியச் செழுமையின் தொடர்ச்சியில் இருந்து வளர்ச்சியடைந்து வருகின்றன.

நவீன ஆங்கிலக் கல்வியின் அறிமுகம் பல்வேறு புதிய வகையிலான சிந்தனைப் பாங்குகளை, கற்றல்களை எம்மவர்க்கு அறிமுகமாக்கின. இதனால் நாடகம் பற்றிய சிந்தனைகளையும் வளர்த்தன. சேக்ஸ்பியர் போன்ற மேற்கத்தைய நாடகாசிரியர்களின் நாடகங்களை கற்றோர் மட்டத்தில் படிக்கும் ஓர் ஆர்வத்தையும் அதிகரித்தது. இது மேலும் இலக்கியச்சுவை என்பதற்காக மேலை நாடகங்களை படித்தல், சுவைத்தல் என்னும் போக்கொன்றையும் எம்மிடையே வெளிப்படுத்தின.

இலங்கையின் பல்கலைக்கழக மட்டத்தில் ஆரம்பத்தில் இருந்தே பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் நாடகத் துறையில் அக்கறை செலுத்தியிருக்கின்றனர். பிரான்சிஸ் கிங்ஸ்பெரி, சுவாமி விபுலானந்தர், கணபதிப்பிள்ளை, வித்தியானந்தன் போன்ற பெயர்களைக் குறிப்பிட முடியும். இது இவர்களுடன் மட்டும் நிற்கவில்லை. பின்னர் வந்த பேராசிரியர்களாலும், விரிவுரையாளர்களாலும் கூட இது கவனிப்புப் பெற்ற துறையாகவே இருந்து வருகின்றது.

சாதாரண மக்கள் மத்தியில் இயல்பான முயற்சிகளாக நடைபெற்றுவந்த நாடகச் செயற்பாடுகள் இன்று கற்றோர் மட்டத்தில் மோடிமைப்படுத்தப்பட்டு மீளவும் புதிய பாணியில் நிகழ்த்தப்படும் கலை வகைமையாக மாற்றப்பட்டு வருகின்றன.

வளர்ந்து வரும் மத்தியதர வர்க்க எழுச்சியுடன் நாடகமும் எழுச்சி பெற்று வளர்ந்தது. அத்தோடு படித்த மத்தியதர வர்க்கத்தின் அங்கீகாரம் பெற்ற ஓர் கலை வகைமையாகவும் இது மாறத் தொடங்கியது. நாடக வரலாறு இந்த மேற்கிளம்புகையின் சுழற்சி நிலைப்பட்ட ஒன்றாக மாறியது.

இதனால் பேராதனை, கொழும்பு, வித்தியாலங்கார, கட்டுபெத்த போன்ற வளாகங்களில் மேடையேற்றப்பட்ட நாடகங்களை முன்னிலைப் படுத்தி வரும் கண்ணோட்டம் படிப்படியாக கருத்தியலாக கருத்தாடலாக மேற்கிளம்பின.

1976-77ல் இலங்கை கொழும்பு பல்கலைக்கழக வளாகம் நடாத்திய நாடக அரங்கியலுக்கான பட்டமேனிலை ஆசிரியர் தகைமைப் பயிற்சி மூலம் வெளிப்பட்டோர் பின்னர் நாடகவியலின் முதன்மையானவராகக் கருதப்படும் மையப் படுத்தப்படும் போக்கு இன்னும் அழுத்தம் பெறத் தொடங்கியது.

1978-79ல் யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்டு ''நாடக அரங்கக் கல்லூரி'', ''அவைக் காற்றுக் கழகம்'' போன்றவற்றின் செயற்பாடுகளை மாத்திரம் கொண்டு நோக்கும் போக்கும் படிப்படியாக தொழிற்பட ஆரம்பித்தது.

1979ல் நாடகமும் அரங்கியலும் (க.பொ.த. உ/த) வகுப்புக்கு பாடமாதல். யாழ். பல்கலைக்கழகத்தில் நாடகமும் அரங்கியலும் பட்டப் படிப்புத் துறையாதல். இதனால் நாடகம் கற்கைநெறி சார்ந்த ஓர் அறிவுத்துறையாகவும் கற்றறிந்த மட்டத்திற்குரியதாகவும் மாற்றப்படத் தொடங்கியது. அவ்வாறு கருதப்படக் கூடியதாகவும் இது மாற்றப்பட்டது.

இது பின்னர் யாழ்ப்பாண பிரதேசத்தின் உயர் கற்கைப் புலத்தின் அணிசார் நிலைநின்றதாக மட்டும் குறுகி அவர்களது வரலாறே முழு நாடக வரலாறாக எடுத்தியம்பும் போக்கு படிப்படியாக கருத்தாடலாக வளர்த்தெடுக்கப்பட்டு புனைவாக்கப்பட்டது.

இக்காலத்தில் தமிழர்களின் அரசியல் போராட்டமும் முனைப்புப் பெற்றிருந்தது. தமிழ்த் தேசியப் போராட்டம், யாழ் மைய நிலைப்படுத்தப்பட்ட போராட்டமாகவும் இறுகிக் குறுகி இருந்தது. யாழ்ப்பாணத்திலேயே போராட்டமும் மையம் கொள்ளப்பட்டிருந்தது. இக்காலங்களில் யாழ்ப்பாண பல்கலைக்கழகம் சார்ந்தோர் சில நாடக அளிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர்.

இதுவரை நாடக வரலாறு பார்க்கப்பட்ட முறைமையும் எழுதப்பட்ட முறைமையும் இந்த உயர் கற்கைப் புலம் சார்ந்தோர் நிலை நின்று மட்டுமே சாத்தியமாக்கப்பட்டது. அதாவது நாடகத்தைப் பயிலும் மாணவர்கள், விரிவுரையாளர்கள், பேராசிரியர்கள் எனும் வட்டத்தைச் சுற்றியே நாடக அளிக்கைகள் பார்க்கப்பட்டன. பேராதனையில் தொடங்கி கொழும்புக்கு வந்து, பின்னர் யாழ்ப்பாணம் சென்று, இன்று கிழக்கில் மையம் கொள்ளப்பட்டிருப்பதாக ஒரு எளிய வாய்ப்பாட்டு ரீதியில் நாடக வரலாறு இன்று பார்க்கப்படுகின்றன.

இங்கே அனைத்துச் சமூக மட்டத்தில் நிகழ்த்தப்படும் நாடகங்கள் யாவும் ஒரு பொருட்டாகக் கூட இவர்களால் கருதாமல் தம்மைப்பற்றிய தம் அணிசார்ந்த வரலாறுகளை மாத்திரம் கொண்டே முழு ஈழத்துத் தமிழ் நாடக வரலாறு எனும் புனைவு கட்டமைக்கப் படுகின்றன. இதுவரைக்கும் எழுதப்பட்டுள்ள கட்டுரைகள் வரலாறுகள் யாவும் இதற்கு ஆதாரங்களாக அமையும்.

இது கூட முழுமையானதல்ல. யாழ்ப்பாண பிரதேசத்தின் அனைத்து நாடக அரங்குகளையும் இவர்கள் எடுத்துப் பேசுவதில்லை. அங்கேயும் கூட பல்கலைக்கழகம் சார்ந்தோர் நிலைநின்ற அளிக்கைகளை மாத்திரமே யாழ்ப்பாண அரங்க அளிக்கைகளாகப் பேசுகின்றனர். யாழ்ப்பாண கிராமங்களில் உள்ள ஒவ்வொரு சனசமூக நிலையங்களிலும், கலா மன்றங்களிலும் நிகழ்த்தப்பட்ட நாடகங்கள் அதிகம். இவை பற்றி எல்லாம் அறிந்து கொள்வதில் எதுவித சிரத்தையும் எடுப்பதில்லை. ஏனையவர்களின் நாடக அளிக்கைகளை தீட்டாகவே கருதுகின்றனர். அத்தகைய மனப்பான்மையிலேயே செயற்படுகின்றனர்.

தமது மட்டங்களில் கூட பல்வேறு குழுநிலைப் பனிப்போர்கள். ஒரு சாரார் அளிக்கை செய்யும் நாடகங்களை மறு சாரார் பார்ப்பதில்லை. இது இவர்களுக்கிடையில் ஓர் பண்பாடாகவே கோலோச்சுகின்றன. அப்படியானால் சாதாரண மக்கள் மத்தியில் இருந்து அளிக்கை செய்யும் நாடகங்களை இவர்கள் பார்ப்பார்கள் என்று நாம் எதிர்பார்க்கவும் முடியாது தான்.

அறிவு, கற்றல் ஆகியவற்றை ஆசிரியன் வரையறுக்கின்றான். யாரொருவன் சூழலை வரையறுக்கிறானோ அவனே சூழலை கட்டுப்படுத்துகிறான். சூழலின் மீது அதிகாரம் செலுத்துகிறான். ஈழத்துத் தமிழ் நாடக அரங்கியல் துறையிலும் இது தான் நடைபெறுகிறது.

இன்று உயர்கல்வி நிறுவனம் சமூகத் தொழிற்பாட்டில் பிரதான இடத்தை வகிக்கின்ற காரணத்தினால் அதிகாரம் அங்கே மையப்படுத்தப்பட்டு கல்வித் தொழிற்பாட்டு அறிவுத்துறையில் தமது திறன்கள் மூலம் மேலாட்சி செலுத்த முற்படுகின்றனர். தாமே தீர்மானிக்கும் அதிகாரத்தை கையிலெடுத்து மக்கள் மீது பிரயோகிக்கும் நிலைமையினால் ஏனையவை அதிகாரத்திற்கு (அறிவு) கட்டுப்படுத்தப் படுகின்றன. அறிவு/திறன்களில் உள்ள அசமத்துவம் ஏற்றத் தாழ்வுகளை உருவாக்கி சுரண்டல் நிலவவும் வழிவகுத்து விடுகிறது. இதனால் அறிவு/ திறன்கள் உள்ளோர் உடைமைவாதிகள் போல் நடந்து கொள்கின்றனர். நிறுவன அதிகார நிலையினரின் அங்கீகாரம் பெற்ற நாடகங்கள், நாடக அளிக்கையாளர்கள் பெயர்கள் மட்டுமே வரலாற்றில் எழுதப்படும், பேசப்படும். அத்தகையதொரு சூழலைத் தான் இன்று இவர்கள் உருவாக்கி விடுகின்றனர். இவர்களால் எழுதப்படும் வரலாற்றில் குறித்த பெயர்கள் மட்டுமே பட்டியலில் இடம்பெறும். இந்த நபர்களுக்கு மட்டுமே அங்கீகாரங்களும் புனிதங்களும் ஆசீர்வாதங்களும் கிடைக்கப் பெறும்.

நாடகம் என்பது ஓர் நிகழ்கலை வடிவம். இன்று இது மறக்கப்பட்டு நாடகம் பற்றிப்படித்தல், கட்டுரை எழுதுதல், கருத்தரங்கு நடத்துதல், கருத்தரங்கில் பங்குபற்றுதல் போன்றவையே நாடகவியலாளர்களுக்குரிய சிறப்படையாளங்கள் என்னுமளவிற்கு இன்று நிலைமைகள் வளர்ந்துள்ளன.

பொதுவில் சாதாரண மக்கள் மத்தியில் இருந்த சனநாயகத் தன்மை வாய்ந்த ஓர் கலை வகைமை கற்றோர் மட்டத்திற்குரிய வகைமையாக மாற்றப்பட்டு அதிகார மையப்படுத்தப்பட்டு மேனிலையாக்கப்படுகின்றன. இந்த முறைமைக்கு எதிராக நாம் குரல் கொடுக்க வேண்டியுள்ளது.

நாடகம் நிகழ்கலை வகைமையைச் சார்ந்தது. நாம் இதனை மறந்து மொழி - எழுத்து வழிப்பட்ட இலக்கியமாக, பிரதியாக மட்டும் பார்த்து விமரிசனம் செய்வதும் வரலாறாக எழுதப் படுவதும் கூட இங்கு ஓர் பிரச்சினைக் குரியதாகவே பார்க்க வேண்டும். வரலாறு என்று பார்க்கும் போது இதனை நாம் கருத்திற்கொண்டு நிவர்த்திக்கும் புதிய பார்வைகளை அடைய வேண்டும். அதுதான் நமக்குள்ள புலமைச் சவால்.

ஈழத்துத் தமிழ் நாடக வரலாறு இதுவரை எழுதப்பட்டுள்ள யாழ்ப்பாண மையப்படுத்தப்பட்டுள்ள வரலாற்றை, கட்டமைத்த வரலாற்றை கேள்விக்கு உள்ளாக்குவோம். கல்வி நிறுவன அதிகார மையங்களிலிருந்து கவனிப்புப் பெறாத ஓரங்கட்டப்படும் ஒடுக்கப்படும் சார்பினர் நிலைநின்று வரலாற்றை நோக்குவோம். சாதாரண விளிம்புநிலை மக்கள் நோக்கு நிலையில் வரலாறு பார்க்கப்பட்டு எழுதப்பட வேண்டும்.

ஈழத்துத் தமிழ்ச் சமூகங்களிடையே உள்ள சமவீனங்களை கருத்திற்கெடுத்து, கலை வளர்ச்சியிலும் அச்சமவீனங்கள் உள்ளதை இனங்கண்டு அனைத்தையும் உட்கொண்ட வரலாறாக நோக்கப்பட வேண்டும். ஈழத்துத் தமிழரிடையே பல்வேறு நாடக வகைமைகள் அரங்க வகைமைகள் இருக்கும் என்பதனை அங்கீகரித்துக் கொண்டு நாம் பல்வகைமைத் தன்மையுடன் கூடிய நாடக வரலாறுகளாக எழுதப்பட வேண்டும்.

நாம் இதுவரை எழுதப்பட்டுள்ள வரலாறுகளை ஒடுக்கப்பட்டோர் விளிம்புநிலை நோக்கில் கட்டவிழ்ந்து அதற்குள் பொதிந்துள்ள பிரதேச, மத, சாதிய, ஆண் ஆதிக்கக் குரல்களையும், மேலாட்சி செலுத்தும் பல்வேறு பிற்போக்கு ஆதிக்கக் குரல்களையும் வெளிப்படுத்த வேண்டும். அறிவு அதிகார மேலாட்சிப் போக்கிலிருந்தும் விடுவித்து விளிம்பு நிலை மக்கள் நோக்கிலான வரலாறுகளாக் எழுதப்பட வேண்டும்.


இன்று அனைத்துத் துறைகளையும் மறுபரிசீலனைக்கும் மறுவாசிப்புக்கும் உள்ளாக்கும் கட்டத்தில் உள்ளோம். நாடக அரங்கியல் துறையும் இந் நோக்கில் மறுவாசிப்புக்கு உள்ளாக்கப்பட வேண்டும். மாற்று வரலாறுகள் எழுதப்பட வேண்டும்.

**ஆணிமுத்தர்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# நம்பிக்கை தரக்கூடிய தலைமுறைகள் மலையகத்தில் இல்லையா ?

ஜெ.சற்குருநாதன்

கடந்த சரிநிகரில் ''சிறுகதைகளும் கதைஞரின் அரசியலும்'' என்ற கட்டுரை வெளிவந்தது. இக்கட்டுரையை நட்சத்திரன் செவ்விந்தியன் எழுதினாரோ, அல்லது ரஞ்சகுமார் எழுதினாரோ என்பது புரியாமல் இருந்தது. இது கட்டுரையாளரின் பிழையெனக். கொள்ள முடியாது. பத்திரிகை வடிவமைப்பாளரின் கவனக் குறைவு என சமாதானம் கொள்ளலாம். எது எப்படியிருப்பினும் கட்டுரையாளரின் கருத்துத் தளமே பிரதானமானது. அது தொடர்பான சில குறிப்புக்களைக் கூறிக் கொள்வது பயனுள்ளதாக அமையும்.

மலையகச் சிறுகதை எழுத்தாளர்களின் தொகுப்புப் பற்றிய சிறு விமர்சனக் குறிப்பில் சிறுகதைகளை விட சிறுகதையாளர்களின் அரசியல் பின் புலத்தை கட்டுரையாளர் தொட்டுக் காட்டிச் சென்றிருக்கின்றார். தவிரவும் கோ. நடேசய்யரிலிருந்து இன்றைய மலையக சிறுகதை எழுத்தாளர்களை கேள்விக்குட்படுத்தியுள்ளார்.

மலையகச் சிறுகதை எழுத்தாளர்கள் பெரும்பாலும் மலையக மண் வாசனை சமூக, பொருளாதார, அரசியல் தளத்தை அடிப்படையாகக் கொண்டு எழுதி வந்துள்ளனர், வருகின்றனர். மலையகத்தைப் பிறப்பிடமாகக் கொள்ளாத பிற எழுத்தாளர்களும், மலையகச் சிறுகதைகளின் வளர்ச்சிக்கும், வளத்திற்கும் காத்திரமான பங்கினை ஆற்றியுள்ளனர். இங்கு கட்டுரையாளர் மலையக சிறுகதைத் தொகுப்பில் உருவகத்தினை விட உள்ளடக்கத்திற்கே அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டதாக அதிருப்தி தெரிவித்துள்ளார்.

உருவம், உள்ளடக்கம் நிறைந்த அருமையான சிறுகதைகள் மலையகத்தில் நிறையவே காணப்படுகின்றன. விளங்காத ஒன்றிற்காக சிறுகதைகளில் உருவம் பற்றிய முயற்சியானது கட்டுரையாளரை பொறுத்தவரை சரியாக இருக்கலாம். மக்களை சென்றடையும் கலை, இலக்கியங்கள் மக்கள் சார்ந்த உருவமும், உள்ளடக்கமும் பெறப்படவேண்டும். அப்போதுதான் அது வெற்றியடைய முடியும். பாரதி எந்த ஒரு இறுக்கமான வடிவத்தையும் கையாளவில்லை. ஆனால், அதற்காக உருவத்தை விட்டுவிடவில்லை. மரபு இலக்கிய வடிவங்களை, புதிய மரபுகளை இணைத்துக்கொண்டு மக்கள் சார்ந்த இலக்கியத்தினை படைத்தது தான் அவனது ஆழ்ந்த சமூக நோக்கு, விசாலமான கண்ணோட்டம் சிறந்த இலக்கியங்களை உருவாக்க துணை நின்றது. கட்டுரையாளர் தான் எழுதிய சிறுகதைகளை வைத்துக்கொண்டு மலய்யக சிறுகதைகளைப் பார்ப்பதும் அபத்தமே. இதுவரை மலையக சிறுகதைகள் ஈழத்து சிறுகதை வளர்ச்சிக்கு வளமான பங்களிப்பை வழங்கி வந்துள்ளன. உருவமா? உள்ளடக்கமா? என்ற சர்ச்சை மலையகத்தில் குறிப்பிடத்தக்க அளவு இடம்பெறவில்லை என்பதும் கவனத்திற்கு உரியது. இலங்கையின் வடக்கு - கிழக்கு மக்களுக்கு உள்ள விசேட பிரச்சினைகள் போல மலையக ம்க்களுக்கும் பிரச்சினைகள் உண்டு. அப்பிரச்சினைகளை இலக்கியங்களும் தாங்கி வருவது தவிர்க்க முடியாதது தானே. எனவே உருவமா? உள்ளடக்கமா என்ற சர்ச்சையானது ஒரு மக்கள் கூட்டத்தின் மனித நேய விழுமிய பண்புகளுடன் தொடர்புடையதாக இருக்க வேண்டுமே ஒழிய, சமூகத்தில் இருந்து ஒதுங்கி வாழ்ந்து கொண்டு தனிநபர் கண்ணோட்டத்தில் அமைவது எந்த வகையில் சரியென்பது புரியவில்லை.

அடுத்ததாக மலையக சிறுகதையாளர்களின் அரசியல் இயங்கு தளத்தை நோக்குகின்ற பொழுது சிலர் பிற்போக்கு சக்திகளுக்கு துணை போனவர்கள் தான் என்பது மறுப்பதற்கில்லை. ஆனால், நேர்மையாக இயங்குவதாக சொல்லப்படுகின்ற கலை, இலக்கிய அமையங்கள் இவர்களை அனுசரிக்க, அடையாளப்படுத்த, அங்கீகரிக்க தயங்கியது ஏன் என்ற சிந்தனையை எழுப்ப வேண்டியதும் அவசியமானதே. அத்துடன் இலக்கிய சிந்தனையுடன் பொதுவான சிந்தனைகளுக்கு வழி சமைக்கும் சக்திகள் எந்தளவுக்கு செயற்பட்டன என்பதையும் கவனத்திற்கொள்ள வேண்டும். பிற்போக்கு சக்திகளுக்கும் அதிகார வர்க்கத்தினருக்கும் துணை போன இலக்கியவாதிகளை தடுப்பதற்கு ஏற்படுத்தப்பட்ட முயற்சிகள் என்ன? தவிரவும், பிற்போக்கு அதிகார தலைமைக்குள் தனது சுய அடையாளத்தை இழந்தவர்களின் வர்க்க நிலைப்பாடு எத்தகையது. இவர்கள் தன் வர்க்கத்திற்கு சமூக பொருளாதார அரசியல் நோக்கு என்ன? மலையக சிறுகதை எழுத்தாளர்கள் எத்தகைய சூழ்நிலையில் பிற்போக்கு தலைமைக்குச் சார்பாகச் சென்றனர்? போன்ற விடயங்களை வைத்துக் கொண்டு கட்டுரையாளர் விளக்கியிருந்தால் சிறப்பாக இருந்திருக்கும். என்ன செய்ய கட்டுரையாளர் வகுத்துக்கொண்ட பார்வை அத்தகையது.

இன்னும் ஒன்றைக் கட்டுரையாளர் கண்டுபிடித்திருப்பது வேடிக்கையானது. மலையகத்தில் நம்பிக்கை தரக்கூடிய ஒரே ஒரு இளையதலைமுறை ஜோதிக்குமாரும் அவரைச் சார்ந்துள்ள நந்தலாலா கலை இலக்கிய வட்டமும் தான் சி.வி. வேலுப்பிள்ளை மரபினை தொடர்கின்றன என்பதை முத்தாய்ப்பு வைக்கின்றார்.

சி.வி.யின் மரபு என்று கூறுகின்ற கட்டுரையாளர் சி.வி.யின் மரபு என்ன என்பதை விளக்கியிருக்க வேண்டும். சி.வி. மலையகத்தில் வாழ்ந்த ஒரு கவிஞர், நாவலாசிரியர், நாட்டார் பாடல்களின் தொகுப்பாளர், தொழிற்சங்கவாதி, முற்போக்கு கருத்துக்களைக் கொண்டவர் என்ற விடயம் அறிந்ததே. அவர் வர்க்க குணாம்சத்தினை அறிந்தவர்கள் அவ்ரது இலக்கிய நோக்கின் பலவீனத்தையும் நோக்கியிருப்பர். 1956களில் முற்போக்கு எழுத்தாளர் சங்க உறுப்பினராகவும், மலையகம் சார்ந்த வகையில் பிரதிநிதித்துவப் படுத்தினார். ஆனால், முற்போக்கு எழுத்துக்களை மலையகத்தில் வளர்ப்பதற்கு எத்தகைய முயற்சிகளை எடுத்தார். அல்லது முற்போக்கு பாரம்பரியத்தை அடுத்த தலைமுறைக்கு வளர்த்தெடுப்பதற்கு எவ்வாறு முயன்றார் என்பதும் கேள்விக்குறியே.

வர்க்கம் சார்ந்த அரசியல் என்ற தொழிற்சங்கவாதியாகத் திகழ்ந்த அவர் மலையகத் தொழிலாளர்களின் அரசியல் போராட்ட வரலாற்றுப் பாத்திரத்தில் எத்தகைய நடைமுறை தியாக எத்தகைய பணிகள் ஆற்றினார் என்பதும் நோக்கப்பட வேண்டியதே. குறிப்பிட்ட காலத்தில் சி.வியின் இலக்கிய அரசியல் பாத்திரம் நம்பிக்கைக் குரியதாக இருந்தது. உண்மைதான். அந்நம்பிக்கை பாத்திரத்தின் வெளிப்பாடு எதிர்கால மலையக மக்களின் நம்பிக்கைக்கு எத்தகைய பாத்திரத்தை அளிக்கப்போகின்றது என்பதையும் கருத்திற்கொள்ள வேண்டும். அவரது இலக்கிய கருத்தியல் தளத்திலும் சரி, அரசியல் தளத்திலும் சரி, சமூக விஞ்ஞான கண்ணோட்டமானது பின்நோக்கியே காணப்படுகின்றது. ஆனால், சி.வி.யின் பன்முக இலக்கிய ஆளுமை மலையக வரலாற்றுப் பாத்திரத்தில் முக்கிய இடத்தைப் பிடித்துள்ளது என்பதும் அனைவரும் ஏற்றுக் கொள்ளக் கூடியதே.

எனவே சி.வி.யின் மரபு சி.வி.யின் இலக்கிய அரசியல் வர்க்க நோக்கத்தினை கருத்திற் கொள்ளாது அவரது மரபினைத் தொடர்ந்து கொண்டிருக்கின்றதாக சொல்லப்படும் நந்தலாலா இலக்கிய வட்டத்தையும் குறிப்பிடுவது எந்தளவிற்கு சரி என்பதும் விளங்கவில்லை. அத்துடன் இவர் கூறுகின்ற நந்தலாலா இலக்கிய வட்டத்தினர் தம்மை இடதுசாரியாக வகுத்துக் கொண்டவர்கள் தங்களது படைப்புக்களை ஏன் சொந்தப் பெயரில் எழுதுவதில்லை. சில இடங்களில் தமது தேவைக்காக தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காக புனைபெயர் தேவை தான். ஆனால் மலையக மக்களிடமிருந்து தம்மை மறைத்து படைப்பாக்க முயற்சியிலீடுபடுவது எந்த வகையில் நம்பிக்கை தரக்கூடியது என்பது புரியவில்லை.

நந்தலாலா இலக்கிய வட்டத்தினர் செய்கின்ற முற்போக்கு இலக்கியச் செயற்பாடுகள் நம்பிக்கைக்குரியவை. வரவேற்கப்படுபவை. ஆனால் நந்தலாலா இலக்கிய வட்டம் மாத்திரமே நம்பிக்கைத் தரக்கூடிய சக்தியென அடையாளப்படுத்த முடியாது. நான்கு அல்லது ஐந்து நபர்களை உள்ளடக்கிய கலை இலக்கிய அமையங்கள் போக சில அமைப்புகள் மலையகத்தில் சிறப்பாகவே இயங்கி வருகின்றன.

மலையகத்தின் தேசிய இலக்கிய செல்நெறியினை அங்கீகரித்து அதனை கருத்தியல் ரீதியாகவும் சரி நடைமுறைரீதியாகவும் சரி, காத்திரமான பணிகளை ஆற்றிவரும் தேசிய கலை, இலக்கியப் பேரவையின் செயற்பாடுகள் கட்டுரையாளரின் கண்களை ஏன் மறைத்தது என்பது புரியவிலலை. பேராசிரியர் கைலாசபதியின் ஆலோசனையின் பெயரில் தொடங்கப்பட்ட இவ்வமைப்பு இலங்கை முழுவதும் முற்போக்கு சார்ந்த கலை இலக்கிய பணிகளை இன்றுவரை நடத்தி வருகின்றது. தேசிய கலை இலக்கியப்பேரவையின் உத்தியோகபூர்வமான சஞ்சிகையான தாயகம் இன்று வரை வெளிவந்து கொண்டிருக்கின்றது.

தேசிய கலை இலக்கியப் பேரவை மலையகத்தில் சி.வி. வேலுப்பிள்ளை பற்றிய மகாநாடு ஒன்றினை நடத்தியதாகத் தெரிகின்றது. பேரவை மலையகம் தொடர்பாக பல நூல்களை வெளியிட்டுள்ளது. கவிதைகளைப் பதிவு செய்து பதிவு நாடாக்களை வெளிக்கொண்டு வந்துள்ளது. பல மேடை நாடகங்களை மேடையேற்றியுள்ளது. இன்று ம்லையகத்தில் ஒவ்வொரு தோட்டத்திலும் சென்று பட்டி மன்றங்களை நடத்தி வருகின்றது. சி.வியின் பாடல்களை ஒவ்வொரு பட்டிமன்றங்களிலும் பாடி வருகின்றனர். (கட்டுரையாளர் ஹட்டன் பகுதியில் வந்து ஒரு முறை பட்டிமன்றத்தினைப் பார்க்கவும்) இலங்கை முழுவதிலும் சரி, மலையகத்திலும் சரி, அதிகார வர்க்கத்தினர்க்கும் பிற்போக்கு சக்திகளுக்கும் துணை போகாத இவ்வமைப்பினைப் பற்றிக் கட்டுரையாளர் கவனத்திற் கொள்ளாதது வருந்தத்தக்கது.

கண்ணிருந்தும் குருடர்ாய், காதிருந்தும் செவிடராய் போகின்ற நிலைக்கு தள்ளப்பட்டு விடக் கூடாது என்பதே இன்றுள்ள யதார்த்த நிலைமைகள் உணர்த்துகின்றன. தனி நபர் வழிபாட்டுடன், அதனை சார்ந்த அமைப்புக்களையும் அடையாளப்படுத்த முனையும் போது அவ்வமைப்பின் சாதக, பாதக தன்மையையும் அறிந்திருக்க வேண்டும். இலக்கியத்தினை மட்டும் தொழிலாகக் கொண்டு அவ்விலக்கியத்தில் இடதுசாரிப் பார்வையை கொண்டிருப்பவர்களை எவ்வாறு அணுகுவது என்பதும் கவனத்திற் கொள்ளப்பட வேண்டும். மத்தியதர வர்க்க புத்திஜீவிகளை வைத்துக் கொண்டு ஆற்றப்படுகின்ற இலக்கிய முயற்சிகள் எவ்வாறு சென்று கொண்டிருக்கின்றன என்பதைப் பற்றி சொல்ல நிறைய ஆதாரங்கள் உள்ளன. மக்கள் சார்ந்த இடதுசாரி அரசியல் என்பது மக்கள் தளத்திலிருந்து; அவர்களின் பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து அவர்களை சிந்திக்க வைப்பதன் ஊடாக ஒரு சமூக மாற்றத்தினை கொண்டதாக அமைந்திருக்கும். இந்த வகையிலும் கட்டுரையாசிரியர் நோக்கியிருக்க வேண்டும்.

தேசிய கலை இலக்கியப் பேரவை மட்டும் இடதுசாரி தொடர்பான கருத்துக்களை முன்னெடுக்கின்றது என்பதையும் கூற முடியாது. அதனையும் விமர்சனத்திற்குட்படுத்த வேண்டும். தனிப்பட்ட அமைப்பு மாத்திரம் ஒரு சமூக மாற்றத்திற்கான இலக்கியங்களை படைத்துவிட முடியாது. முற்போக்கு இலக்கியங்களைப் படைப்புகளாகக் கொண்டு இயங்கும் பல அமைப்புக்கள் தங்கள் கருத்துக்களை வலியுறுத்துகின்ற அதே வேளை பொது வேலைத்திட்டத்தின் கீழ் ஐக்கியப்பட்டு செயற்படுகின்ற மனப்பான்மையை உருவாக்கிக் கொள்வது காத்திரமாக அமையக் கூடும். மலையக மக்கள் வர்க்க ரீதியாக ஒன்றிணைந்து அவர்களின் பிரச்சினைக்குத் தீர்வுகளை அரசியல் ரீதியாக அணுக வேண்டும். அதற்கு முற்போக்கு இலக்கிய அமைப்புக்கள் உதவ வேண்டும். அது நந்தலாலா இலக்கிய வட்டத்திற்கும், தேசிய கலை இலக்கியப் பேரவைக்கும் ஏனைய முற்போக்கு அமைப்புகளுக்கும் பொருந்தும் என்பதை மட்டும் இப்போதைக்கு கூறி கருத்தாடலுக்கு வழிவிட்டு இக் கட்டுரையை முடிக்கலாம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# வரவு




'பெண்'
(தொகுதி 2- இல:2,3)
வெளியீடு:
சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்,
27 A, லேடி மனிங் டிரைவ்,
மட்டக்களப்பு.
விலை: ரூபா 30/=

சுமார் 3மாத இடைவெளிக்குப் பின் பெண் இதழ்கள் (தொகுதி2ன் 2ம், 3ம் இதழ்கள்) வெளிவந்துள்ளன. இவ்விரு இதழ்களும் ஓரளவு சிறப்பான விடங்யகளைத் தாங்கி வந்துள்ளன. குமுதினி சாமுவேலின் ஆக்கம், வ. கீதாவுடனான நேர்காணல், கமலாதாஸின் சிறுகதை, சிவரமணியின் கவிதை என்பன மூன்றாவது இதழிலும், பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி அவர்களின் 'தமிழ்ச் சூழலிற் பெண் விடுதலை', செ. யோகராசாவின் 'தமிழக - இலங்கைப்பெண் கவிஞர்கள் ஓர் ஒப்பு நோக்கு', சி. சந்திசேகரம் அவர்களின் 'பெண்களுக்கெதிரான வன்முறையின் தளமாகக் குடும்பம்' என்பன நான்காவது இதழிலும் இடம்பெற்றுள்ளன. அருந்ததியின் ஓவியம் இரண்டு அட்டைகளையும் மெருகூட்டுகின்றன

இவ்விரு இதழ்களும் வெவ்வேறு நபர்களை (சித்திரலேகா மௌனகுரு, நதிரா மரியசந்தானம்) தொகுப்பாசிரியைகளாக கொண்டு வெளிவந்துள்ளன. இவ்வாறான தொகுப்பின் மூலம் பல்வேறு பார்வைகளை உட்கொணர முடியுமாயிருந்தாலும், பெண்ணியம் பற்றிய அதிக பிரக்ஞையற்ற இலங்கை தமிழ்ச் சமூகத்துள் 'பெண்' என்ற ரீதியில் கருத்தியல் ரீதியாக இயங்க முடியாத நிலை ஏற்பட்டு விடலாம். தமிழ்ச்சூழலில் 'பெண் போன்ற பெண்கள் இதழ்களின் பணி வெறுமனே பெண்கள் பற்றியதும், பெண்களதும் படைப்புக்களை 'தொகுத்தல்' என்பதற்கு அப்பாற்பட்டதாகத்தான் எதிர்பார்க்கப்படுகிறது. பெண்களுக்கான வெளியீடுகள் அரிதாக இடம்பெறுகிற தற்போதைய நிலையில் ''பேச்சாகவும், தனிப்பட்ட தளத்திலும் இயங்கும் பெண்களின் மொழி பொதுத்தளத்திற்கு வர வேண்டும்'' என்ற குறிக்கோளுடன் நம்பிக்கை தரும் வகையில் வெளிவரும் 'பெண்' தன்னை பரந்த அளவில் இனங்காட்டுவதற்கு எந்தளவு முயன்றுள்ளாள்? அல்லது இதுவும் வழமைபோல் தெரிந்த வட்டாரங்களுள் மாத்திரம் சுருங்கிவிடப்போகிறதா? என்ற கேள்வியும் எழும்புகின்றன.

பொதுவாக எல்லா சஞ்சிகைகளும் எதிர்நோக்குகின்ற தரமான ஆக்கங்கலள பெறுவதின் சிரமங்களை 'பெண்ணும்' எதிர்கொள்கிறாள் தெரிகிறது. என்றாலும் 'சூரியா' ஆலோசனைக் குழு, அலுவலர் குழுவில் இருக்கிற அனேகர் தரமான படைப்பாளிகள், எழுத்தாளர்கள், சஞ்சிகையை இன்னும் தரப்படுத்த இவர்களே போதும்.

வ. கீதாவுடனான நேர்காணலில் கேட்கப்படுகின்ற கேள்வியொன்றை எம் இலங்கைச் சூலிலும் கேட்டு அதற்கு பதிலிறுப்பது போல் 'பெண்' உட்படவான பெண்ணியலாளர்கள் இயங்குவது இலங்கையில் பெண்ணியம் பற்றிய பிரக்ஞைபூர்வமான புதிய செல்நெறியை உருவாக்கும். கேள்வி இதுதான்:

''பெண்ணியம் சம்பந்தமான புதிய கோட்பாட்டுப் புரிதல்கள் அல்லது புதிய போக்குகள் தமிழகச் சூழலில் எந்தளவில் உள்ளன?

பெண் தடைகளை விட்டெறிந்து கிரமமாக வரவேண்டும்.

ரத்னா




திருப்பம்
The Future Foundation
215, F/2/6/ Park Road
colombo 05

பேராசிரியர் சோ. சந்திரசேகரம், வி.ரி.தமிழ்மாறன், எம்.ஏ. றஸ்வி ஆகியோரை ஆசிரியர் குழுவாகக் கொண்டு வெளிவரும் அரசியல், கலை, இலக்கிய, சமூக, மாத ஏட்டின் இரண்டாவது இதழ் வெளிவந்துள்ளது.

*அநேகா இளங்கோவன், ஸிராஜ் மஸ்ஹூர், சு. வில்வரத்தினம், கலாநிதி செல்வி திருச்சந்திரன், மதுரி மாறன், வி.ரி. தமிழ்மாறன், பேராசிரியர் சோ. சந்திரசேகரம், ஆ. சிவநேசச் செல்வன், மு.பொன்னம்பலம், சாந்தமணாள், கைதையூரான், த. துரைசிங்கம், அம்சா ஆனந்தன், அநேகன் சம்பந்தன், ஆகியோரின் கட்டுரைகளும், சுவாமி விவோகானந்தரின் சிந்தனைகளும், நேருக்கு நேர் பகுதியில் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப் பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின் நேர்காணலும் இடம் பெற்றுள்ளது.*

*- ராசாத்தி*




அம்மா
s.Manaoharan
(Esc. E13)
210, Ave. 8 Mai 1945
93150 Le Blanc Mesnil
France.

*அம்மா பிரான்ஸிலிருந்து வெளியாகும் சிறு கதைகளுக்கான சஞ்சிகை 'அம்மா' வின் ஐந்தாவது இதழ் வெளிவந்துள்ளது.*

*'நினைவோடு பிரமிள்' என்ற கட்டுரையில் பிரமிளுடனான தனது அநுபவங்களை நம்மோடு பகிர்ந்து கொள்கிறார் து. குலசிங்கம்.*


*'தலித் வாழ்க்கை Une vie paria - சமூக நேசப் பார்வை என்ற கட்டுரையில் பறையர் சமூகத்தில் ஒரு பிரிவைச் சேர்ந்த வீரம்மா தன் வாழ்க்கையில் நடந்ததைச் சொல்லக் கேட்டு திருமதி யோசியான் ரசின், திரு ஜேன்-லூயிக் ரசின் ஆகியோரால் பிரஞ்சு மொழியில் எழுதப்பட்ட நூலைப் பற்றி ச. சச்சிதானந்தம் எழுதியுள்ளார்.*

*யமுனா ராஜேந்திரனின் 'மூன்று குறுங்கட்டுரைக்ள்', 'ஆஸ்கர் வைல்ட் -கலைக்கு எதிரான கலைஞன்' என்ற கொத் ஜென்க்கின்ஸ் எழுதிய கட்டுரையின் மொழிபெயர்பு என இரு கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன.*

*சிறு கதைகள் என - ஷோபா சக்தியின் 'கடவுளும் காஞ்சனாவும்' (இலயிக்கத்தக்க மொழி நடையுடன் ஷோபா சக்தி கதையை நகர்த்திச் சென்றிருப்பினும், அவசரப்பட்டு கதையை முடித்து விட்டது போல் தோன்றுகிறது). ஸ்ரீதரின் 'இவர்களுக்கு இடைஞ்சலாயிருப்போர் கழுத்தில் யந்திரக்கற்களைக் கட்டிக் கடலில் வீசுங்கள்'(மாற்கு 6:18) என்ற கதை புதிய உத்தியைக் கையாண்டு எழுதப்பட்ட கதை. இன்னும், நா. கண்ணனின் 'நெஞ்சு நிறைய்', சேனனின் 'ONE SELF, இளைய அப்துல் லாவின் 'பிரசவமாய்', பாலேஸ் எழுதிய 'வசித்தல்' வி. கௌரிபாலன் எழுதி சரிநிகரில் வெளிவந்த - 'மூக்கணாங்கயிறும் கோணல் மொச்சைகளும்' என்ற கதை நன்றியுடன் மீள் பிரசுரமாகியுள்ளது. எனக்குப் பிடித்த கதை பகுதியில் பெருமாள் முருகனின் 'கொட்டு' சிறுகதை, இளவாலை விஜயேந்திரனின் தெரிவாக இடம் பெற்றுள்ளது.*

*பன்னிரண்டு பக்கங்களைப் பிடித்துள்ள உரைகல் பகுதி காத்திரமான கருத்தாடல்களுக்கு களமாக அமைந்துள்ளது.*

*- ராசாத்தி*




'அவள் தனிமரமல்ல'
நளாயினி சுப்பையா

இலக்கிய உலகிற்கு புதிய வரவு *நளாயினி சுப்பையா* வின் *'அவள் தனிமரமல்ல '* கதைத் தொகுதி.

கொண்ட தலைப்புகளுக் கேற்ப உள்ளார்ந்த அர்த்தப்பாடுகள் சில கதைகளில் சிதைக்கப் பட்டுள்ளன. சில கதைகள் மிகைப்படுத்தப்பட்டுள்ளன. எழுத வேண்டும் என்கிற உத்வேகம் நளாயினியை உந்தித் தள்ளியிருக்கிறது என்பது கதைகளின் அவசரப் பாங்கில் தெரிகிறது. அதனால் தானோ என்னவே சில நடைமுறைப் பாத்திரங்கள் செந்தமிழில் பேசுகின்றன.

மலையகத்தில் குடும்ப வாழ் வின் நிமித்தம், தொழில் நிமித்தம் வாழும் நளாயினி பாட்டாளி மக்களின் வாழ்க்கைளின் அவ லங்களைச் சொல்லவரும் போது ஒரு அக்கறையுணர்வு தென்படுகிறது.

*இளைய அப்துல்லாஹ்*

## அவர்களிடம் துவக்கு இருந்தது

வானம் அடியோடு மாறிற்று.
பிறழ்ந்த பருவங்கள் பற்றி என் சொல ?
சுட்டுச் சூரியன் தீய்த்தது போக மீதி
அறக்கொட்டி கண்டு சாய்ந்தது.
சாய்ந்ததில் தப்பியதை –
அறுவடையில் மழையடித்தது.
சூட்டுக் களவெட்டி கால் வைக்க ஒண்ணாது
களி புதைந்தது :
தென்னோலை வெட்டி இட்டுப் போரடித்தோம்.
தெருக்களில்
சாக்குப் படங்குகளில் ஈரநெல் ஆல்வாடப்
பரவிய நாற்றத்தை நாசி பழகியது.
போகங்கள் இப்படித்தான்
பொய்க்கத் துவங்கின.
பதறும் விலை போனது.

ஆனாலும்
அவர்கள் லோட்டுக்கு
மூடையிரண்டைப் பிடுங்கினர்.
மழையூறிய நெற்றாழ்கள் –
திரும்பவும் எங்கள் உதிரம் ஊறிக் காயாது
தப்பித்துக் கொண்டன.

அவர்கள் துவக்கு வைத்திருந்தனர்.

ஆளைக் கடத்திக் கப்பம் கோரினர்.
வாகனத்தைத் திருப்பித்தரக்
காசு கேட்டனர்.
கொடுத்து மீட்டோம் –

அவர்களிடம் துவக்கு இருந்தது.

இரவுகளை இருளில் மூழ்கடித்தனர்.
அந்திபட
அவர்களின் பேரில் நாங்கள் அச்சமுற்றோம்.
பெருநாட்கள் வெறிச்சோடின –
புத்தாடைகளை
பழைய புடைவை மணத்துடன்
பிறிது நாட்களில் பூண்டோம்.
தெருவில் இறங்கப் பயந்து –
கறிக்கும் உள் வழியால் போய் வந்தோம்,
சந்தையில் ஈயோட்டினோம்.

எங்களின் தலைமைகளின்
தவறுகளுக்கான வட்டியை
இப்படியும் நாங்கள் கட்ட நேர்ந்தது.

நினைத்ததை
நினைத்தவாறு
நினைத்த நேரம்
நிகழ்த்தக் கூடிய திறமைசாலிகள் அவர்கள்.
அவர்கள் துவக்கு வைத்திருந்தனர்.

விடுதலையின் பேரால் வேட்டை தொடர்ந்தது

அவர்களே –
தூரக் கிராமமென்றில் எங்களின்
முக்காட்டுப் பெண்களை
விசாரணைக்கென அழைத்துப் போய்
இரவில் ......
என்றெல்லாம்
காற்றில் அடிபடும் கதைகள் பற்றி
அதிகம் கேட்காதேயும்.

கடைசியில் :
தொப்பியணிந்து வந்து
தொழுத பாயில் வைத்துச்
சுட்டுப் போட்டனர்.
இரவுத் தொழுகையில்
பழைய வேட்டொலிகள் மசூதிச் சுவர்களில்
மோதி எதிரொலிக்கக் – கவனஞ்சிதறி
சூறாக்கள் இடையில் தப்பி தொழுகை பாழாகும்
பழக்கம்
இன்னமும் மாற முன்னம்
திரும்பவும் அவர்களின் கொடுந் தடங்களை
பள்ளியில் பதித்தனர்.
மசூதித் தளமெங்கும் நிணம் சிதறிற்று,
ஆறாய்க் குருதியை ஓட்டினர்.

அதுவும் விடுதலையின் பேரால்தான்.

எதிர்பார்த்த படியே
எங்கள் அச்சமெல்லாம்
கண்முன்னே அரங்கேறிற்று.

அவர்களிடம் துவக்கு இருந்தது.
அதுவே அவர்களாகவுமிருந்தனர்.


2.
இரவின் நடுச் சாமத்தில்
ஊரின் எல்லைகளில்
நண்பர்களும் நானுமாய்
காவலிருப்பதாய்க் கண்ட கனவெல்லாம்
இதற்காகத்தானா?

1998.05.15 இரவு 2.37 மணி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# தலித்திய சிந்தனை அவசியமானது!

தலித்தியக் குறிப்புகள் என்னுள் பல சிந்தனைகளை கிளறி விட்டுள்ளன. தமிழ்ச் சூழலில் காத்திரமான புரட்சிக்கான, சமூக மாற்றத்துக்கான எத்தனங்களில் ஈடுபட்டுள்ள எல்லோரும் மிக கரிசனையுடன் நோக்கவேண்டிய ஓர் அம்சமாக தலித்தியம் - அருந்ததியர் அரசியல் காணப்படுகின்றது. இன்னும் காத்திரமாக விஞ்ஞானபூர்வமான தர்க்கரீதியான ஆய்வுகளூடாக இப்பிரச்சினையை வெளிக் கொணர வேண்டும். உங்களை மிரட்டிய, விரட்டிய வைதீக மாக்ஸிஸ்டுகள் பற்றி நாம் ஏன் கவலைப்பட வேண்டும்? ஆனால் தலித்தியம், பெண்ணியம் என்பன கூட நவகாலனித்துவமயப்படுத்தலின் உலகளாவிய நிகழ்வுப்போக்கில் கருத்து ரீதியான ஆயுதமாக பயன்படுத்தப்பட்டு ஒட்டுமொத்தமாக சமூக மாற்றம் சிதைக்கப்படலாம் என்ற அச்சம் நியாயமானது. இது குறித்து விழிப்புடன் மேலும் காத்திரமான தேடல் அவசியம் என நினைக்கின்றேன்.

இந்தியவம்சாவளித் தமிழர் என்பதற்கு பதிலாக 'மலையகத் தமிழர்' என்ற பதத்தை பயன்படுத்துவீர்களாயின் இன்னும் அதிக அரசியல் முக்கியத்துவம் கிடைக்கும் என்பது எனது தாழ்வான கருத்து.

மலையகத்தில் அருந்ததியர் நகரசுத்தி தொழிலாளர் மட்டுமல்லாது 'லயன், சுத்திகரிப்போராகவும் இருக்கின்றனர். மேலும் அருந்ததியன் அல்லாத பொருளாதார விளிம்பு நில மக்கள் நிர்ப்பந்தம் காரணமாக சுத்திகரிப்பு தொழில் உட்பட பல அடிநிலை தொழில்களிலும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

'சோபா'வின் சோகத்தைவிட கொடுமையானது தங்களது வாழ்வியல் துயரம். அதனையொத்த வாழ்வியல் அனுபவம் என்பக்கும் உண்டு. சுத்திகரித்தல், மலசல கூடம் துப்புரவாக்கல், வீதிக்கு ஒட்டு போடல், பெண்களின் முடக்குத் துணி துவைத்தல் என்பனவற்றில் எனது அனுபவங்கள் கொடுமையானவை. பச்சை சௌசௌக்காயையும், பலாக்காயும் தின்று விட்டு கொலை நடுங்கும் பசியுடன் நாளொன்றுக்கு 30 கி.மீ. நடந்து உயர்தரம் கற்ற அனுபவம் மட்டுமல்ல, பல்கலைக் கழகத்தில் இருந்தபோது கூட ஒரு வேளை உணவுக்கு பட்ட கஷ்டங்கள், கையேந்தியவர்கள் என்பனவற்றை மீட்டிப் பார்க்கிறேன்.

இதன் மூலம் மிகவும் உணர்வுபூர்வமாக அருந்ததியர் பிரச்சினையைப் புரிந்து கொள்ள முடிகிறது. உணர்வோடு ஒன்றிப் போக முடிகிறது. நெஞ்சம் கணக்கிறது. மனிதனைப் பிறப்பினால் பேதப்படுத்தும் இக்கொடுமை மனித குலத்திற்கே அவமானகரமானது. ஆனால் எமது இனம் சாதியின் பெயரால் வாழ்ந்துவருகிறதே. சாதி திமிறின் கொடுமைகளை தகர்ப்பதற்கு அடையாளங்களை தற்கொலை செய்வது சரியான மார்க்கமாகாது.

மலையக மக்களில் 80%பேர் தலித்துக்கள், பாட்டாளிகள். அவர்களில், சரிபாதியினர் பெண்கள். ஆனால் மலையகத் தமிழரின் அரசியல் 10% மான மேல்சாதி ஆதிக்கவர்க்கத்தினரால் கொண்டு நடத்தப்படுகிறது. இவர்கள் தோட்டங்களில், சேரிகளில் அடிமைத் தொழில் மையங்களில் அடிமட்ட வாழ்க்கையை வாழ்வோரைக் கூட தம்மோடு சேர்த்துக் கொள்வதில்லை.

- ஆறு நாட்டு வேளாளர் சங்கம்.

- முக்குலத்தோர் சங்கம்.

- அம்பலகாரர் சங்கம்.

என்பனவெல்லாம் ஆதிக்க சாதிகளின் ஆதிக்கவர்க்கத்தின் அரசியல், பொருளாதார நலன்களுக்காக உருவாக்கப்பட்டவை. அரசியல் பின்னணி -பணபலம் - கல்வித்திறன் என்பனவற்றை ஒருங்கேபெற்றுக் கொண்டுள்ள இவர்கள் தம்மாலியன்ற அனைத்து முனைகளிலும் சமூகத்தைச் சுரண்டியும், ஒடுக்கியும் தம் அதிகாரத்தை நிலைநாட்டி வருகின்றனர். இதனை முன்னெடுப்போர் அரசியல் செல்வாக்கும் கொண்ட பணபலமிக்க முதலாளிகள், கல்விமான்கள், புத்திஜீவிகள் ஆகியோர்தான்.

இதற்குமாறாக கட்டப்பட்ட ''ஒடுக்கப்பட்டோர் சமுதாய -பேரவை'' குறுங்குழுவாதக் கண்ணோட்டங்களுடன் நிறைந்து போயுள்ளது. இதன் படிப்பினை யாதெனில், பார்வையின் பரப்புகள் விசாலமாக்கப்படாவிட்டால் சிந்தனையும், செயலும் குறுகிவிடும் என்பது தானே!

மலையகத்தில் கோவில்கள் இரண்டுபடுவதும், திருவிழாக்கள் இரண்டுபடுவதும், கவ்வாத்து மலையில் தேனீர் பானை இரண்டுபடுவதும், மீறல்களில் ஈடுபடுவோர் கோரமாக கொல்லப்படுவதுமான பல சம்பவங்கள் அன்றாட நிகழ்வுகளாக மாறியிருக்கின்றன. வாக்குரிமையின் மீள் வருகை, கல்வி அறிவு வளர்ச்சி என்பன புதிய பரிமாணங்களை இப்பிரச்சினையில் ஏற்படுத்தியுள்ளன. ஆனால் மலையகப் புரட்சிகர சக்திகள் எனப்படுவோர் இவற்றை மூட்டைக்கட்டி வைத்துவிடுவதை சுலபமான வேலையாகவே கருதிவருகின்றனர்.

இன்னும் காத்திரமான தளத்தில் தங்களது ஆய்வுகள் வளர்த்தெடுக்கப்படும் பட்சத்தில் அது ஒரு வரலாற்று முக்கியத்துவமிக்கதான - கோட்பாட்டு முக்கியத்துவமிக்கதான- அரசியல் முக்கியத்துவ முடையதான -அம்சமாக மாறுவதோடு.

-புரட்சிகர எழுச்சிக்கான ஒரு உண்மையான ஆயுதமாகவும் பயன்படக் கூடும்.

காத்திரமான பணிகளை முன்னெடுப்பீர்கள் என நம்புகின்றேன்.

***பிரான்சிஸ் ஐயாவு,***
பொகவந்தலாவ

# அம்பாறை – அன்னமலை அதிரடிப்படை அத்துமீறல்கள்!

சென்ற மாதம் அம்பாறை மாவட்டம், சம்மாந்துறைப் பற்றிலுள்ள சிறிய கிராமமாகிய அன்னமலையில் முகாமிட்டிருக்கும் விசேட அதிரடிப்படையினரால் மேற்கொள்ளப்பட்ட காட்டு மிராண்டித்தனமான சம்பவம் பற்றி இங்கு நான் எழுதுகிறேன்.

98.4.16 அன்று அதிகாலை ஐந்து மணியளவில் அன்னமலைக் கிராமம் விசேட அதிரடிப் படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு, புத்தாண்டை தமது குடும்பத்தினருடன கொண்டாடவென சென்றிருந்த (இவர்கள் அனைவரும் பல வருடங்களாக கொழும்பிலும், அதனையண்டிய பிரதேசங்களிலும் நகைத்தொழில் புரிபவர்கள்.) இளைஞர்கள் அனைவரையும் விசேட அதிரடிப்படையினர் தமது முகாமிற்கு கூட்டிச்சென்று அவர்களை கண்மூடித் தனமானமுறையில் விறகுக்கட்டைகளாலும், பொல்லுகளாலும் அடித்துச் சித்திரவதைபுரிந்துள்ளனர். இளைஞர்கள் அனைவரையும் வரிசையாக நிறுத்தி ஒவ்வொருவரையும் பல விசேட அதிரடிப்படையினர் அடித்துத்தாக்கியுள்ளனர். மற்றைய வரிசையில், வயது வந்த முதியோரை நிற்கவைத்து வயது வித்தியாசமின்றி தாக்கியுள்ளனர். இதற்கு இவர்களால் கூறப்பட்ட காரணம், விசேட அதிரடிப்படை முகாமில் இவர்கள் அனைவரும் கையொப்பம் இடவில்லை என்பதாகும். ஆனால் அடிதாக்குதலுக்குள்ளான பல இளைஞர்களும் முதியவர்களும் விசேட அதிரடிப்படை முகாமில் கையொப்பம் இட்டிருந்தனர். அன்னமலை விசேட அதிரடிப்படையினர் இவ்வூர்மக்களை மட்டுமல்லாது அயல்கிராம மக்களையும் அடிமைகள் போல் வாராவாரம் வேலை வாங்கி வதைக்கின்றனர்.

மேற்படி அடித்துத் தாக்கப்பட்டவர்கள் பலமணிநேரம் நடுவெயிலில் நிற்கவைக்கப்பட்டனர் பின் விசேட அதிரடிப்படை முகாமை துப்பரவு பண்ணும் வேலையுடன் மற்றும் பல்வேறுபட்ட வேலைகளைச் செய்ய வைக்கப்பட்டனர். அத்துடன், ஒவ்வொருவரிமும் தமது முகாமிற்கு தேவையான பொருட்களை வாங்கிக் கொண்டு தரும்படி கட்டளையிடப்பட்டு, பொருட்கள் கொடுக்கப்பட்ட பின்பே அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர். இத்தாக்குதலுக்கான காரணம் ஊர்மக்களுக்கும் ஏனையவர்களுக்கும் என்னவென்று புரியவில்லை. தமிழ் அரசியல்வாதிகளுக்கும், மனித உரிமை அமைப்புகளுக்கும் இவ்விடயம் இன்னுமா எட்டவில்லை. அல்லது இவ்வாறான அத்துமீறல்களை இவர்கள் அனுமதிக்கின்றார்கள் போலும்.

அன்னமலை விசேட அதிரடிப்படையினரின் அத்துமீறல்களை களைய சம்பந்தப்பட்டவர்கள் இனியாவது நடவடிக்கை எடுப்பார்களா?

***ஈழநாதன், கொழும்பு 15***

# பெண்கள்...

அல்லாது போனால் வடக்கின் மரபியல் கட்டுப்பாடு நிறைந்த வாழ்க்கை முறையானது எந்தவொரு இளம் பெண்ணுக்கும் இந்த வாய்ப்பை வழங்க மாட்டாது.

விடுதலைப்புலிப் பெண் போராளிகளின் கொள்கையைப் பற்றியும், இலட்சிய தற்கொடைப் பற்றியும் ஒருவர் கேள்விக் கேட்டால் அக கேள்விக்கு கீழ்வருவன விளக்கமாக அமையும்:

''தமது தாயக நிலத்தில் சிறீலங்கா இராணுவத்துக்கு எந்த இடமும் உரித்தாகாது என்று உறுதியாக நம்பும் தமிழ்கெரில்லாப் பெண் போராளிகள், படையினரோடு சண்டைப் பிடிப்பதற்கு தெளிவான திடகாத்திரமான உறுதி பூண்டிருக்கிறார்கள். தங்களுடைய தாய் நாட்டை விடுவிக்க எத்தனை வருடகாலம் சென்றாலும் இந்த அசைக்க முடியாத நம்பிக்கை மூலம் போராட்டத்தை கொண்டு நடாத்துவார்கள் என்பது உறுதி.

இந்த வைராக்கியப் பலமே இவர்களைப் போராடவும், தங்களது இராணுவ நடவடிக்கைகள் மூலம் கிடைத்த வெற்றிகளை அனுபவிக்கவும் வழிகோலுகின்றன. இந்த வைராக்கியமே தங்களது சகாக்கள் போர்க்களத்தில் வீரச்சாவைத் தழுவிக் கொள்ளும் போது அவர்களை உளவியல் ரீதியாக தளர்வுறாமல் செய்கிறது. இதே வைராக்கியம் தான் உன்னதத் தற்கொடைகளை செய்ய இவர்களைத் தயாராக்குகின்றது.'' (அடேல் ஆன், விடுதலைப் புலிகளின் பெண் போராளிகள் - 1993 - பக்கம் 01)

பெண்களுக்கு எதிரான வன்முறைகளுக்கு பாகுபாடுகாட்டாத அதிகாரியாக இருக்கும் ராதிகா குமாரசாமியிடம் இது பற்றிய கருத்துக்கள் பற்றிக் கேட்கப்பட்டபோது, பெண் போராளிகளின் கொள்கை பற்றிய தனது கருத்துக்களை எடுத்துக் கூறினார்.

''ஆயுதப் படைகளில் இருக்கும் பெண்களின் எண்ணப்போக்கு வெறுமனே சமூகம், இராணுவ மயமாகி வருவதையே காட்டுகிறது. அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளது என்பதனைக் காட்டும் பெரிய அறிகுறியாக இது எனக்குத் தெரியவில்லை. ஏனெனில், ஏற்கெனவே ஒழுங்கு விதிகளின்படி இயங்கும் ஒரு விடுதலை அமைப்பில் இவர்கள் இணைந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களாலேயே இவர்களுக்காகத் தீர்மானங்கள் எடுக்கப்படுகின்றன. எனவே இங்கு புதிதாக அதிகாரங்கள் வழங்கப்படுவதற்கு வாய்ப்புக்களில்லையே. வெறும் சுடுதல் மட்டும் என்றால் இது சரியாக இருக்கும். இந்த நிலைப்பாடு ஆராயப்பட வேண்டும்.

சமூகத்துக்கு இதனால் என்ன பலன் கிடைக்கும் என்பது பற்றி பெண்கள் யோசிக்க வேண்டும். பிளவுகள் தோன்றிய சிறீலங்காவின் நிலைமை பற்றி ஒருவரும் சிந்திப்பதாகத் தெரியவில்லை.

சுதந்திரமாகச் சிந்திக்கும் ஆற்றலுடைய மக்கள் சிறீலங்காவில் இச்சிறிய பெண்கள் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னேற்றப் பாய்ச்சலை அங்கீகரித்து, அதற்கு சார்பாக ஆதரவளித்தாலும் இதற்கப்பால், ஆயுதப் போராட்டத்தில் பெண்கள் பங்கு பற்றுவதன் விளைவு பற்றி ஒருவர் கட்டாயம் சிந்தித்தேயாக வேண்டும்.''

### *முன்னுரிமைகள்*

தேசிய விடுதலைப் போராட்ட காலங்களைத் தொடர்ந்து அவதானிக்கையில், பெண்களின் பங்களிப்பு விரிவடைந்து சென்றதையும், அவர்களின் பங்களிப்பு புதியதாக வரையறுக்கப்பட்டு வந்ததையும் தெளிவாகக் காணலாம்.

கேள்வி என்னவென்றால் ஒரு தேசியம் எழுப்பப்படும் போதும் அல்லது ஆட்சி முறை மாறும் போதும் இப்பங்களிப்பினை மீள வரையறை செய்வதும், பெண்மையை மீளவடிவமைப்பதும் எவ்வளவு தூரம் சமாதானம் தோன்றிய காலத்துக்கும் எடுத்துச் செல்லப்படும் என்பதாகும்.

போர்ச்சூழ்நிலையும் முரண்பாடுகளும், இயற்கை அழிவுகளும் பெண்களை அவர்களின் போராட்ட உணர்ச்சிகளையும், ஆழ்மன உந்துதல்களையும் முன்னணிக்கு கொண்டு செல்ல உதவுகின்றன. ஆனால் எங்களைப் போன்ற ஆசிய நாடுகளில் உள்ள ஒருவர் இதனையிட்டு மிகவும் ஆச்சரியப்படலாம். பெண் ஒருத்தி ஆயுதம் ஏந்தியதற்கு காரணம் ஒன்றில் நாட்டின் பாதுகாப்புக்காக இருக்கலாம். அல்லது விடுதலைப் புலிகளின் நியாயங்களின் எடுத்துக் காட்டுக்காக இருக்கலாம். இந்த செயன்முறை நடைபெற்று முடிந்ததன் பின் இவர்கள் உள்வீட்டு அலுவல்களில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டார்கள்.

இந்த உள்நாட்டு யுத்தத்தினால் சமூகம் தனது வளங்கள் அனைத்தையும் எதிரியோடு மேற்கொள்ளும் யுத்தத்திலேயே பயன்படுத்துகின்றது. அநேக மூன்றாம் மண்டல நாடுகளில் பெண்கள் ஆயுதப் போராட்டத்தில் பங்கேற்பது இதன் தேவையை எடுத்துக் காட்டுகின்றது. எவ்வாறாயினும் யுத்த நடவடிக்கைகளில் பெண்களையும் ஈடுபடுத்தும் நடவடிக்கையானது அவர்கள் பொது அரங்கில் முக்கிய கதாபாத்திரங்களாக மாறியிருப்பதையே காட்டுகின்றது. இங்கு கவனிக்கப்பட வேண்டியது என்னவெனில், சமூக வட்டத்தினுள் காணப்படும் இவர்களின் வெளித்தோற்றம், போர் முடிவடைந்த உடனும் மறைந்து போகுமா? அல்லது இந்த யுத்த காலத்தில் இவர்கள் பெற்ற பால் சமத்துவம் என்ற பலன் அமைதி ஏற்படப் போகும் காலத்துக்கும் நீடிக்குமா?

இந்தக் கடைசி வாக்கியம் சுருக்கமாக எல்லாவற்றையும் தெளிவாக்குகின்றது. தற்காலப் பெண் போராளிகளின் நிலைப்பாடு பற்றியும், விரைவில் வரும் என எதிர்பார்க்கும் போர் முடிவுற்ற சிறீலங்காவில், அவர்களின் நிலை என்ன என்பது பற்றியும் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

Registered as a newspaper in Sri Lanka.

# சரிநிகர்

இரு வாரங்களுக்கு ஒரு முறை

"'சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே"

-பாரதி

இல. 04, ஜயரத்ன வழி, திம்பிரிகஸ்யாய, கொழும்பு 05.

தொலைபேசி : 593615, 584380.
தொலை மடல் : 594229.

## ஆட்சேர்ப்பும் விளைவும்!

இராணுவத்திற்கு பதினையாயிரம் பேரைச் சேர்த்துக் கொள்ளும் திட்டத்தின் கீழ் ஆட்சேர்ப்பு நடவடிக்கையில் இறங்கியுள்ளது இலங்கை இராணுவம்.

"ஜயசிக்குறு" இராணுவ நடவடிக்கையின் போது பிடிக்கப்பட்ட பிரதேசங்களை தக்கவைத்தக்கொள்ளவும், புதிய பிரதேசங்களை தமது கட்டுப்பாட்டுக்குக் கீழ் கொண்டுவரவும் குறைந்தபட்சம் பதினையாயிரம் ப்யிற்சி பெற்ற இராணுவத்தினர் தேவை என்கிறது பாதுகாப்பு வட்டாரம். இராணுவத்திலிருந்து பதினையாயிரம் பேர் தப்பியோடியதன் காரணமாக ஏற்பட்ட ஆட்பற்றாக்குறையே இந்த ஆட்சேர்ப்புக்குக் காரணம் என்றும் கூறுகிறது அது.

ஓடிப் போனவர்கள் ஓடாமல் நின்றிருந்தால் வெற்றி பெற்றிருக்க முடியும் என்ற மறைமுக அர்த்தத்தைத் தரும் இந்த அறிவிப்புடன் பதினையாயிரம் பேரைச் சேர்ப்பதற்கான திட்டம் நடைமுறைக்குப் போனது. திரும்பத் திரும்ப மன்னிப்பு வழங்கி ஓடிப்போனவர்களை திருப்பி எடுக்கும் முயற்சியில் ஈடுபடல் நாடளாவிய ரீதியில் புதியவர்களைத் திரட்டுதல், பாடசாலைகளில் மாணவர்களை இராணுவத்தில் சேர்க்க முயற்சி செய்தல் என்ற மூன்று விதமான திட்டங்களை இராணுவம் அறிவித்தது.

அந்த அடிப்படையில், இப்போது கிராமங்கள் தோறும் சென்று இளைஞர்களைச் சேர்ப்பதற்கான முயற்சியில் இராணுவம் இறங்கியுள்ளது. இராணுவத்தின் இந்த நடவடிக்கை வெற்றிபெறுவதற்காக, புலிகளிடமிருந்து எமது தாய் நாட்டைப் பாதுகாப்போம் என்ற பிரச்சாரம் பரவலாக, தேசபக்தியை வளர்க்கும் நோக்குடன் செய்யப்பட்டு வருகிறது.

எமது தாய் நாடு என்பது, பிரச்சாரத்தினூடாக பெறும் நடைமுறை அர்த்தம் இது சிங்கள பௌத்தர்களுக்குமான தாய் நாடு என்ற விதத்திலேயே இப்பிரச்சாரம் நடக்கிறது. அரசாங்கத்தின் பிரச்சார உத்திகளையும், அது பிரச்சாரம் செய்யும் இடங்களையும், அது பிரச்சாரம் செய்யும் மொழிகளையும் பார்த்தால் இது தெளிவாகத் தெரியும்.

புலிகள் இன்று பலம் பெற்றிருக்கும் பிரதேசம் தமிழ் முஸ்லிம் மக்களுடையதும் அல்ல எம்முடையது மட்டுமே என்ற கருத்தை பலமாக இது சிங்கள மக்களிடையே எடுத்துச் செல்கிறது.

இது யுத்தத்தில் ஈடுபடும் இராணுவத்தினருக்கு தமது நாட்டை விடுவிக்கின்ற உணர்வை ஒரு வெறியாக ஊட்டிக் கொண்டிருக்கிறது.

நாட்டின் அரசியலில் ஏற்பட்டுள்ள கொந்தளிப்பு நிலைக்கு ஒரு சமாதானபூர்வமான தீர்வை முன்வைத்துள்ளதாகக் கூறும் அரசாங்கம் இத்தகைய ஒரு பிரச்சாரத்தில் ஈடுபடுவது, அது கூறும் சமாதானத்திற்கே நிரந்தர சவக்குழியைத் தோண்டுவதாக அமைந்துவிடப் போகிறது.

இது ஒரு முக்கியமான பிரச்சினை, இதற்கு ஒரு தீர்வு காண நாம் செயற்படுகிறோம் என்ற அரசியல் ரீதியான புரிதல் போய், யுத்தத்தில் நாம் வெற்றிபெற வேண்டும், அதற்காக இந்த நாட்டு அரசியலைத் தமக்கு வசதியான விதத்தில் பிரச்சாரம் செய்யலாம் என்ற போக்கு வளர்ந்து வருகிறது.

இலங்கை அரசாங்கம் பிரச்சினைக்குத் தீர்வு காண முயல்கிறதா அல்லது பிரச்சினையை ஆழமாக்கப் போகிறதா என்ற கேள்வி இந்த இடத்தில் எழுவதைத் தவிர்க்க முடியவில்லை.

ஆனால், இதைவிட முக்கியமான ஒரு ஆபத்தையும், அரசாங்கம் உண்டுபண்ணி வருகிறது. அது தான், அப்பாவிகளான, நாட்டின் கிராமங்கள் தோறும் வசிக்கின்ற ஏழைச் சிங்கள மக்களின் வேலையில்லாப் பிரச்சினையை, வறுமையை சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு, யுத்தத்துடன் நேரடிச் சம்பந்தமற்று இருக்கும் அவர்களை அதை நோக்கி இழுத்து வருவதாகும்.

இலங்கையின் வடக்கு கிழக்குத் தவிர்ந்த அல்லது வடக்கு கிழக்கின் எல்லைப்புறங்கள் தவிர்ந்த பல்லாயிரம் கிராமங்களில் வசிக்கும் அப்பாவி சிங்கள இளைஞர்கள், "தேசபக்த" உணர்வு ஊட்டப்பட்டு யுத்தமுனைக்குக் கொண்டுவரப்படுகின்றார்கள். யுத்தம் ஏன் நடக்கிறது என்பதோ, அதன் பின்னணி அரசியல் தார்ப்பரியம் பற்றிய தெளிவோ இல்லாத பல இளைஞர்கள் யுத்த முனைக்குக் கூட்டி வரப்படுகிறார்கள்.

ஒரு புறத்தில், இது இளைஞர்களை அநியாயமான ஒரு யுத்தத்திற்குப், பலியாக்குவதுடன் இன்னொரு புறத்தில், இன முரண்பாட்டை மேலும் மேலும் கூர்மையுறச் செய்வதாகவும் அமைகிறது.

இப்போதெல்லாம் யுத்தத்தில் உயிரிழந்த ஒரு இராணுவத்தினராவது இல்லாத ஊர் இல்லை என்ற நிலை உருவாகி வருகிறது. இது தீர்க்கமுடியாத பகையையும் வைராக்கியத்தையும் இனங்களுக்கிடையே வளர்க்கும் ஒன்றாக உருவாகி வருகிறது.

இந்தப் போக்கு இனங்களுக்கிடையே நல்லுறவை என்றென்றைக்குமாக இல்லாத ஒன்றாக்கி விடும் ஆபத்துக்குக் கொண்டு போய் விட்டுவிடும் என்பதை யாரும் கவனித்ததாகத் தெரியவில்லை.

ஆனால், அமைதியையும் சமாதானத்தையும், அரசியல் தீர்வையும் நாடுபவர்களுக்கு இது ஒரு முக்கியமான விடயமாகும்.

நாட்டு யுத்தத்திற்கு அடிப்படையான அரசியல் காரணங்களை நீக்க முயற்சி எடுப்பதை விட, அக்காரணங்களின் காரணமாக எழும் வெளிப்பாடுகளிலேயே சகலரதும் கவனம் குவிக்கப்பட்டிருக்கின்றது.

இது கல்யாணச் சந்தையில் மாப்பிள்ளையை மறந்த கதையாகப் போய், நாட்டை வெறும் சவக்காடாக்கி விடப் போகிறது என்பதைச் சொல்லி வைக்க வேண்டும்.

ஆனாலும் ஒரு நம்பிக்கை. சிங்கள மக்களை முன்பு போல ஏமாற்றி அரசியலுக்குள் இழுத்துவிடுவது சாத்தியமில்லை என்பது ஓரளவுக்கு தெளிவாகி வருகிறது. யுத்தத்தை முன்நிறுத்தி அரசாங்கம் செயற்படுவது குறித்து ஆங்காங்கே கேள்விகள் எழுப்பப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதையும் நாம் குறிப்பிட்டுச் சொல்வது அவசியமாகும்.

எந்த யுத்தம் அவசியமற்ற ஒன்று என்று அரசாங்கத்தால் சொல்லப்படுகிறதோ, அந்த யுத்தத்திற்காக ஏன் எமது இளம் சந்ததியைப் பலியிட வேண்டும் என்ற குரல் கொஞ்சம் கொஞ்சமாக தெற்கில் எழுந்து வருகிறது. யுத்தத்தை விரும்பாமல் ஓடிப் போனவர்களை திரும்பப் பிடித்து இழுத்து வந்து இராணுவத்தில் சேருமாறு கட்டாயப்படுத்துவது தவறு என்று அரசாங்கத்தரப்பு எம்பியான வாசுதேவ கூடத் தெரிவிக்கிறார்.

அரசாங்கம் இது பற்றி சிந்திக்கப் போவது எப்போது?

○

### திருமலை புதிய சந்தை :

## தன் வினை தன்னைச் சுடும்

திருகோணமலை நகரசபைச் சந்தை விவகாரம் தற்போது புதிய பரிணாமத்தைப் பெற்றுள்ளது. புதிய சந்தையைத் திறந்து விட வேண்டும் என்ற நகரசபைத் தலைவர் பெ. சூரியமூர்த்தியின் உத்வேகத்துக்கு நகராட்சிமன்ற உறுப்பினர்களும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சித் திருகோணமலைக் கிளையினரும் பேதங்களை மறந்து உறு துணையாக நிற்கமுன்வந்தும் சந்தைத் திறப்பு எட்டாத விசயமாகவே தென்படுகிறது.

பழைய பொதுச்சந்தை ''சிங்கள மார்க்கட்டு'' என்பது சிங்கள வியாபாரிகளாலும் பாதுகாப்புத் தரப்பாலும் இனவெறி அரசியல்வாதிகளாலும் உறுதிப்படுத்தப்பட்டதையடுத்து புதிய சந்தையொன்றை அமைக்க வேண்டும் என்ற எண்ணம் நகராட்சி மன்றத்துக்கு எழுந்தது. இதன் விளைவாக 27.02.97ல் அடிக்கல் நாட்டப்பட்டு அறுபது லட்சம் ரூபா செலவில் தந்தை செல்வா வீதியில் அமைக்கப்பட்ட புதிய சந்தை 14.09.97ல் சமயாசார நிகழ்ச்சிகளுடன் திறப்பு விழாவை எதிர்நோக்கிய போது தான் புதிய சந்தை திறக்கும் அதிகாரம் கூட நகரசபைக்குக் கிடையாது என்பது தெரியவந்தது.

தனிப்பட்ட வியாபாரியொருவரின் உந்துதலால் ஏற்பாடு செய்யப்பட்ட ''புதிய சந்தையைத் திறக்காதே'' என்ற சிங்கள வியாபாரிகள் ஊர்வலம், ஜனநாயக நடவடிக்கையாகப் பாதுகாப்புத்தரப்பால் சோடிக்கப்பட்டு, புதிய சந்தை திறந்தால் திருகோணமலையின் அமைதி கெட்டுவிடும் என நகரசபைத் தலைவருக்கு ஜனநாயக எச்சரிக்கை விடப்பட்டது. சந்தைத் திறப்பு கைவிடப்பட்டது.

6.11.97ல் பாராளுமன்றத்தில் இவ்விடயங்கள் பற்றி வன்னி மாவட்டப் பா.உ. வை. பாலச்சந்திரன் எடுத்துரைத்தபோது ''ஐயகோ இஃதென்ன ஜனநாயக மீறல். எனக்குத் தெரியாமற் போயிற்றே'' என்ற தோரணையில் கூப்பாடு போட்ட கௌரவ அமைச்சர் அலவி மௌலானா ''இருவாரங்களில் சந்தையைத் திறக்க ஏற்பாடு செய்கிறேன்'' என்று உறுதி மொழி கொடுத்தார்.

அமைச்சரின் உறுதிமொழி மகத்தானது என்ற அசட்டு நம்பிக்கையில் நகரசபைத் தலைவர் டிசம்பர் 12ல் நான்கு வாரங்கள் கழித்து - புதிய சந்தையில் கடையொன்றைத் திறக்க முற்பட 'விட்டேனா பார் என்று பொலிசாரும் வந்து சேர' ஜனநாயகம் மிகப்பவித்தரமாக குழிவெட்டிப் புதைக்கப்பட்டது. சந்தை முயற்சி மீண்டும் தோல்வி.

இதற்கிடையில் சூரியமூர்த்தி மேல் ஊழல் குற்றச்சாட்டுகள் நகரசபை உறுப்பினர்களாலேயே சுமத்தப்பட்டன. சந்தைக்கட்டடத்தில் பண மோசடி என்று கூறப்பட்டது. கொடுப்பனவுத் தீர்மானங்கள் தோற்கடிக்கப்பட்டன. நகரசபைத் தலைவர் மீதான குற்றச்சாட்டுகள் மூவரடங்கிய குழுவால் விசாரிக்கப்பட்டு ஆளுநரிடம் அறிக்கை கையளிக்கப்பட்டிருக்கிறது.

இந்த நிலையில் சந்தை திறப்புப் போராட்டம் நகரசபை உறுப்பினர்களாலேயே முன்வைக்கப்பட்டுள்ளது. 20.05.98ல் வெகுஜன உண்ணாவிரதப் போராட்டமொன்றை நடத்தத் திட்டமிடப்பட்டது. நகரசபைத் தலைவரும் ஏன் இந்த உண்ணாவிரதம் என்ற தலைப்பில் நான்கு பக்க விளக்கமளித்து துண்டுப்பிரசுரங்களை வெளியிட்டு ஆதரவு கோரினார்.

எனினும், பொது மக்களின் ஆதரவு துளி கூட இன்றி ஒரு நாள் உண்ணாவிரதப்போராட்டம் நகரசபைக்கு முன்னால் தெருவோரத்தில் நகரசபை உறுப்பினர்கள் நலன் விரும்பிகள் என்று பத்து பேருடன் நடக்க வேண்டியதாயிற்று. இவ் உண்ணாவிரதப் போராட்டத்தையடுத்து வெகுண்டெழுந்த வியாபாரியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளர் தயானந்த ஜயவீரவின் தீவிர ஒத்துழைப்புடன் சந்தை வியாபாரிகளை ஒன்று திரட்டி 22.5.98ல் திடீரென குழப்படி ஊர்வலமொன்றை நடத்தியிருக்கின்றார். நகரசபைத் தலைவர், உறுப்பினர்கள் ஆகியோரின் பெயர் குறிப்பிட்டு கீழ்த்தரமான இனவாதச் சுலோகங்களைக் கூவிக் கொண்டே நகரசபை வரை சென்ற இவர்கள், நகரசபைத் தலைவர் இல்லாததால், கொண்டு சென்ற சுலோக அட்டைகளை மரங்களில் கட்டிவிட்டுத் தூஷித்தபடியே திரும்பியிருக்கிறார்கள்.

உறுப்பினர்களின் அடையாள உண்ணாவிரதத்தையடுத்துக் கொடுக்கப்பட்ட மகஜர் மேலிடங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டதாக நகரசபைத் தலைவர் கூறுகிறார், பலரிடமிருந்து பதில் இல்லை. உள்ளூராட்சி மன்ற ஆணையாளரிடமிருந்து பதில் வந்தது. இராணுவத்தினருடன் பேசி முடிவு செய்யுங்கள் என்று. இப்போது நகரசபைத் தலைவர் ''சந்தையைத் திறக்கலாமா இல்லையா என்பது பற்றிப் பேச மே 29ம் திகதி எனக்கு நேரம் ஒதுக்கித் தருவீர்களா?'' என்று பிரிகேடியரிடம் விண்ணப்பித்திருக்கிறார்.

தெரிவு செய்யப்பட்ட நகரசபையின் ஆளுங்கட்சியைத் சேர்ந்தோர் ஆரம்பகாலந் தொட்டு இன்று வரை ஒரு நாளாவது ஒற்றுமையாக இயங்கியதில்லை. தலைவர் ஒரு புறம், உறுப்பினர்கள் மறுபுறம் பத்திரிகை அறிக்கைகள் பதவிக் கவிழ்ப்புகள் சர்வ சாதாரணம்.

நல்ல நிர்வாகத்தைத் தருவார்கள் என்று மக்கள் இவர்களை நம்பினார்கள்; வாக்களித்தார்கள். ஆனால் இவர்களே மக்களைக் கைவிட்டார்கள். இன்று மக்கள் போராடத்திரண்டு வருவார்கள் என்று இவர்கள் கனவு கண்டார்கள். நியாயமான போராட்டத்தில் கூட மக்கள் இவர்களை நம்பத் தயங்கினார்கள். தருணம் பார்த்துக் கைவிட்டு விட்டார்கள்.

தன் வினை தன்னைச் சுருகிறது.

விவேகி

○

## படை நடவடிக்கை!

முத்துத்தம்பி பிரதாப்(19) என்ற பெண்மணி இன்று (மே 22) அதிகாலை இராணுவத்தால்கைது செய்யப்பட்டுள்ளார். சங்கானையிலுள்ள அவரது வீட்டில் வைத்தே இராணுவத்தினர் அவரைக்கைது செய்துள்ளனர். அவரைக் கைது செய்து கொண்டு போக முயன்ற இராணுவத்தினரைத் தடுத்த அவரது தந்தையையும் இராணுவத்தினர் தாக்கியுள்ளனர்.

புலிக்குச் சாப்பாடு கொடுத்ததாகக் கூறியே இராணுவத்தினர் தமது மகளைக் கைதுசெய்ததாகவும், தாம் அவ்வாறு எந்தப் புலிகளுக்கும் உணவு கொடுக்கவில்லை என்றும் உடுத்திருந்த உடையை மாற்றக் கூடப்படையினர் அனுமதிக்கவில்லை என்றும் தந்தை குறிப்பிடுகிறார்.

தமது மகளை மீட்டுத் தரும்படி அவர் புளொட் முகாமில் முறையிட்டுள்ளார்.

இதேவேளை இன்று (மே22) காலை பதினொன்றேகால் மணியளவில் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரிக்கு அருகில் நடந்த கிரனைட் குண்டு வீச்சில் இரண்டு இராணுவத்தினர் காயமடைந்தனர். அங்கிருந்த இராணுவத்தினரின் சென்றியை நோக்கியே இக்குண்டு வீசப்பட்டுள்ளது.

இதுதவிர இன்று நாச்சிமார் கோவிலடி, பிரம்படிச் சந்தி ஆகிய பகுதிகள் சுற்றிவளைக்கப்பட்டு கடுமையான தேடுதல்கள் மேற்கொள்ளப்பட்டன. வடமராட்சிப் பகுதியிலும்தற்போது சுற்றிவளைத்து தேடும் நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

### "டை(ட்)டானிக்"

*1998 மே 31 ஞாயிற்றுக்கிழமை*
காலை 10.00 - மாலை 3.00 (இரு காட்சிகள்)
இடம் : மகாவலி கேந்திரநிலையம்
(புதிய நகர மண்டபத்துக்கு அருகாமையில்)
கலாநிதி ஆனந்தக் குமாரசுவாமி வழி
கொழும்பு 07
*ஏற்பாடு : "விபவி" மாற்றுக் கலாச்சார மையம்*
(அனுமதி இலவசம்)

### "விமர்சனங்களின் மீதான பார்வை"

*கருத்தாடல்*
30. 05. 1998 சனிக்கிழமை காலை 09.00 மணி
இடம் : பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனம்
இல. 58 தர்மாராம வீதி
வெள்ளவத்த
கொழும்பு 06

** உலக மாறுதல்களும் இலக்கிய விமரிசனமும்*
- பேராசிரியர் கா. சிவத்தம்பி -

** இன்று தமிழில் விமரிசனம்*
- தெ. மதுசூதனன் -

** வாசகன் தளத்தில் - விமரிசனம்*
- க. சண்முகலிங்கம் -

*ஏற்பாடு : "விப்வி" மாற்றுக் கலாச்சார மையம்*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

வெளியிடுவோர் : ச. பாலகிருஷ்ணன். இல. 18/02. அலோ சாலை. கொழும்பு 03. அச்சுப் பதிப்பு : பிறின்ற் இன். இல. 07. கெகுல இடம் சிறில் உயன. இரத்மலானை. 26.05.1998